# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் : மு. குலாம் முஹம்மது

Volume - 9
Issue -5

மே 2016 - ரஜப்- ஷஅபான் 1437

விலை ரூ. 20






## 2006 செப்டம்பர் 8
## மலேகான் குண்டுவெடிப்பு

# 10 ஆண்டுகளுக்கு பின் அப்பாவி முஸ்லிம்கள் விடுதலை!



# பா.ஜ.க. ஊழல்கள்! & சவப் பெட்டி ஊழல்

- பாசிஸ்ட்டுகளின் பட்ஜெட்!
- தமிழக மீனவர்களும் பிஜேபி-யின் துரோகமும்

# வைகறை வெளிச்சம்

மே 2016 - ரஜப் - ஷஅபான் - 1437

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது**

துணை ஆசிரியர்
**கே.எம். இல்யாஸ் ரியாஜி**

**தனி இதழ் : ரூ. 20/-**

**ஆண்டுச் சந்தா:**

**உள்நாடு : ரூ. 240/-**

**வெளிநாடு : ரூ. 1500/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு
VAIGARAI VELICHAM
52/1, Mannady Street,
Room No.7, Mannady,
Chennai - 600 001.
Cell.: 8148129887

E-mail: darultrust@yahoo.com
Web : www.darulislam.in



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of chennai courts.


بسم الله الرحمن الرحيم


2006 செப்டம்பர் 8 மலேகான் குண்டுவெடிப்பு
10 ஆண்டுகளுக்கு பின் அப்பாவி முஸ்லிம்கள் விடுதலை! . 6

பா.ஜ.க. மறைத்து வைத்த ஊழல்கள்! ...................... 13

பாசிஸ்ட்டுகளின் பட்ஜெட்! ..................................... 47

தமிழக மீனவர்களும் பிஜேபி-யின் துரோகமும் ............ 52

பாம்பு கடி ................................................... 54

கற்காலம் - ஒரு வரலாற்றுப் பொய்........................ 56

இனப்படுகொலை புகழ் நரேந்திர மோடிக்கு
சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருது! ...................... 59

கண்ணைய்யா குமாரின் நாக்குக்கு 5 லட்சம்!
உயிருக்கு 11 லட்சம்! பாசிசத்தின் பயங்கரம்! ..... 61

முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? ..... 63


“. . . அவர்களுக்கு நெருப்பிலிருந்து ஆடைகள் தயாரிக்கப்படும் கொதிக்கும் நீர் அவர்களின் தலையில் ஊற்றப்படும். அதைக் கொண்டு அவர்களின் வயிற்றிலுள்ளவையும், தோல்களும் உருக்கப்படும். இன்னும் அவர்களுக்கு இரும்பாலான தண்டங்களும் உண்டு. (இந்த) துக்கத்தினால் அவர்கள் நரகத்தை விட்டு வெளியேற விரும்பும்போதெல்லாம் அதனுள்ளே சுடர்விட்டு எரியும் வேதனையை சுவையுங்கள் (என்றுசொல்லப்படும்)”

**(குர்ஆன் :22:19-22)**

http:/www.facebook.com / vaigaraivelichammgm

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

# சுட்டெரிக்கும் செஞ்சுடரிலிருந்து. . . ?

1910ஆம் ஆண்டுக்குபின் அதிக அளவில் நெருப்பாய் சுடுகிறது வெயில்! தாங்க முடியவில்லை. அக்கினிப் பிழம்பாய் கொதிக்கின்றது. பூமியில் கால் வைத்து நடக்க இயலவில்லை. 44.4 செல்சியஸ் சென்னையில் வேலூரிலோ 45 டிகிரி செல்ஸியஸ். வீட்டை விட்டு வெளியே வராதீர்கள். அனல் காற்று அதாவது, ஈரப்பதமற்றக் காற்று வீசும் என்றெல்லாம் எச்சரிக்கைகள்.

இந்த நெருப்பாற்றில் நீந்திட இயலாமல் தவிக்கின்றனர் மக்கள். உப்பரி கைகளாய் வீடுகட்டி வாழ்வோர் கூட உஷ்ணம் தாங்க முடியாமல் ஓடுகின்றார்கள். குளிர்தரும் பூமிகளை, மலைக் குன்றுகளைத் தேடி.

குளிர்சாதனப் பெட்டிகளுக்கு கும்மாளமாய் விற்பனை. ஆனால் வாழ்வில் வக்கற்று. வகையற்று நிற்போர் ஆங்காங்கே தென்படும் நிழலைத்தேடி ஓடுகின்றார்கள். இல்லங்களிலேயே இருக்கவியலாத நிலை. கானல் நீரே அவர்களுக்கு வாழ்க்கை.

கடற்கரையில்கூட, காற்றாட மாட்டேன் என்கிறது. அப்பப்பா இந்தக் கோடை வெயில் எப்போது தாழும், சற்று நிம்மதிப் பெருமூச்சு விடலாம் என்று நாட்களை விழிபிதுங்க ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். நெருப்பால் சுட்டால் எப்படி இருக்கும் என்பதை வருடம் தவறாமல் உணர்ந்து வருகிறோம்.

நான்கு மாதங்கள் நெருப்பின் நாக்குகள் தொட்டுக் கொண்டிருக்கின்றன. அதிலும் மூன்று மாதங்கள் தாம் உக்கிரம் நிறைந்த நாட்கள். அதற்கே இப்படித் துடியாய் துடிக்கிறோம். இதைவிட, உக்கிரம் நிறைந்த சூடு! அதுவும் நிரந்தரமாய் சுட்டெரிக்கும் என்றால் நாம் என்ன பாடுபடுவோம். அந்த நெருப்பொன்று நம்மைத் தீண்டவிருக்கின்றது. அதைத் தடுக்க நாமே வழிகாண வேண்டும்.

மனிதனாய் பிறந்த நாம் ஒரு நாள் மரணத்தைச் சந்தித்தே ஆக வேண்டும். அதே போல் இந்த உலகம் ஒரு நாள் ஒரு முடிவுக்கு வரும். பின்னர் ஒரு நாள் நாம் அனைவரும் உயிர் கொடுத்து எழுப்பப்படுவோம். அந்த நாளில் இந்த உலகில் நாம் செய்த நன்மைகள், தீமைகள் இவற்றின் அடிப்படையில் நாம் கணிக்கப்படுவோம்.

நாம் செய்த நன்மைகள் விஞ்சிடுமேயானால் நமக்கு நல்ல சொர்க்கம் கிடைக்கும். நாம் செய்த தீமைகள் விஞ்சிடுமேயானால் நம்மை சதா நெருப்பின் நாக்குகள் தீண்டிக் கொண்டிருக்கும் நரகத்தில் வீசப்படுவோம். அங்கு நாம் நிரந்தரமாக குடியிருக்க வேண்டியது வரலாம். அங்கு வாழ்வுமில்லை, மரணமுமில்லை.

இந்த நன்மைத் தீமைகளைக் கணக்குப் பார்த்திடும்போது நமது தில்லுமுல்லுகள் எதுவும் அங்கே எடுபட மாட்டா. நாம் இங்கே ஆட்சியாளர்கள் கண்களிலிருந்தும் இதர கண்காணிப்பாளர்களின் கண்களிலிருந்தும் மறைக்கும் உண்மைகள் அங்கே பட்டவர்த்தனமாக அந்த இறைவனின் பார்வைக்கு வந்துவிடும். அங்கே நாம் செய்த அணு அளவு நன்மையுமோ அணு அளவு தீமையுமோ விட்டுப்போகாது.

இவையெல்லாம்தான் எதார்த்தம். இவை நடந்தே தீரும். நன்மைகளைச் செய்தவர்கள் சொர்க்கம் செல்வார்கள் என்பது எப்படி உண்மையோ அதைபோல் தீமைகளைச் செய்தவர்கள் சுடு தழலில் வீழ்ந்து தவிப்பார்கள். நிரந்தரமாக நம்மை வாட்டிட இருக்கும் அந்த நரக நெருப்பிலிருந்து நம்மைக் காப்பாற்றிட இருக்கும் ஒரே வழி நாமனைவரும் படைத்த இறைவனை ஏற்றுக் கொள்வதும், அவன் காட்டிய வழியில் நமது வாழ்வை அமைத்துக் கொள்வதுமேயாகும்.

இது போன்ற செய்திகளை நாம் எடுத்துக் காட்டும்போது நம்மவர்களுக்கு சில ஐயங்கள் எழுதுவதுண்டு. மரணம் என்பது என்னவோ உண்மைதான். ஆனால் நாமெல்லாம் ஒரு நாள் எழுப்பப்படுவோம், விசாரணைகளுக்குள்ளாக்கப்படுவோம் என்பவையெல்லாம் எந்த அளவுக்கு உண்மை? இந்த ஐயங்கள் எதுவும் புதியதல்ல. இவற்றிற்கு இறைவனின் இறுதி வேதம் அன்றே பதில் சொல்லிவிட்டது.

இறைவன் தன் திருமறையில் கூறுகின்றான்.

*"இறந்து மண்ணாகவும், எலும்பாகவும் நாங்கள் ஆகிவிட்டாலும், மெய்யாகவே (நாங்கள் மீண்டும் உயிர்பித்து) எழுப்பப்படுவோமா? (என்றும் கேட்கின்றனர்). அவ்வாறே முந்தைய நம் தந்தையர்களுமா (எழுப்பப்படுவார்கள்) என்றும் கேட்கின்றனர். ஆம் (உங்கள் செயல்களின் காரணமாக) நீங்கள் சிறுமையடைந்தவர்களாக எழுப்பப்படுவீர்கள்"என்று நபியே! நீர் கூறும்.*

*ஒரே சப்தம் தாம் உடனேயே அவர்கள் திடுக்கிட்டு எழுந்து பார்ப்பார்கள்.*

*(அவ்வேளை) எங்களுடைய கேடே! இது கூலி கொடுக்கும் நாளாயிற்றே என்றும் அவர்கள் கூறுவார்கள்.*

*நீங்கள் பொய்ப்பிக்க முற்பட்டுக் கொண்டிருந்தீர்களே அந்தத் தீர்ப்பு நாள் இதுதான் என்று அவர்களுக்குக் கூறப்படும்."*

**(அல்குர்ஆன் 37:16-21)**

இதையே இறைவன் மீண்டும் தன் இறுதி வழிகாட்டுதலில் இப்படி அறிவுறுத்துகிறான்.

*"அந்நாளில் அவர்கள் வெளிப்பட்டு வருவார்கள். அவர்களுடைய எந்த விஷயமும் அல்லாஹ்வுக்கு மறைந்ததாக இருக்காது. அந்நாளில் ஆட்சி யாருடையதாக இருக்கும். ஏகனாகிய அடக்கியாளும் வல்லமைமிக்க அல்லாஹ்வுக்கேயாகும்.*

*அந்நாளில் ஒவ்வோர் ஆத்மாவும் அது சம்பாதித்ததற்கு கூலி கொடுக்கப்படும். அந்நாளில் எந்த அநியாயமும் இல்லை. நிச்சயமாக அல்லாஹ் கேள்வி கணக்கு கேட்பதில் மிகவும் தீவிரமானவன்.*

*(நபியே) அண்மையில் வரும் கியாம நாளைப் பற்றி அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக இதயங்கள் விசனத்தால் நிரம்பி தொண்டைக் குழிகளுக்கு வரும் (அவ்) வேளையில் அநியாயக்காரர்களுக்கு இரக்கப்படும் நண்பனோ, அல்லது ஏற்றுக் கொள்ளப்படும் சிபாரிசு செய்பவனோ இருக்கமாட்டான்.*

*கண்கள் செய்யும் மோசத்தையும் உள்ளங்கள் மறைத்து வைப்பதையும், அவன் நன்கு அறிவான்.*

*மேலும் அல்லாஹ் உண்மையைக் கொண்டே தீர்ப்பளிப்பான். அன்றியும் அவனையன்றி அவர்கள் (வேறு) எவர்களை, அழைத்துப் பிரார்த்திக்கின்றார்களோ, அவர்கள் யாதொரு விஷயத்தைப் பற்றியும் தீர்ப்பு செய்ய மாட்டார்கள். நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) செவியேற்பவனாகவும், தீர்க்கமாகப் பார்ப்பவனாகவும் இருக்கின்றான்.*

**(குர்ஆன்: 40 : 16-20)**

இறுதி நாளும் தீர்ப்பும் உண்மையென ஆகிவிட்டபின், அங்கே நல்ல தீர்ப்பைப் பெற முடியாதவர்கள் அல்லது இந்த உலகில் நல்லதையே இலக்காகக் கொண்டு நல்லதை செய்து வாழ முடியாதவர்கள் அங்கே சுட்டெரிக்கும் செஞ்சுடரை சந்திக்க வேண்டியது வரும்.

*"... அவர்களுக்கு நெருப்பிலிருந்து ஆடைகள் தயாரிக்கப்படும் கொதிக்கும் நீர் அவர்களின் தலையில் ஊற்றப்படும். அதைக் கொண்டு அவர்களின் வயிற்றிலுள்ளவையும், தோல்களும் உருக்கப்படும். இன்னும் அவர்களுக்கு இரும்பாலான தண்டங்களும் உண்டு. (இந்த) துக்கத்தினால் அவர்கள் நரகத்தை விட்டு வெளியேற விரும்பும்போதெல்லாம் அதனுள்ளே சுடர்விட்டு எரியும் வேதனையை சுவையுங்கள் (என்றுசொல்லப்படும்)"*

**(குர்ஆன் :22:19-22)**

இந்தச் செஞ்சுடரிலிருந்து விடுபடுவோம் அங்கே சுகம் பெற இங்கே நல்லதைச் செய்வோம்.

*எவர்கள் விசுவாசங்கொண்டு நற்கருமங்களைச் செய்கிறார்களோ அவர்களை, நிச்சயமாக அல்லாஹ் சுவனபதிகளில் புகுத்துகிறான். அவற்றில் நீரருவிகள் சதா ஓடிக்கொண்டே இருக்கும். (பின்னும்) பொற் கடகமும், முத்து ஆபரணமும் (விருதுகளாக) அவர்களுக்கு அணிவிக்கப்படும். அவர்களுடைய ஆடைகளோ, (மிருதுவான) பட்டாலானதாக இருக்கும்.*

**(குர்ஆன் :22:23)**

சதாரணமாக மூன்று மாதங்கள் மட்டுமே கொளுத்தும் வெய்யிலுக்காக ஆயிரம் ஏற்பாடுகளைச் செய்யும் நாம். அந்த நிரந்தர வெம்மையிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள ஆவன செய்வோம். அவர் எச்சரிக்கையை ஏற்போம்.

# 2006 செப்டம்பர் 8 மலேகான் குண்டுவெடிப்பு

# 10 ஆண்டுகளுக்கு பின் அப்பாவி முஸ்லிம்கள் விடுதலை!




**வாசகர்கள் கவனத்திற்கு,**

*மலேகான் என்பது, மராட்டிய மாநிலத்திலுள்ள ஓர் முக்கிய இடம். இது மராட்டிய மாநிலம் நாசிக் மாவட்டத்தில் வருகின்றது. அது முஸ்லிம்கள் அதிகமாக வாழும் இடம். நெசவு தொழிலே அவர்களின் முக்கிய தொழில். பல தலைமுறைகளுக்கு முன் அவர்கள் டெல்லியில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.*

*1857இல் ஆங்கிலேயர்களுக்கெதிரான இந்தியாவின் விடுதலைப் போரில் கலந்து கொண்டதற்காக அவர்களை லாரிகளில் ஏற்றி எந்த அடிப்படை வசதியுமில்லாத மாலேகானில் கொண்டு வந்து விட்டுவிட்டார்கள். அன்று ஆங்கில அரசாலும், அதன் பின் வந்த இந்திய அரசுகளாலும் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்ட மக்கள். இதனால் ஏழைகளாகவே வாழ்ந்து கொண்டிக்கின்றார்கள்.*

*இங்கே தான், இந்துத்துவ தீவிரவாதிகள் இரண்டு முறை குண்டுகளை வெடித்தார்கள்.*

*முதலாவதாக, 2006 செப்டம்பர் 8 ஆம் நாள் வெடித்தக் குண்டில் 37 முஸ்லிம்கள் இறந்தார்கள். 350 பேர் காயம் பட்டார்கள். அன்று வெள்ளிக்கிழமை ஜும்மா.*

*இரண்டாவது 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 ஆம் நாள் குண்டுகள் பல வெடித்தன. இதுவும் வெள்ளிக்கிழமை அத்தோடு சபேபராத் நாள். அதனால் ஏழை முஸ்லிம்கள் அதிகமாகக் குழுமி இருந்தார்கள். அதனால் நூற்றுக்கணக்கானோர் மாண்டார்கள்.*

இரண்டு குண்டு வெடிப்புகளிலும் முதலில் கைது செய்யப்பட்டவர்கள் முஸ்லிம்கள் தாம்.

இப்போது தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பது, அதாவது 25.6.2016 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு முதலாவதாக 2006 ஆண்டு செப்டம்பர் 8-இல் வெடித்த குண்டுகள் வழக்கில்தாம்.

அதனை குறித்தே நாம் இந்த அட்டைப்பட கட்டுரையில் விவாதித்துள்ளோம்.

இதில் மொத்தம் 13 முஸ்லிம்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது. அதில் 4 பேர் தலைமறைவாக உள்ளனர். இப்போது ஒன்பது பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் விசாரணை காலத்திலேயே இறந்து போய் விட்டார். இதில் ஒருவர் 2003 இல் நடந்த குண்டுவெடிப்பிலும் குற்றம் சுமத்தப்பட்டார். 2003 குண்டு வெடிப்பும் இந்துத்துவ தீவிரவாதிகளின் கைவண்ணந்தான். ஆனால் அவருக்கு அந்த வழக்கில் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இப்போது விடுதலையானவர்களில் இரண்டு பேர் டாக்டர்கள். அவர்களின் பெயர்கள், 1. டாக்டர் சல்மான் ஃபார்சி அப்துல், 2. டாக்டர் ஃபாரூக் இக்பால்.

தலைமறைவாகிவிட்டார்கள் எனக் கருதப்படும் 4பேரும், காவல்துறையின் கட்டுப்பாட்டில் இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் சிலரை காவல்துறையினர் சுட்டுக் கொலை செய்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இதனால் இந்த நிகழ்வால் அழிக்கப்பட்டவர்கள் 13 பேர், குடும்பங்கள் பலப்பல.

இதுபோன்ற பல குண்டுவெடிப்புகள் பற்றிய விவங்களைக் கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூலில் படிக்கலாம். இந்த நூலின் தமிழ் வடிவம் பெற்றிட தொடர்புக்கு 8148129887.

**எம்.ஜி.எம்.**



இந்தத் தீர்ப்பில் நாம் கூர்ந்து கவனிக்க வேண்டியது என்னவெனில், இந்தக் குண்டு வெடிப்பில் சம்மந்தப்பட்ட சுமார் 20 இந்துத் தீவிரவாதிகள் தப்பித்தே விட்டார்கள். அவர்கள் சட்டத்தின் பிடியில் ஒரு நாள் கூட சிக்கவில்லை.

9 முஸ்லிம் இளைஞர்களின் வாழ்க்கையும் அவர்களைச் சார்ந்து நின்ற குடும்பங்களின் வாழ்க்கையும், சின்னபின்ன மாக்கப்பட்ட பின் விடுதலையாகி இருக்கின்றார்கள் இந்த அப்பாவிகள். ஆனால் குண்டு வெடிப்பை நிகழ்த்தியவர்கள் நிரந்தரமாகத் தப்பித்தே விட்டார்காள். (இப்போது இந்துத் தீவிரவாதிகள் 4 பேரை கண்துடைப்பிற்காக ஒப்படைத்திருக் கின்றார்கள். இவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.) நடப்பது இந்துத்துவா ஆட்சி. அதனால் அவர்கள் தண்டிக்கப்படவே மாட்டார்கள்.

ஏனெனில் இந்தக் குண்டு வெடிப்புகள் நடந்தவுடன், மராட்டிய மாநிலத்தின் காவல் துறைதான் இந்த வழக்கு விசாரணையைக் கையில் எடுத்தது. எடுத்தவுடன் ஓர் உண்மையைக் கண்டுபிடித்தது. அதில், எந்த குண்டு வெடிப்பிலும் நடக்காத ஒன்று இந்த 2006 செப்டம்பர் 8 மாலேகான் குண்டுவெடிப்பில் நடந்திருக்கின்றது. அது, குண்டுகளை வெடிக்க செய்ய சைக்கிள்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அதுவும் குறிப்பாக மூன்று (சைக்கிள்கள்) மிதிவண்டிகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது தான்.

உடனேயே சைக்கிள்கள் வாங்கப்பட்ட கடைகளை நோக்கி விரைந்தார்கள். சைக்கிள்களை வாங்கியது யார் என்பதைக் கண்டு கொண்டார்கள். சைக்கிள்களை வாங்கியவர்கள் பஜ்ரங்தளம், என்ற இந்து தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர்கள் என்பதைக் கண்டு பிடித்தார்கள்.

இந்த உண்மை ஊர்ஜிதப்படுத்தப் பட்டவுடன் அவர்கள் 2004 ஆம் ஆண்டு முதல் 2006 ஆண்டு வரை நடந்த குண்டு வெடிப்புகளைப் பற்றிய தகவல்களை ஆய்வு செய்தார்கள்.

## நந்தேத் 2006 குண்டுவெடிப்பு

இந்த நந்தேத் என்னுமிடமும், மராட்டிய மாநிலத்தில் உள்ள ஓர் இடந்தான். இங்கே ஏப்பிரல் 5ஆம் நாள் 2006 ஆம் ஆண்டு லக்ஷமன் குண்டைய்யா ராஜ்கொண்டுவார் என்ற இந்துத்துவ தீவிரவாதியின் வீட்டில், சில குண்டுகள் வெடித்தன. இந்தக் குண்டு வெடிப்புகளில் லக்ஷமண் குண்டைய்யா ராஜ் கொண்டுவாரின் மகன் நரேஷ் கொண்டுவார் என்பவரும், ஹிமான்சு பான்சி என்பவரும் இறந்து போய்விட்டார்கள். இவர்கள் இரண்டு பேரும் பஜ்ரங்தளம் என்ற இந்துத்துவ தீவிரவாதி அமைப்பின் உறுப்பினர்கள். மேலும் இரண்டு பேர் காயம்பட்டார்கள்.

குண்டுகள் வெடிக்கும் போது அவர்கள் குண்டுகளைச் செய்து கொண்டிருந்தார்கள். இதில் இவர்களோடு இன்னும் இரண்டு பேர் காயம்பட்டார்கள். இவர்கள் குண்டுகளை எப்படிச் செய்வது என்பது குறித்தப் பயிற்சிகளைப் பெற்றிட வந்தவர்கள். இவர்களும் பஜ்ரங் தளம், ஆர்.எஸ்.எஸ். ஆகிய இந்துத்துவ தீவிரவாத அமைப்புகளைச் சார்ந்தவர்கள்.

இந்த நந்தேதிலுள்ள லக்ஷமண் குண்டையா ராஜ் கொண்டுவார் வீட்டில் செய்த குண்டுகளை வைத்துத்தான் இந்த பஜ்ரங்தளத்தைச் சார்ந்தவர்கள் பல மஸ்ஜித்களில் வெள்ளிக்கிழமை ஜூம்மா தொழுகையின் போது குண்டுகளை வெடித்தார்கள். வெள்ளிக்கிழமை ஜூம்மா தொழுகைக்கு வந்த ஆயிரக்கணக்கான முஸ்லிம்களைக் கொலை செய்தார்கள். இந்த வகையில் பின்வரும் மஸ்ஜித்களில் நடந்த குண்டு வெடிப்புகள் குறிப்பிடத்தக்கவை.

1. பார்பானி என்னுமிடத்திலுள்ள முஹம்மதியா மஸ்ஜித் இல் நவம்பர் திங்கள் 2003 ஆம் ஆண்டில் நடத்திய குண்டுவெடிப்பு.

2. ஜால்னா என்னுமிடத்திலுள்ள காதிரிய்யா மஸ்ஜித் இல் ஆகஸ்ட் திங்கள் 2004 இல் நடத்திய குண்டு வெடிப்பு.

3. பூர்ணா என்னுமிடத்திலுள்ள மீராஜூல் உலூம் என்ற மதரஸாவுக்கு அதாவது மார்க்க கல்விக் கூடத்திற்குச் சொந்தமான பள்ளிவாசலில் 2004 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் நடந்த குண்டு வெடிப்பு.

4. பார்பானி மாவட்டத்தின் தலைநகரில் உள்ள பூர்னாவில் வீற்றிருக்கும் மஸ்ஜித் இல் அதே 2004 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டில் நடந்த குண்டு வெடிப்புகள்.

இப்படிப் பல குண்டு வெடிப்புகளில் நந்தேலில் அதே லக்ஷ்மன் குண்டைய்யா ராஜ் கொண்டுவாரின் வீட்டில் பஜ்ரங்தள், ஆர்.எஸ்.எஸ்., தீவிரவாதிகளால் தயாரிக்கப் பட்ட குண்டுகளே பயன்படுத்தப்பட்டன என்பது கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இப்போது மாலேகானில் வெடித்த குண்டுகளிலும் அதே வகை வெடிபொருள் களுடன் அதே முறையைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருந்தன. இதை மாலேகான் செப்டம்பர் 8,2006 குண்டுவெடிப்பை முதன் முதலில் ஆய்வு செய்த மும்பையின் காவல்துறையினர் கண்டுபிடித்தனர்.

## சைக்கிள்

குண்டு வைக்க சைக்கிள் வாங்கியவர்கள் இந்துத்துவ தீவிரவாதிகள் தாம் என்பதாகவும் அவர்களின் மாதிரி வரைபடங்கள் (Sketches) தயாராகிக் கொண்டிருப்பதாகவும் காவல் துறை அறிவித்தது. இதனை மராட்டிய காவல்துறையின் நாசிக் பகுதி (இதில் தான் மலேகான் உட்பட்ட பகுதிகள் வருகின்றன) இன்ஸ்பெக்டர் ஜெனரல் (IGP) பி.கே. ஜெயின் என்பவர் பத்திரிகைகளுக்குச் சொன்னார், (Asian Age: September, 2006)

இதே காவல்துறை அதிகாரி பி.கே. ஜெயின் அவர்கள் அடுத்தக்கட்ட ஆதாரமாக குண்டு வெடிப்பிற்குப் பின்னும் முன்னும் பேசப்பட்ட தொலைபேசி அழைப்புகளை யும், ஆய்வுக்குட்படுத்தி விட்டதாகவும், அதிலும் காவல்துறையின் முதல் கண்டு பிடிப்புகளை ஊர்ஜிதம் செய்திடும் வகையில் பல சாட்சியங்கள் கிடைத்திருப்பதாகவும் அறிவித்தார்கள். (ஆதாரம் : "புடாரி: பூனா, 10 செப்டம்பர் 2006)

இவையெல்லாம் மராட்டிய காவல் துறையினர் உண்மையான குற்றவாளிகளை அதாவது இந்துத்துவ தீவிரவாதிகளைக் கைது செய்திட நெருங்கிவிட்டனர் என்ற உண்மையை ஊர்ஜிதப்படுத்தின.

## இந்துத்துவ தீவிரவாதிகளின் சதி

தாங்கள் செய்த தீவிரவாத செயல்கள் அம்பலமாகி விட்டன என்றவுடன் இந்துத்துவ தீவிரவாதிகள் விசாரணையை வேறுபக்கம் திருப்பிட முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

விஷ்வ ஹிந்து பரிஷத்- இன் அகில இந்திய பொதுச் செயலாளர் பிரவீன் தொகாடியா, அறிக்கைகளை விடத் தொடங்கினார். 'முஸ்லிம்கள் பெருவாரியாக வாழுகின்ற இடங்களில் குண்டுகள் வெடித்தால் உடனேயே அவை இந்து அமைப்புகள் தாம் என்று பொருள் அல்ல' என்றார்.

ஆனால் பிரவீன் தொகாடியாக்களின் சவடால்களுக்கு மராட்டியக் காவல்துறை கிஞ்சிற்றும் அசைந்து கொடுக்கவில்லை.

அவர்கள், இந்துத்துவவாதிகள் 20 பேரை கைது செய்தார்கள். இந்த இந்துத்துவ தீவிரவாதிகள் இந்துக்கள் அதிகமாக வாழும் பகுதியில் பதுங்கி இருந்தார்கள்.

தங்கள் எதிர்ப்புகளைக் காவல்துறை கண்டு கொள்ளவில்லை. கைது படலத்தைத் தொடங்கி விட்டார்கள் என்றவுடன் பீதிவயப்பட்ட இந்துத்துவ தீவிரவாதிகள் விசாரணையை கையிலெடுத்தார்கள்.

ஆமாம்! அவர்களுக்கென்ன கவலை அவர்களுக்குத்தான் மத்திய உளவுத்துறை கையிலிருக்கின்றதே!

அதனைக் கொண்டு விசாரணையை 'ATS' என்ற மராட்டிய காவல்துறையின் தீவிரவாத தடுப்புப் படையின் கைகளில் கொடுத்தார்கள்.

‘சிமி’, லஷ்கர் என்ற பெயர்களைக் கூறினார்கள். முஸ்லிம் இளைஞர்களைக் கைது செய்தார்கள்.

அவர்களின் வாழ்க்கையையும், பாழாக்கிய பின் அவர்களுக்கெதிராக எந்த சாட்சியமுமில்லை எனக் கூறி அவர்களை விடுதலை செய்துள்ளார்கள்.

**இந்த அப்பாவிகளின் விடுதலைக்கு அசீமானந்தாவின் வாக்குமூலம் தான் காரணமா?**

எத்தனையோ அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங்தளம், மத்திய உளவுத்துறை இவை வைத்த குண்டுகளுக்குப் பழி சுமந்து காரகிருகத்தில், அடைப்பட்டு வதைப்பட்டு வாழ்க்கையை இழந்திருக்கின்றார்கள்!

இப்போதும், எத்தனையோ ஆயிரம் முஸ்லிம்கள், பொடா, தடா, தடைசெய்யப் பட்ட செயல்களின் தடை சட்டம், இவற்றின் கீழ் ஜோடிக்கப்பட்டு சிறைச்சாலைகளில் சித்திரவதைக்கு உள்ளாகி வருகின்றார்கள்.

குண்டு வெடிப்புகள் நடந்தவுடன், ஊடகங்கள் முஸ்லிம்கள் நடத்தும் அமைப்பு களையும் முஸ்லிம் இளைஞர்களையும், இஸ்லாத்தையும் பூதகரமாகக் காட்டுவார்கள்.

காவல்துறை, உளவுத்துறை இவர்கள் அவிழ்த்துவிடும் புளுகு மூட்டைகளையே செய்தியாக இடை விடாமல் சொல்லு வார்கள்.

ஏற்படுத்தப்படும் பீதியில், எந்த அப்பாவியைக் கைது செய்தாலும், முஸ்லிம் களும் ஏறெடுத்துப்பார்க்க மாட்டார்கள். சாதாரணமாக அனுதாபப்படும் மனித உரிமை ஆர்வலர்களும் கவலைப்படமாட்டார்கள்.

அவர்களின் குடும்பத்தவர்களின் ஓயாத உழைப்பிற்குப் பின், அவர்கள் விடுதலை யடையும் போதுஅன்று பரபரப்பை ஏற் படுத்திய ஊடகங்கள் ஒரு ஓரச் செய்தியாகக் கூட அதைப் போடுவதில்லை.

இந்த பொதுவிதிக்கு விதிவிலக்காக தி ஹிந்து தமிழ் நாளிதழ் 29.4.2016 அன்று ஓர் தலையங்கத்தை எழுதி இருந்தது.

தலையங்கம் சற்றே ஆறுதலாக இருந்தது. அதில், “இனிமேலாவது இந்துத் தீவிரவாத செயல்களை கண்காணிக்க வேண்டும்” எனக் கூறி இருப்பது குறிப்பிடத்தக்கது. நன்றிகள் பல திஇந்து நாளிதழுக்கு.

ஆனால், இந்த அப்பாவி முஸ்லிம்களின் விடுதலைக்கு இந்துத் தீவிரவாதி சுவாமி அசீமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம்தான் காரணம் எனக் கூறியுள்ளது தலையங்கம்.

இது உண்மையல்ல, இந்த விடுதலைக்கு காரணம் சில பல முஸ்லிம் வழக்கறிஞர்கள் மனித ஆர்வலர்கள் இவர்களெல்லாம் பத்து ஆண்டுகளாக நடத்திய பெரும் போர்தான் காரணம்.

சுவாமி அசீமாநந்தா 18 டிசம்பர் 2010 இல் தான் ஒப்புதல் வாக்குமூலம் தந்தார்.

**ஒட்டுத் தாடி**

ஆனால், குண்டுவெடிப்பு நடந்த இரண்டொரு நாள்களிலே ஒரு பெரும் உண்மை வெளிவந்தது.

அதுதான், குண்டுவெடிப்பில் இறந்து விட்ட ஒருவர் ஒட்டுத்தாடியுடன் இறந்து கிடந்தார். அந்த உடலை அப்புறப் படுத்தி யவர் அஹ்மத் அக்கீல் என்ற முஸ்லிம் டெய்லர். அவர் அந்த உடலை காவல்துறை யிடம் தந்தபோது இது அதிசய உடல். ஆகவே, இதனை எல்லா உடலுக்கும் பிரேத பரி சோதனை நடக்கும் மருத்துவமனைக்கு அனுப்பக் கூடாது. மாறாக நாசிக் மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டும் என நாசிக் அனுப்பினார்கள்.

பின்னர் இப்படியொரு உடலே தங்களிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றார்கள். ஆனால் டெய்லர் அக்கீல் அஹ்மத் விடவில்லை. இந்த விவகாரத்தைத்

தொடர்ந்தார். ஊடகங்களில் செய்தி ஆக்கினார். ஆனால் அவர் ஒரு நாள் தன் வீட்டின் வளாகத்திற்குள் இறந்துகிடந்தார். அதனை தற்கொலை எனப்பதிவு செய்து காவல்துறையினர் வழக்கை மூடினார்கள்.

போலி தாடி விவகாரம், 2006 அக்டோபர்1 மில்லி கெஸட் என்ற ஆங்கில இதழில் வந்தது. அதாவது குண்டு வெடிப்பு நடந்த ஓரிரு தினங்களிலேயே வெளியே வந்தது.

அதன் பின், முன்னாள் மராட்டிய மாநில காவல்துறை அதிகாரி, தான் எழுதிய கர்கரேயை கொலை செய்தது யார்? என்ற நூலில் 2009லேயே இந்த உண்மைகளை யெல்லாம் வெளியே கொண்டு வந்தார் இந்தநூல் 2010, ஆம் ஆண்டில் அதாவது அசீமானந்தாவின் வாக்கு மூலத்திற்கு முன்பே பல லட்சம் பிரதிகளை விற்றுத் தீர்த்திருந்தது.

இந்த நூல் 2006 செப்டம்பரில் நடந்த குண்டு வெடிப்பை மராட்டிய காவல் துறையினர் சரியான கோணத்தில்தான், ஆய்வு செய்தார்கள். பின்னர் மத்திய உளவுத்துறை தலையிட்டுத்தான் விசாரணையை மாற்றினார் கள் என்பதைத் தெள்ளிதின் விளக்கிற்று.

மத்திய உளவுத்துறைதான் இந்தியாவின் அனைத்து அரசு இயந்திரத்தையும் இயக்கிக் கொண்டிருக்கின்றது. அதனை மாற்றிட வேண்டும் அதாவது மத்திய உளவுத்துறையை கலைத்திட வேண்டும். அதற்காக போராடு வார் யாருமில்லை. இப்போது இந்துப் பத்திரிக்கை கூட அதனை இடித்துக் காட்டிட வில்லை. ஏனெனில் பெரிய நிருவாகங்கள் எதுவும், மத்திய உளவுத்துறையை 'IB'யை எதிர்த்து நின்றிட இயலாது, நின்றால் நிருவாகத்தை அழித்துவிடுவார்கள்.

'IB'என்ற மத்திய உளவுத்துறை, அபிநவ் பாரத், ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங்தளம் போன்றவற்றை கொண்டு கொலைகளைச் செய்வதை வாடிக்கையாகக் கொண்டது. அதனால் எதிர்ப்பார் யாருமில்லை. அவர்களுக்கு எதிராகக் கனைத்துக் காட்டிய ஹேமந்த் கர்கரேயை நடு ரோட்டில் போட்டுச் சுட்டுக் கொன்றார்கள்.

இன்று மத்திய உளவுத்துறையின் 'IB' இன் பிடியிலிருந்து நாட்டைக் காக்க பாடுபடும் முன்னாள் மராட்டிய மாநில காவல்துறை ஐ.ஜி. எஸ்.எம். முஷ்ரிஃப் அதன் கைகளிலேதான் மரணத்தை எதிர்பார்க் கின்றார். இதனை சென்னையில் நாம் ஏற்பாடு செய்த "26/11 - விசாரணை, நீதித்துறையும் மயங்கியது. ஏன்?" என்ற நூலின் வெளியீட்டின் போது குறிப்பிட்டார். நம்மையும், அப்படியே எச்சரிக்கின்றார். அடிக்கடி தொலைபேசியில்!

ஆனாலும், நீதிக்கான நமது போர் தொடரும் இன்ஷா அல்லாஹ். அத்தனை அக்கறை எடுத்துக் கொண்டு தலையங்கம் தீட்டிய இந்து பத்திரிகையை பாராட்டும் அதே நேரத்தில் இன்னொரு உண்மையையும் நாம் சுட்டிக்காட்டிட கடமைப்பட்டுள் ளோம்!

அது, பொய் சாட்சியங்களைப் புனைந்து இந்த 9 முஸ்லிம் இளைஞர்களின் வாழ்க்கையையும், அவர்களின் குடும்பத்தை யும் பாழாக்கிய மும்பை தீவிரவாத தடுப்புப் படையின் தலைவர் கே.பி. இரகவான்ஷீ க்கு என்ன தண்டனை?

இதை இந்துப் பத்திரிகையின் தலையங்கம் சுட்டிக் காட்டிடவில்லை. (இந்த இரகவான்ஷு முஸ்லிம்களை அழிப்பதில் கொலை செய்வதில் முக்கிய பங்கு வகிப்பவர்)

தீர்ப்பில் காவல்துறையினர் அப்பாவி முஸ்லிம்களின் வாழ்க்கையை பாழாக்கியவர் களை தண்டிக்கவில்லை என்பது மட்டுமல்ல, இன்னும் ஒருபடி மேலே போய் அவர்கள் தங்கள் கடமையைத் தான் செய்தார்கள் என்பதால் அவர்கள் மீது நடவடிக்கை தேவையில்லை என்றும் கூறியுள்ளார், நீதிபதி வி.வி. பாட்டில்

**Times of India 26.4.2016**

இவர்களை இந்த அநியாயக்காரர் களைத் தண்டித்தால் அந்த நீதிபதிகளுக்கு எதிர்காலம் என்றொன்று இல்லை என்றாகிவிடும். ஏனெனில் ‘IB’என்ற மத்திய உளவுத்துறை அவர்கள் மீது அவதூறுகளை சுமத்தி ஒரு (Dossir) இரகசிய தகவல் அறிக்கையைத் தயார் செய்து அவர்களை ஒன்றுமில்லாமல் ஆக்கிவிடும்.

குறிப்பாக இந்த இரகவான்ஷீ தான் கர்கரேயை மும்பைத் தாக்குதலின் போது கொலைக் களத்திற்கு அனுப்பியவர்என்பது குறிப்பிடத்தக்கது. அவர் ‘IB’ என்ற மத்திய உளவுத்துறையின் எடுபிடி.

**ஒட்டுத்தாடியின் கதை**

இது, நந்தேதில் 2006இல் ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங்தளம் ஆகிய இயக்கத்தை சார்ந்தவர்கள் குண்டுகளை செய்து கொண்டிருந்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டவை. அங்கு பல ஒட்டுத் தாடிகள் இருந்தன. அவற்றோடு முஸ்லிம் அணியும் ஜுப்பாக்களுமிருந்தன.


இவையெல்லாம், பள்ளிவாசல்களில், குண்டு வைப்பதற்காக இந்துத்துவ தீவிரவாதிகள் எப்போதும், தங்களோடு வைத்துக் கொள்பவை.

இப்படி ஒரு ஒட்டுத்தாடி ஜெய்ப்பூர் குண்டு வெடிப்பின் போதும் கண்டுபிடிக்கப் பட்டது.

இவர்களையெல்லாம் இந்துத்துவாவின் தற்கொலைபடைகள். இவர்களை தயாரித்தது போன்ஸ்லா இந்து மிலிட்டரி பள்ளிக் கூடம், நாக்பூர்.


முஸ்லிம் அல்லாதவர்கள் திருகுர்ஆனை இலவசமாக பெற வேண்டுமா? கீழே உள்ள தொலைபேசியை தொடர்பு கொள்ளவும்

**8148129887**




விலை ரு. 60 மட்டுமே

**தீவிரவாதிகள் என்று சித்தரிக்கப்படும் தாலிபான்கள் யார்? என்பதை தெரிந்து கொள்ள இந்த நூல்களை படியுங்கள்!**




விலை ரு. 90 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி,**
**சென்னை - 600 001.**
**தொடர்ப்புக்கு : 8148129887**

# பா.ஜ.க. மறைத்து வைத்த ஊழல்கள்!

இந்தியாவில் அமைதியோடும், அன்போடும் வாழ்ந்து கொண்டிருந்த மக்களை இந்துக்கள் என்றும், இந்துக்கள் அல்லாதவர்கள் என்றும் பிளந்து வாழ்க்கை நடத்தினார்கள் ஃபாசிஸ்டுகள்.


இவர்கள் நாட்டு மக்கள் முன் பல வேஷங்களைப் போட்டார்கள். அவற்றில் முக்கியமானது நாட்டுப்பற்று என்ற வேஷம். இவர்கள் கொண்டிருந்தது நாட்டுப்பற்றல்ல நோட்டுப் பற்று என்பது மக்கள் மன்றத்தில் வெளிச்சத்திற்கு வந்தது. இவர்கள் நாடாண்ட நாட்களில் அதாவது 1998 முதல் 2004 வரை ஆறு ஆண்டுகள் இவர்கள் அடித்த கொள்ளைகளுக்கு அளவே இல்லை.

இவர்கள் ஆட்சிக்கட்டிலைப் பிடிப் பதற்கும், தாங்கள் நடத்திட விரும்பிய இனப்படுகொலைகளை நடத்திக்காட்டிடவும் போட்ட இன்னொரு முழக்கம் ‘சுதேசி’. இதன் பொருள் எல்லோருமே இந்தியப் பொருள்களைத்தான் வாங்க வேண்டும்.

ஆனால் இவர்கள் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த அந்த நாள் முதலே இந்த நாட்டில் இலாபத்தில் நடந்து கொண்டிருந்த தொழில் நிறுவனங்களையெல்லாம் தனியாருக்கும், வெளிநாட்டவர்களுக்கும் விற்பனை செய்தார்கள்.

இப்படி இவர்கள் விற்பனை செய்த இரண்டு மிகப் பெரிய ஹோட்டல்கள் பற்றிய தகவல்கள் பின்னர் அம்பலத்திற்கு வந்தது.

இரண்டு மாபெரும் ஹோட்டல்கள் பற்றிய ஊழல் மட்டுமல்ல இன்னும் பல ஊழல்கள் அதாவது இந்த தேசபக்தர்கள், சுதேசிகள் தங்கள் ஆட்சியில் அடித்த கொள்ளைகள் அம்பலத்திற்கு வந்தது. அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.



இங்கே வைகறை வாசகர்கள் ஒன்றைக்கவனிக்க வேண்டும். பா.ஜ.க.வின் ஊழல்களை அவர்கள் ஆட்சி செய்த காலங்களில் வெளிவந்த விடியல் வெள்ளி பத்திரிக்கையில் விரிவாக பட்டியலிட்டிருக் கின்றோம்.

இங்கே இடம் பெறுவன அதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஊழல்கள்.

**அருண்ஷோரி என்ற ஃபாசிஸ்ட்டும் அவர் நடத்திய ஊழலும்**

பாசிஸ்டுகள் ஆட்சி செய்த காலங்களில் 1998 முதல் 2004 வரை நம் நாட்டிலுள்ள தொழில் நிறுவனங்களை அதாவது நமது மத்திய அரசு நல்ல இலாபத்தில் நடத்திய

தொழில் நிறுவனங்களை தனியாருக்குத் தாரை வார்த்துத் தந்திடுவதற்கென்றே ஓர் அமைச்சகத்தை ஏற்படுத்தினார்கள். அந்த அமைச்சகத்தின் பெயர்தான் அரசு முதலீடுகளை விற்பனை செய்யும் அமைச்சகம். (Disinvestment Ministry)

நமது நாடு விடுதலையடைந்து ஆட்சி நடைபெற்ற காலங்களில், அரசு நடத்தும் தொழில்களைத் தனியாருக்கு விற்பனை செய்வதற்காக ஓர் அமைச்சகத்தை யே ஏற்படுத்திய அரசு ஒன்று உண்டென்றால் அஃது நமது பாசிஸ்ட்டுகள் அரியணையில் அமர்ந்து கபளீகரங்களைச் செய்த நாட்களில்தாம். நமது மத்திய அரசு நடத்திக் கொண்டிருந்த தொழில்களை தனியாருக்கு விற்பனை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவையில் அனைத்து அதிகாரமும் கைவரப்பெற்ற அமைச்சராக அமர்ந்திருந்தவர் அருண்ஷோரி என்பவர்தான்.

இந்த அருண்ஷோரி நடத்திய ஊழல்கள்தாம் அம்பலத்திற்கு வந்தது.

இவர் அமைச்சராக இருந்தபோது மத்திய அரசுக்கு சொந்தமான பல ஹோட்டல்களை விற்பனை செய்தார். அவற்றில் இரண்டில் நடந்த முறைகேடுகளும், ஊழல்களும் இப்போது அம்பலத்திற்கு வந்திருக்கின்றன. ஹோட்டல்கள் என்று சொல்லும் போது தங்கும் ஆடம்பரமான உணவு விடுதிகளும் உண்டு என்பதை நினைவு கூற வேண்டும்.

அவற்றின் பெயர்கள். . .

1. ஜூஹூ சென்டூர் (Juhu Centaur)

2. ஏர்போர்ட் சென்டூர் (Airport Centaur)

இவை இரண்டுமே மும்பையில் இருக்கும் மிகப் பிரம்மாண்டமான ஹோட்டல்கள்.

இந்த இரண்டு ஹோட்டல்களும் நமது மத்திய அரசுக்கு எப்படி சொந்தம் என்றால், மத்திய அரசு நடத்தும் விமானப் போக்குவரத்திற்கு இவை சொந்தம். உண்மையில் இந்த ஹோட்டல்கள் நமது விமானப் போக்குவரத்து அமைச்சகத்திற்கு சொந்தமான இடத்தில்தான் இருக்கின்றன. விமானத்தில் போவோர் வருவோர் தங்குவது, உணவு அருந்துவது என எப்போதும் நல்ல வியாபாரமாகும் ஹோட்டல்கள் இவை. நிரந்தரமாக லாபம் கிடைக்கும் ஹோட்டல்கள் இவை. இவற்றில் நஷ்டங்கள், இழப்புகள் இவை வருவதற்கு எந்த வாய்ப்புமில்லை. விமானத்தில் பறக்கும் பண முதலைகளும் இந்த ஹோட்டல்களுக்கு வாடிக்கையாளர்கள்.

இது போல் நமது விமானப் போக்குவரத்துகள் பல ஹோட்டல்களை நடத்தி வருகின்றன. இவற்றையெல்லாம் நடத்துவதற்கு ஓர் அமைப்பையும் ஏற்படுத்தி யுள்ளது அரசு. அந்த அமைப்பின் பெயர் தான் ஹோட்டல்களின் குழுமம். இதனை ஆங்கிலத்தில் ‘Hotel Corporation of India’ என அழைக்கின்றார்கள். இதனை சுருக்கமாக ‘HCI’ என குறிப்பிடுவார்கள்.

அருண் ஷோரி என்ற ஃபாசிச எழுத்தாளர் அமைச்சரானவுடன், பதவியேற்ற வுடன் இந்த இரண்டு ஹோட்டல்களையும் விற்பனை செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தார்.

இவர் இப்படி முடிவெடுக்கும் போது இரண்டு ஹோட்டல்களுமே நல்ல லாபத்தில் நடந்து கொண்டிருந்தன. இரண்டு ஹோட்டல்களிலும் ஏறத்தாழ 1600 தொழிலாளிகள் தங்கள் பிழைப்பை நடத்திட உழைத்துக் கொண்டுமிருந்தனர்.

நமது அரசுகள் அவ்வப்போது தாங்கள் நடத்தும் தொழிற்சாலைகளை தனியாருக்கு விற்பனை செய்வதுண்டு. காரணம், அவற்றை அரசால் லாபத்தில் நடத்திட இயலவில்லை என்பதுதான்.

ஆனால் அருண் ஷோரியால் விற்பனை செய்யப்பட்ட இந்த இரண்டு ஹோட்டல் களும் நல்ல இலாபத்தில் நடந்து கொண்டிருந்தவை. அவற்றை தொடர்ந்து நடத்தியிருந்தால் அந்த இலாபங்கள் நமது

மத்திய அரசுக்கு கிடைத்திருக்கும். அந்த பணம் நேரடியாகவே மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களுக்கும் பயன்பட்டிருக்கும்.

ஆனால், நமது நாட்டை ஆண்ட முந்தைய பாசிச அரசு அவற்றை எந்தக் காரணமுமின்றி தனியாருக்கு விற்று விடுவது என முடிவு செய்தது.

சாதாரணமாக இவை போன்ற பெரிய அரசு நிறுவனங்களை விற்பனை செய்யும் போது பல நெறிமுறைகளை கடைபிடிப் பார்கள்.

முதன் முதலில் இந்த ஹோட்டல்களின் தற்போதைய மதிப்பு என்ன என்பதைக் கண்டு பிடிப்பார்கள். இந்த ஹோட்டல்கள் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புடையன என்றால், ஒரு நிபுணர்கள் குழுவை அமைத்து அவை என்ன விலைக்குப் போகும் என்பதை கணிப்பார்கள்.

இப்படி ஒரு நிறுவனத்தை விற்பனை செய்யும்போது அது எத்தனை ரூபாய் மதிப்புள்ளது என கணக்கிட்டுப் பார்ப்பது ஏதோ அரசாங்கம் மட்டும் செய்கின்ற அதிசய முறையல்ல. சாதாரண குடிமக்கள் கூட ஒரு பொருளை விற்பனை செய்ய வேண்டும் என்றால் அந்தப் பொருளின் உண்மையான மதிப்பென்ன என்பதை கணக்குப் பார்க்கவே செய்வார்கள்.

இந்தப் பின்னணியில் இந்த இரண்டு ஹோட்டல்களின் உண்மையான மதிப்பு என்ன என்பதை கண்டறியவும், அவற்றை உலக அங்காடியில் விற்பனை செய்யவும் ஒரு தனியார் நிறுவனத்தை நியமித்தார்கள். அந்த நிறுவனத்தின் பெயர் ஜார்டைன் பிளமிங் செக்குரிட்டீஸ் இந்தியா லிமிடெட் (Jardine Fleming Securities India Ltd). பின்னர் இந்த நிறுவனம் ஜெ.பி. மோர்கன் எனத் தன் பெயரை மாற்றிக் கொண்டது.

இந்த நிறுவனம் இந்த ஹோட்டல்கள் இரண்டும் அதாவது ஜுஹு சென்டூர், ஏர்போர்ட் சென்டூர் ஆகிய இரண்டு ஹோட்டல்களும் என்ன விலைக்கு போகும் என்பதை கணக்குப் பார்த்துக் கொண்டி ருந்தன. பாதி வழியில் திடீரென அரசு நிறுவனங்களைத் தனியாருக்கு தாரை வார்க்கும் அமைச்சர் அருண் ஷோரி தலையிட்டார். தானும் தனது அமைச்சகமும் இந்த ஹோட்டல்களை விற்பனை செய்கின்ற எல்லாப் பணிகளையும் பார்த்துக் கொள்வோம் எனக் கூறினார். அந்த நிறுவனத்திடமிருந்து எல்லாக் கோப்புகளையும் பிடுங்கிக் கொண்டார்.

இஃது, அதுவரை பின்பற்றி வந்த நெறி முறைகளுக்கு எதிரானது.

## ஏர்போர்ட் சென்டூர் என்ற ஹோட்டலின் விற்பனை

அருண் ஷோரி தன்னிச்சையாகவே செயல்பட்டார். இந்த இரண்டு ஹோட்டல்களுள் ஒன்றான ஏர்போர்ட் சென்டூர் என்ற ஹோட்டலை விற்பனைச் செய்வதற்கான குறைந்தபட்ச விலை ரூபாய் 76.20 கோடி என முடிவு செய்தார். (எழுபத்தாறு கோடியே இருபது லட்சம்)

ஆனால் அந்த ஹோட்டலின் குறைந்த பட்ச மதிப்பு ரூ. 214 கோடிக்கு குறையாமலிருக்கும் என்பதே உண்மை. (இருநூற்று பதினான்கு கோடி)

அடுத்து இதுபோன்ற ஹோட்டல் களை அல்லது பெரிய நிறுவனங்களை விற்பனை செய்கின்றபோது பெரிய அளவில் விளம்பரங்களைச் செய்வார்கள். யார் அதிகமான விலையைத் தருவதாக மனு செய்கின்றார்களோ அவர்களுக்கு விற்பனை செய்வதுதான் சராசரி அறிவுள்ளவர்களும் செய்கின்ற வேலை. ஆனால் நமது பாசிச அரசும் அதில் அங்கம் வகித்த எழுத்துலக பாசிஸ்ட்டு அருண் ஷோரியும் ஒரே ஒரு நபருக்கே இதைச் சொன்னார்கள். அவருக்கே இதை விற்றார்கள். அந்த ஒரு நபரின் பெயர் ஏ.எல். பத்ரா (A.L. Batra)

இந்த ஏ.எல். பத்ராவிடம் போதிய அளவு பணமில்லை. அது மட்டுமல்ல அவரால் இந்த ஹோட்டல்களை வாங்கிடு

வதற்கான நிபந்தனையையும் நிறைவேற்றிட இயலவில்லை. இத்தனைக்கும் இவருக்கு இந்த ஹோட்டல் அதாவது ஏர்போர்ட் சென்டூர் என்ற ஹோட்டல் 65 கோடிக்கே விற்பனை செய்யப்பட்டது. உண்மையைச் சொன்னால், குறைந்தபட்சம் 214 கோடி களுக்கு விற்பனை செய்யப்பட வேண்டிய ஹோட்டல் வெறும் 65 கோடிக்கு மட்டுமே விற்பனை செய்யப்பட்டது. இந்த 65 கோடியையும் அவரால் ஏற்பாடு செய்ய இயலவில்லை. ஆதலால் அருண் ஷோரியே நேரில் சென்று வங்கிகளில் பணத்திற்கும், கடனுக்கும் ஏற்பாடு செய்தார். அமைச்சர் அருண்ஷோரியே முன்னின்று அனைத்து ஏற்பாடுகளையும் செய்த போதும் பணம் உரிய நேரத்தில் வந்து சேரவில்லை.

ஆகவே, விதிகளைத் தளர்த்தினார்கள். கால அவகாசத்தை நீட்டிக் கொண்டார்கள்.

இத்தனையும் செய்த பிறகும் ஏ.எல். பாத்ராவினால் உரிய நேரத்தில் ஹோட்டலுக் கான விலையைத் தர இயலவில்லை. மீண்டும் விதிகளைத் தளர்த்தினார்கள். அருண் ஷோரி ஒரு பயங்கர முயற்சியை மேற்கொண்டு பணத்தை ஏற்பாடு செய்து ஹோட்டலை வாங்கிடச் செய்தார். இத்தனையும் முடிந்த பின்னால், ஒரு தனி மனிதன் இவ்வளவு பெரிய சொத்தை வாங்கிட இயலாது என்பதைக் கண்டறிந்தார்கள். ஆகவே, ஒரு புது நிறுவனத்தை தற்காலிகமாக ஏற்பாடு செய்தார்கள். அந்த நிறுவனத்திற்கு இப்படி பெயர் வைத்தார்கள் பத்ரா விருந்துபச்சார நிறுவனம் (Batra Hospitality Services Pritave Limited). இந்த பெயர் எப்போது வைக்கப் படுகின்றது என்றால் ஹோட்டல் வாங்கிடுவதற்கான எல்லா பணிகளும் முடிந்த பின்தான் இந்தப் பெயர் வைக்கப்படுகின்றது. அதாவது ஹோட்டலை வாங்கப்போவதாக மனுப்போடும் போது ஒரு பெயர். ஹோட்டலை வாங்கும் போது ஒரு பெயர்.

இப்படி ஏ.எல். பத்ராவுக்கு நல்ல இலாபத்தில் நடந்து கொண்டிருந்த ஒரு ஹோட்டலை விற்கும் போது, அந்த ஹோட்டலுக்கு பக்கத்திலிருந்த பெட்ரோல் பம்பு (Petrol Pump) என்ற பெட்ரோல் விற்பனை செய்யும் குழாய் ஒன்றையும் சேர்த்தே விற்றுவிட்டார்கள்.

ஒரு பெட்ரோல் பம்பை விற்பனை செய்ய வேண்டும் என்றால் மத்திய அரசின் பெட்ரோல் அமைச்சகத்திடம் (Union Ministry of Petroluem) அனுமதி வாங்கிட வேண்டும். ஆனால் அதைப் பற்றி அருண்ஷோரி கவலைப்படவில்லை. பெட்ரோலிய அமைச்சகத்தின் அனுமதியின்றி அந்தப் பெட்ரோல் பங்கும் ஏ.எல். பத்ராவுக்கு விற்பனை செய்யப்பட்டது. பெட்ரோலிய அமைச்சகமும் பாசிஸ்டுகளுடையது தானே. அதனால் என்ன? பணம் ஃபாசிஸ்டுகளுக்குள் தானே சுற்றி வரும்.

ஏ.எல். பத்ராவுக்கு இன்னொரு உதவியையும் செய்தது மத்திய அரசு. அது இந்தப் பெட்ரோல் பங்கில் விற்பனையாகும் பெட்ரோலின் மொத்த மதிப்பில் 6 சதவீதத்தை அந்த பெடரோல் பங்க் இருக்கும் இடத்திற்கு சொந்தக்காரரான ஏர் போர்ட்டுக்கு விமான தளத்திற்கு, சுருங்கச் சொன்னால் மத்திய அரசுக்கு தந்துவிட வேண்டும். இஃது அந்த இடத்திற்கு வாடகைப் போன்றது. ஆனால் இந்தப் பெட்ரோல் பங்கை விற்பனை செய்யும் போது விற்பனையாகும் மொத்த மதிப்பில் 2 சதவீதம் மட்டும் தந்தால் போதும் என ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். நான்கு சதவீதம் குறைக்கப்பட்டது.

இப்படி பா.ஜ.க. அரசாங்கத்தின் சலுகைகளை ஒரேடியாக அள்ளிப் பருகிடும் இந்த ஏ.எல். பத்ரா யார்? அப்படியென்ன முக்கியத்துவம் இந்த ஏ.எல். பத்ராவுக்கு என்ற வினாக்கள் எழுவது இயல்பானது தானே! இந்த வினாவுக்கு இதோ பதில்.

இவர் ஓர் ஆர்.எஸ்.எஸ். காரர். அதனால்தான் இவருக்கு இத்தனை சலுகை கள். ஆர்.எஸ்.எஸ்.காரர் என்றவுடன் நமது சங்க பரிவாரத்தினர் துடித்தெழுவார்கள். நிரூபியுங்கள் பார்க்கலாம் என்று கூப்பாடு

போடுவார்கள். ஏனெனில் இவர்கள் எந்த உறுப்பினர் பதிவேட்டையும் வைத்துக் கொள்வதில்லை. உறுப்பினர் அட்டையும் வழங்குவதில்லை. இதனால் பத்திரிகை உலகம் இவரை இப்படிக் குறிப்பிடுகின்றது. "Batra had been favoured because of his close links with rashtria swayam sewak." (Frontline, June 3, 2005, pp.29-30)

இதன் பொருள்,

"பத்ராவுக்கு இவ்வளவு சலுகைகள் தரக் காரணம் ஆர்.எஸ்.எஸ்.ஸோடு அவருக்கிருந்த நெருங்கிய தொடர்புகள்தாம்."

இப்படி ஒரு தனி நபருக்காக உழைக்கும் அருண்ஷோரி அறிவற்றவரா? அவரென்ன பங்கு வாங்கிடத் தெரியாதவரா? அவருக்கு அத்வானிகளும், வாஜ்பேயிகளும் என்ன இழிச்சவாயர்களா? அவர்களுக்கு மட்டும் பணம் என்றால் அதுவும் கோடிக்கணக்கில் என்றால் துவர்க்கவா செய்யும்?

இது குறித்து அப்போதே மத்திய லஞ்ச ஒழிப்புத் துறையைக் கொண்டு ஒரு புலன் விசாரணை நடத்திட வேண்டும் என்றொரு குரல் எழுப்பப்பட்டது. நாடாளுமன்றத்தை கூச்சலும், குழப்பமும், கொந்தளிப்புகளும் சூழ்ந்தன.

பெண்கள், குழந்தைகள், வயோதிகர்கள், அப்பாவிகள் இவர்களின் பிணங்களின் மேல் பயணம் செய்து பழகிப் போய்விட்ட அத்வானிகளும், வாஜ்பேயிகளுமா இவற்றைக் கண்டு அஞ்சுவார்கள்.

எதிர்ப்பாக வந்த எந்தக் குரலையும் அவர்கள் கண்டு கொள்ளவே இல்லை.

நாடாளுமன்றத்தில் சில வேளைகளில் இந்த வினாக்களை எழுப்பியவர்களில் பாசிச பரிவாரத்தைச் சார்ந்த சிவசேனாகாரர்களும் உண்டு.

நமது நாடாளுமன்றத்தின் மேலவை எனக் கூறப்படும் ராஜ்ஜிய சபாவின் சிவசேனா உறுப்பினர் சஞ்சேய் நிருபம் (Sanjay Nirupam) என்பவரே இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்தார்.

இவர்தான் "ஏ.எல். பத்ரா என்பவர் ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்போடு தொடர்புடையவர்" என்ற உண்மையை உலகறியச் செய்தார்.

ஏ.எல். பத்ரா என்ற தேச பக்தர் ஆர்.எஸ்.எஸ். தொர்புடையவர், இந்த ஹோட்டலை வாங்கிய நான்கு மாதங்களுக்குள் (September 2002) இந்த ஹோட்டலை 32 கோடி இலாபத்திற்கு விற்றுவிட்டார்.

இப்படிக் எந்தக் கஷ்டமுமில்லாமல் எந்த முதலீடும் இல்லாமல் நான்கே மாதத்தில் 32 கோடி ரூபாயை சம்பாதித்து விட்டார். விரயமானது அரசாங்கப் பணம். இழப்புகளுக்கு உள்ளானவர்கள் நாட்டு மக்கள்.

இலாபம், நாட்டுப்பற்றைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்ட ஆர்.எஸ்.எஸ்.ஸோடு தொடர்புடைய ஏ.எல். பத்ராவுக்கும் அவருக்குப் பக்கத்துணையாக நின்ற பாசிஸ்டுகளுக்கும்.

ஏ.எல். பாத்ராவிடமிருந்து இந்த ஹோட்டலை வாங்கியவர்கள், "சஹாரா குழுமம்" என்ற நிறுவனம். இந்த நிறுவனம் பின்னர் "சஹாரா விருந்துபசார குழுமம்" எனத் தன் பெயரை மாற்றிக்கொண்டது.

இந்த சஹாரா நிறுவனத்திற்குப் பின்னால் யார்? யார்? இருக்கின்றார்கள் என்பதை இன்னும் கண்டு பிடிக்க இயலவில்லை. இதனைக் கண்டு பிடித்தால் பா.ஜ.க. அரசின் இன்னும் பல ஊழல்களும், கொள்ளைகளும் வெளிச்சத்திற்கு வரும். யாராவது இதைக் தோண்டினால் ஃபாசிஸ்ட்டுகளின் நாட்டுப்பற்று நிறைந்த ஊழல்கள் நிரம்ப வெளிவரும் என அரசியல் விற்பன்னர்கள் கூறுகின்றார்கள்.

எதிர் கட்சிகள் மத்திய புலனாய்வுத் துறையின் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். அப்படியானால்தான் இந்த ஏர்போர்ட் சென்டூர் (Airport Centaur) என்ற ஹோட்டல் விற்பனையில் நடந்த முழு கொள்ளையையும் வெளிவரும் எனக் கத்தினார்கள், கதறினார்கள். ஆனால்

அத்வானிகளும், வாஜ்பேயிகளும், குஜராத் இனப் படுகொலைகளை நாட்டில் இதரப் பகுதிகளுக்கு எப்படி கொண்டு செல்வது என்பதைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருந்ததால், மத்திய புலனாய்வுத் துறையின் விசாரணையை ஒத்துக் கொள்ள வில்லை.

எல்லாக் கோரிக்கைகளையும் ஏகமாய்ப் புறக்கணித்தார்கள். இந்தக் கொள்ளைகளை காங்கிரஸ் அரசு புலன் விசாரணை செய்யும் என்ற நம்பிக்கையோடு நாட்டு மக்கள் நாட்களை நகர்த்திக் கொண்டிருக் கின்றார்கள்.

அடுத்து இரண்டாவது ஹோட்டலின் விற்பனையைப் பற்றி பார்ப்போம்.

## அதிசயங்கள் நிறைந்த ஜுஹு ஹோட்டல் விற்பனை

பாரதீய ஜனதா அரசு, அருண் ஷோரியின் அமைச்சகத்தின் கீழ் விற்பனை செய்த இரண்டு ஹோட்டல்களுள் ஒன்றைப் பற்றிப் பார்த்தோம்.

அருண் ஷோரி விற்பனை செய்த இன்னொரு ஹோட்டலின் பெயர் ஜுஹு சென்டூர்.

இந்த ஹோட்டல் விற்பனையிலும் பல விநோதங்கள்.

விற்பனையில் பிரபல்யமான இரண்டு ஹோட்டல்களுமே நமது விமானப் போக்கு வரத்திற்குச் சொந்தமானவை என்பதை நாம் ஏற்கெனவே குறிப்பிட்டோம். இந்தவிமானப் போக்குவரத்தின் நிர்வாகத்தை கவனித்திட ஒரு வாரியம் அல்லது குழுமம் இருக்கின்றது. இதற்கு "ஏர் இந்தியா போர்டு" என்று பெயர். (Air India Board)

இந்த ஏர் இந்தியா போர்டு அல்லது ஏர் இந்தியா வாரியத்தின் உறுப்பினர்களில் ஒருவர் அஜித் பி. கெர்கார் என்பவர். விமானப் போக்குவரத்திற்குச் சொந்தமான ஹோட்டல் களில் ஒன்றான ஜுஹு ஹோட்டலை விற்பனை செய்ய வேண்டும் என்ற முடிவு 1998 நவம்பர் மாதம் மூன்றாம் நாள் எடுக்கப் பட்டது. (3.11.1998) இந்த முடிவை எடுப்பதற் காக அமைக்கப்பட்ட துணைக் குழுவில் கமிட்டியில் இந்த அஜித் பி. கெர்காரும் உண்டு.

ஜுஹு ஹோட்டல் விற்பனை செய்ய வேண்டும் என்ற முடிவு எடுத்த குழுவில் அங்கம் வகித்த அஜித் கெர்கார் மறுநாள் 4.11.1998 அன்ற இந்த துணை குழுவிலிருந்தும் ஏர் இந்தியா போர்டு என்ற வாரியத்திலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்கின்றார். இராஜினாமா செய்துவிடுகின்றார். உடனேயே இந்த வாரியம் மாற்றியமைக்கப்படுகின்றது. வெளியே வந்த இவர் "துலிப் விருந்துபச்சார சேவை லிமிடெட்" என்றொரு வியாபார நிறுவனத்தை நிறுவுகின்றார். (Tulip Hospitality Services Ltd.)

அடுத்து அருண் ஷோரியின் அமைச்சகம் இந்த ஜுஹு சென்டூர் ஹோட்டல் என்ன விலைக்குப் போகும் என்பதைக் கண்டறியும் குழு ஒன்றை அமைக்கிறது. இந்தக் குழு ஹோட்டல் 246.30 கோடி ரூபாய்க்கு விலை போகும் எனக் குறிப்பிடுகின்றது. அதவாது ஹோட்டலின் உண்மையான மதிப்பு இரு நூற்று நாற்பத்தாறு கோடியே ஐம்பது லட்சம்.

ஆனால் நமது பாரதீய ஜனதா கட்சி அரசின் அருண் ஷோரி அமைச்சகம் இந்த ஹோட்டலை வாங்குவதற்கான குறைந்தபட்ச விலை ரூபாய் 106.00 நூற்று ஆறு கோடியே அறுபது லட்சம் என்று குறிப்பிடுகின்றது.

இதில் வினோதம் என்னவென்றால் நாம் மேலே குறிப்பிட்ட அஜித் பி. கெர்காரின் நிறுவனமான துலிப் விருந்துபசார நிறுவனம் (Tulip Hospitality Services Ltd.) இந்த ஹோட்டலை 153 கோடிக்கு வாங்கிட மனுப் போடுகின்றது. இன்னும் சில நிறுவனங்களும் மனுப் போடுகின்றன. ஏனைய நிறுவனங்களின் மனுக்களில் தவறுகள் இருக்கின்றன என்றொரு பொய் கூறப்பட்டு அவை நிராகரிக்கப்படுகின்றன. இறுதியில் ஒரே ஒரு மனு தான் சரியானது, குறைகள் அற்றது எனக்

கண்டுபிடிக்கப் படுகின்றது. அந்த மனு வேறு யாருடையதுமல்ல. சாச்சாத் அஜித் பி. கெர்கார் என்பவரின் மனுதான். ஆக இங்கேயும் வேண்டிய நபருக்கே விற்கப் படுகின்றது. அவர் சொன்ன 153 கோடிக்கே அந்த மாபெரும் ஹோட்டல் விற்பனைச் செய்யப்படுகின்றது. இதில் சந்திக்கு வந்த விந்தை என்னவெனில், இந்த ஹோட்டலை விற்பனை செய்யலாம் என்ற முடிவை எடுக்கும் குழுவில் இடம் பெற்றவரே அதனை வாங்கி விடுகின்றார். ஆங்கிலத்தில் இதனை அழகாக இப்படிக் குறிப்பிடுகின்றார்கள், 'The Seller Become the Buyer' விற்பவரே வாங்கு பவராகவும் மாறிவிட்டார்.

அஜித் பி. கெர்காருக்கும் பண நெருக்கடி. அவர் சில பத்திரங்களையும், காசோலைகளையும் கொடுக்கின்றார். அவை அனைத்தையும் பணமாக்கிட வேண்டும் என்றால் மும்பையிலிருந்து டெல்லிக்கு வரவேண்டும்.

டெல்லியில் உள்ளனவற்றை பணமாக ஆக்கி பம்பாயில் தந்திட வேண்டியது அஜித் பி. கெர்காரின் கடமை. ஆனால் நமது அமைச்சர் அருண் ஷோரி அவருக்கு ஒரு பெரும் உதவியை செய்கின்றார். அது விற்ற ஹோட்டலுக்கான விலையை பணமாக வாங்கிட பம்பாயிலுள்ள அரசு அலுவலர்கள் அரசு செலவில் டெல்லி வருகின்றார்கள். வருகையில் நோக்கம் ஜூஹூ ஹோட்டலை வாங்கிய அஜிர் கெர்கார் தந்த காசோலைகளையும் இன்ன பிறபத்திரங்களை யும் பணமாக மாற்றுவதே, இவர்கள் மும்பை வந்தது 22.2.2002 அன்று. இப்படி இவர்கள் பயணம் செய்ததற்கான ஆதாரங்கள் தன்னிட மிருப்பதாக கூறுகின்றது பிரண்ட்லைன் என்ற பத்திரிகை.

**(Frontline, June 3, 2005)**

இந்த அரசு அலுவலர்கள் அரசாங்க செலவில் பம்பாயிலிருந்து டெல்லி சென்றபோது அங்கே அவர்களுக்கோர் அதிர்ச்சி காத்திருந்தது.

அதுதான் அமைச்சர் அருண் ஷோரியின் உத்தரவு.

அந்த உத்தரவு, அஜித் கெர்கார் கொடுத்த காசோலைகளையும் இன்னபிற உத்திரவாதங்களையும் இப்போது காசாக மாற்றிடக் கூடாது என்பதே.

காரணம், அவற்றையெல்லாம் காசாக மாற்றிட போதிய பணம் வங்கிகளில் இன்னும் ஏற்பாடாகவில்லை என்பதே. உடனேயே, அஜித் கெர்காருக்கு விற்ற ஹோட்டல் உரிமத்தை ரத்து செய்திருக்க வேண்டும் அரசு. ஆனால் அருண்ஷோரி அதைச் செய்யவில்லை.

மும்பையிலிருந்து டெல்லி வந்த அரசு அலுவலர்களை அரசு செலவில் உல்லாச புரிகளில் தங்க வைத்தார். அருண்ஷோரியே களமிறங்கினார். சில வங்கிகளின் உயர் அதிகாரிகளைத் தன் அலுவலகம் வரச் சொல்லி சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு 23.2.2002 அன்று நடந்தது.

வங்கிகளின் உயர் அதிகாரிகளை அருண்ஷோரி சந்தித்தபோது அவரது அமைச்சகத்தின் செயலாளர் பிரதீப் பைஜால் என்பவரும் உடனிருந்தார். இந்த வங்கிகளின் உயர் அதிகாரிகளின் சந்திப்பின் போது ஏழு வங்கிகளின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டார்கள். இந்த ஏழு வங்கிகளின் உயரதிகாரிகளும் இணைந்து 129 கோடி கடனாகத் தருவதாக ஒத்துக் கொள்கிறார்கள். ஹோட்டலின் விலை 153 கோடி. அப்படி யானால் மீதம் 24 கோடி? அதை அஜித் கெர்கார் தன்னுடைய சொந்த நிதியிலிருந்து தருவதாக ஒத்துக் கொள்கின்றார்.

ஜூஹூ சென்டூர் ஹோட்டலை வாங்குகின்ற வரை ஏர்போர்ட் வாரியத்தில் உறுப்பினராக இருந்தவருக்கு 24 கோடி ரூபாய் ஏது எனக் கேட்க நாதியற்றுப் போயிற்று உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டில். ஏனெனில், அப்போது நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்தவர்கள் பாசிஸ்டுகள். இவர் களுக்கு, அவர்கள் நலனைத் தவிர வேறு எந்த நலனையும் தெரியாது.

அதன் பின்னர் கிடைத்த தகவல்கள் ஓர் உண்மையை வெளிச்சத்திற்குக் கொண்டு

வந்தது. அந்த தகவல்களுள் ஒன்று தவத்திரு அஜித் பி.கெர்கார் இந்த ஹோட்டலை ரூபாய் 370 கோடிக்கு விற்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக் கின்றார் என்பது தான். அதாவது சந்தடி இல்லாமல் 217 கோடி ரூபாய் இலாபம்.

எப்படி இருக்கின்றது நாட்டுப் பற்றை ஓட்டு மொத்தமாக விழுங்கியவர்கள் ஆட்சியும் நிர்வாகமும்?

அரசின் சொத்துக்களை தங்களுக்கு வேண்டியவர்களுக்கு விலை குறைந்து விற்பது, பின்னர் சந்தடி இல்லாமல் மறுவிலைக்கு விற்று விடுவது. இதற்கு அருண்ஷோரி என்ற ஆலகால விஷம் அமைச்சர், அத்வானிகளும், வாஜ்பேயிகளும் துணை பிரதமரும், பிரதமரும் ஆவார்கள். நாட்டு மக்களும் நாட்டு சொத்துக்களும் இந்த பாசிஸ்டு களுக்குப் பகடைகாய்கள். பல நேரங்களில் இவர்கள் வாங்கிய அரசு சொத்துக்களை மறுவிலைக்கு விற்பனை செய்யும் போது முன்னால் கடன் வாங்கிய வங்கிகளின் கடன்களை அடைப்பதில்லை. வங்கிகளை நஷ்ட கணக்கு காட்டிட விட்டுவிடுவார்கள்.

இப்போது இவர்கள் மறுவிலைக்கு ஹோட்டலை விற்பதற்கு விலை பேசிக் கொண்டிருப்பதை அறிந்தது விஜய் வங்கி. உடனேயே இந்த வங்கி ஓர் அறிவிப்பைச் செய்கின்றது செய்திதாள்களில். அந்த அறிவிப்பில், இந்த ஜுஹு சென்டூர் ஹோட்டலை வாங்குவதற்கு கடன் வழங்கிய வங்கிகளில் விஜய் வங்கியும் உண்டு. அதன் கடன் இன்னும் அடைக்கப்படவில்லை. ஆகவே அந்த ஹோட்டலை யாரும் விலைக்கு வாங்கிடக் கூடாது என்று கூறிற்று.

விஜய் வங்கியும் இந்த ஹோட்டலை அஜித் கெர்கார் வாங்கிட கடன் வழங்கிய வங்கிகளுள் ஒன்று. விஜய் வங்கி எடுத்த அதிரடி நடவடிக்கையால் இந்த ஹோட்டல் விற்பனையாவது தடுக்கப்பட்டு விட்டது. இதனால் ஹோட்டல் மூடப்பட்டு விட்டது. ஹோட்டலை மூடியதால் அதில் வேலை செய்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் 801 பேர் வேலை இழந்தார்கள். பல ஆண்டுகள் இந்த ஹோட்டலை நம்பி உழைத்தவர்கள் இப்போது நடுத்தெருவில். இவர்களோ உல்லாச புரிகளில்.

இந்த இரண்டு ஹோட்டல்களின் (ஏர்போர் சென்டூர், ஜுஹு சென்டூர்) விற்பனையிலும் ஒரு மர்மம். அது இந்த இரண்டு ஹோட்டல்களையும் வாங்கியவர் கள், இந்த ஹோட்டல்களை தொடர்ந்து நடத்தி இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்று எண்ணிடவில்லை. உண்மையைச் சொன் னால் அவர்களுக்கு இந்த ஹோட்டல்களைத் தொடர்ந்து நடத்திட வேண்டும் என்ற ஆர்வம் எள்ளளவுமில்லை. மாறாக அவர்கள் இவற்றை மறுவிலைக்கு விற்பதிலேயே கவனமாக இருந்திருக்கின்றார்கள்.

இந்த ஹோட்டல்களை இவர்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யும் போது அவற்றை வாங்குபவர்கள் யார்? யார்? என்பதைக் கண்டு பிடித்தால் இன்னும் பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும். எத்தனை அத்வானி களும், வாஜ்பேயிகளும் இவற்றில் இலாப மடைகின்றார்கள் என்பதும் தெரியவரும்.

இவற்றை அரசாங்கங்கள் செய்திட முன்வரவில்லை என்றால் பத்திரிகைகள் தாம் இவற்றைச் செய்திட வேண்டும்.

ஃபாசிஸ்டுகள் ஆட்சி செய்த காலங்களில் தங்களை எதிர்த்து எழுதும் பத்திரிகைகளில் பலவற்றை விலைக்கு வாங்கிவிட்டார்கள். அதனால் ஓரிரு பத்திரிகைகளே இந்தப் பணியைச் செய்கின்ற சுதந்திரத்தைப் பெற்றுள்ளன.

இந்த நாட்டின் விடுதலை முதற் கொண்டு அனைத்து முக்கிய நிகழ்வுகளிலும் பெரும் பங்காற்றிய முஸ்லிம்கள் இந்தப் பணியைச் செய்திருக்க வேண்டும். அதாவது பாசிஸ்டுகள் நாடாண்ட போது நடத்திய கொள்ளைகளை அகழ்ந்தெடுத்து மக்கள் மன்றத்தில் வைத்திருக்க வேண்டும். இதன் மூலம் குற்றவாளிகளை அதாவது, நாட்டு மக்களின் சொத்துக்களைச் சூறையாடியவர்

களை தண்டித்திருக்க வேண்டும். நன்மையை ஏவி தீமையைத் தடுத்திடய வேண்டிய முஸ்லிம் சமுதாயம் கூனிக் குறுகி போய்க் கிடக்கின்றது. அவர்கள் நடத்தும் பத்திரிகைகள் குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருக் கின்றன. அவர்களால் பத்திரிகைத் துறைக்குள் அடியெடுத்து வைக்கவே இயலவில்லை.

இந்நிலையில் இவர்கள் அதாவது பாசிஸ்டுகள் செய்யும் ஊழல்கள் ஊருக்கு தெரியாமல் மறைக்கப்பட்டு விடுகின்றன.

இந்த இரண்டு ஹோட்டல்களின் விற்பனையிலும் நடந்த தில்லுமுல்லுகள் கூட வேறு யாராலும் கண்டுபிடிக்கப்பட்டவை அல்ல. வழக்கமாக அரசின் கணக்குகளைத் தணிக்கைச் செய்யும் தணிக்கை குழுவே இவற்றை கண்டு பிடித்தது. இந்த தணிக்கை குழு தான் தருகின்ற வழக்கமான அறிக்கையில் குறிப்பிட்டவைதான் இவை. அதன் பின்னர் நாடாண்ட காங்கிரஸ் அரசு அதை நாடாளும் மன்றத்தில் வைத்தது. நமது நாடாளு மன்றத்தில் மே திங்கள் 6 ஆம் நாள் (6.5.2005) இவை அம்பலமாயின.

மே 13ஆம் நாள் காங்கிரஸ் தலைமை யில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு இவற்றை மேலும் நுணுக்கமாக விசாரிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

ஒரு பெரும் புயலில் சிக்கிக் கொண்ட முன்னாள் அமைச்சர் அருண் ஷோரி தான் எந்த விசாரணையையும் சந்திக்க தயார் எனக் கூறினார். அவரது வீராவேசத்தில் உப்புச் சப்பில்லை என்பதால் யாரும் அதைக் கண்டு கொள்ளவில்லை. ஒரு முன்னாள் அமைச்சர் முக்கிய குற்றவாளி என்ற வகையில் தரும் எதிர்தரப்பு வாதத்தையும் பதிவு செய்வது பத்திரிகை தர்மம். அந்த வகையிலே சில பத்திரிகைகள் சில வரிகளில் அவருடைய மறுப்பை பதிவு செய்தன. அந்த தர்மத்தைக் காப்பதற்கே வைகறை வெளிச்சமும் இந்த வரிகளை இங்கே பதிவு செய்கின்றது. இந்த இரண்டு ஹோட்டல்களையும் போல் இன்னும் பல ஹோட்டல் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றியும் முழு விசாரணை வேண்டும் என நாடாளு மன்ற உறுப்பினர்கள் கோரினார்கள். தான் செய்கின்ற ஊழல்களில் தான் பின்னர் சிக்கிக் கொள்ளக் கூடாது என்பதற்காக, பல ஆவணங்களை அருண் ஷோரி கோப்புகளில் வைக்காமலே விட்டுவிட்டார் அல்லது மறைத்து விட்டார் என்பதும் கண்டறியப் பட்டது.

இப்படி நாட்டுமக்களின் சொத்துக் களைத் தனியாருக்குத் தாரை வார்த்த இந்த அருண் ஷோரி யார்?

## யார் இந்த அருண் ஷோரி?

அருண்ஷோரியை வைகறை வெளிச்சம் வாசகர்கள் நன்றாக அறிவார்கள். காரணம் இவர் இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் தரக்குறைவாக விமர்சிப்பவர். இவரது உண்மை முகத்தை வெளிப்படுத்தும் அட்டைப்படக் கட்டுரை ஒன்று 1996 ஆம் ஆண்டு டிசம்பர் விடியல் வெள்ளி இதழில் இடம் பெற்றது. ஆனால் அப்போதைய வாசகர் வட்டத்தைவிட இப்போதைய வாசகர் வட்டம் விசாலமானது. இந்தப புதிய தலைமுறையும் இவரைத் நன்றாகத் தெரிந்திட வேண்டும் என்பதற்காக இவரைப் பற்றிய சுருக்கமான அறிமுகம் ஒன்றை இங்கே தருகின்றோம். 1996இல் இடம் பெற்ற அட்டைப் படக்கட்டுரைக்கு அறிமுக மாகிறார் அருண்ஷோரி எனத் தலைப்பிட்டி ருந்தோம்.

1996க்குப் பிறகு இவர் உருவிலும், கருத்திலும், கொள்கையிலும் மாறிப் போய்விட்டார். ஆகவே இவரது புதிய பட்ட வர்த்தனமான ஃபாசிச வெளிமுகம் வைகறை வெளிச்சத்தின் பூர்வீக வாசகர்களுக்கும் பயன்படும்.

அமைச்சராக ஆகி ஊழல் வெள்ளத்தில் மிதந்த அருண்ஷோரி ஒரு பொருளாதார மாணவர். பொருளாதாரத்தில் டாக்டர் பட்டம் (Ph.d.) வரை பெற்றவர். உலக வங்கியில் சிறிது காலம் பணியாற்றியவர். பின்னர் எழுத்துலகில் பிரவேசித்தார்.

பெங்களூரில் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" என்ற ஆங்கில நாளிதழின் ஆசிரியராக உயர்ந்தார். பின்னர் புத்தக உலகிலும் பிரவேசித்தார்.

அப்போது இவருக்கு இந்து மதம் என்றால் எட்டிக்காயாய்க் கசக்கும். இந்து மதம் மடமைகள் மிகுந்த மதம் என்ற கருத்துகளைச் சுமந்தார்.

எப்போதுமே அருண் ஷோரி தனது கருத்துக்கள் ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டவை என அலட்டிக் கொள்வார்.

அதே போல் இந்து மதத்தின் மீது தான் கொண்ட கருத்துக்களும் ஆராய்ச்சிகளின் அடிப்படையில் அமைந்தவை எனக் கூறினார்.

தனது கருத்துக்களை ஒரு நூலாகவும் எழுதி வெளியிட்டார். அந்த நூலின் பெயர் "Hinduism Essence and Consequence" (இந்து இஸம் - சாறும் அதன் விளைவுகளும்) இந்த நூல் 1979இல் வெளிவந்தது.

இந்த நூலில், தான் இந்து வேதங்களை ஆராய்ச்சி செய்த போது பின்வரும் உண்மைகள் வெளிப்பட்டதாக எழுதினார் அருண் ஷோரி. "இந்து வேதங்கள் முரண்பாடுகளின் மொத்த உருவங்கள். சொற்களின் பின்னல்களைத் தவிர இந்த வேதங்களில் எதுவுமில்லை. அவை எடுபடாத எதிர்பார்ப்புகளைக் கொண்ட வரட்டுத் தத்துவங்கள்."

இப்படி இந்து மதத்தைச் சாடிய அருண் ஷோரி இந்து மதத்தை எதிர்ப்பவர்களிடையே பெரியதொரு ஆதரவைப் பெற்றார். பெங்களூரிலேயே இவருக்குப் பாராட்டுக் கூட்டங்கள் ஏற்பாடயின.

ஆனால் பின்னர் இந்து மதத்தை நம்புபவர்களிடமிருந்து பயங்கர எதிர்ப்புகள் வந்தன. பெரியாரைப் போல், இதர சமூக சீர்த்திருத்தவாதிகளைப் போல், நிமிர்ந்து நிற்பார். எதிர்ப்புகளை நெஞ்சுரத்தோடு எதிர் கொள்வார் என எதிர்பார்த்தது உலகம். ஆனால் இவரோ பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போனார். அந்த நூலை அதன் பிறகு இவர் வெயிடவேயில்லை.

இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற ஆங்கில நாளிதழில் பணியாற்றிய காலங்களில் இவர் வேறொரு விவகாரத்தில் பிரபலமானார். அப்போது மராட்டிய மாநிலத்தில் ஏ.ஆர். அந்துலே என்றொரு முதலமைச்சர் இருந்தார். அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர். அவர் சிமென்ட் கம்பெனிகளுக்கு உரிமங்கள் 'லைசன்ஸ்' வழங்குவதில் லஞ்சம் வாங்கி விட்டார் என்றொரு செய்தி. அப்போது மத்திய அரசு காங்கிரஸ் கட்சியின் கைகளில். திருமதி இந்திரா காந்தி அவர்கள் தான் பிரதமர். இந்த ஊழலில் அவருக்கும் பங்கு தரப்பட்டது என்றொரு செய்தி. இவற்றையெல்லாம் இவர் கையகப்படுத்திக் கொண்டார். திருமதி இந்திரா காந்தி அவர்களையும் இந்த வழக்கோடு தொடர்பு படுத்திடும் சில ஆவணங்களையும், சில புகைப்படங்களையும் கையகப்படுத்திக் கொண்டார்.

அத்தனை ஆவணங்களையும், புகைப்படங்களையும் கையகப்படுத்திக் கொண்டு இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் கட்டுரைகளை எழுதினார். கட்டுரை நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது. கட்டுரையை எழுதுவதில் ஒரு புதிய உத்தியைக் கையாண்டார். முதல் நாள் தன்னிடம் எந்த ஆதாரமும் இல்லை என்பது போல் தொடங்குவார். அடுத்த நாள் மராட்டிய மாநில முதலமைச்சர் ஆதாரம் இருக்கிறதா? நிரூபிக்க இயலுமா? என கர்ஜித்து அறிக்கை விடுவார். அறிக்கை வந்த அடுத்த நாள் அருண்ஷோரி ஆதாரங்களை வெளியிடுவார்.

இதனால் இவரது கட்டுரைகள் தொடர்கதை போல் பரப்பரப்பாக படிக்கப்பட்டன.

இறுதியில் பிரதமர் இந்திரா காந்தியை இந்த ஊழலுடன் தொடர்பு படுத்தி எழுதினார். இந்திரா காந்தி மறுத்தார். அடுத்த நாளே சில புகைப்படங்களை வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தில் தன் மீது உரிமை மீறல் பிரச்னையை எழுப்புங்கள் நான் வந்து எனது எழுத்துக்கள் உண்மையானவை, ஆதாரப் பூர்வமானவை என்பதை நிரூபிக்கின்றேன் என்றார். நாடே அல்லோலகல்லோலப் பட்டது.

அந்துலேயின் அரசியல் வாழ்க்கை ஒரு முடிவுக்கு வந்தது. இன்றளவும் அவரால் தலை தூக்கிட இயலவில்லை.

பிற்றைய நாட்களில் நீதிமன்றங்கள் அவர் குற்றமற்றவர் எனத் தீர்ப்பளித்தன. ஆனாலும் மக்கள் மன்றத்தில் அவரால் எழ இயலவில்லை.

அவரை வீழ்த்திய பெருமை அருண் ஷோரியைச் சார்ந்தது.

இப்போது உண்மை தெரிகிறது. அந்துலே விஷயத்தில் அருண் ஷோரி அத்தனை அக்கறை எடுத்ததும் - ஒரு பெரும் போரைத் தொடுத்ததும் அவர் ஒரு முஸ்லிம் என்பதால்தான். அந்துலேயின் முழுப் பெயர் அப்துல் ரஹ்மான் அந்துலே! (Abdur Rahman Antulay) ஆனால் அன்று அருண் ஷோரி ஒரு ஃபாசிஸ்ட் என எவரும் பார்க்கவில்லை. ஒரு மதசார்ப்பற்ற பெரும் மாவீரனாகக் காட்சி தந்தார். அவரைப் பற்றி அப்போது இப்படிக் கூறினார்கள்.

அதாவது, “அருண் ஷோரி ஊழல், சமநிலையற்ற சமுதாயம், இவற்றிற்கு எதிராகவும் நீதியை நிலைநாட்டிடவும் தனது பேனாவை அழுத்தமாகப் பயன்படுத்தினார்.”

இப்படி கூறி அவருக்கு 1982க்கான ‘மேக்சேசே’ பரிசு வழங்கப்பட்டது.

இத்தோடு நிற்கவில்லை. அருண் ஷோரிக்கு அப்போது கிடைத்தப் பாராட்டுகள். உலக பத்திரிகைகளின் நிறுவனம் (World Press Review) இவருக்கோர் பட்டத்தையும் அப்போது வழங்கிற்று. அந்தப் பட்டம், இந்த வருடத்தின் (1982ன்) உலக பத்திரிகை ஆசிரியர் International Editor of the Year. அன்று எல்லோரும் அருண் ஷோரியை மாவீரர் என்று பார்த்தார்கள். பாராட்டி னார்கள்.

அன்று ஊழலுக்கெதிராக எழுதி பட்டமும், பதக்கமும், பாராட்டும் பெற்ற அருண் ஷோரி அதன் பின்னர் அந்துலேயை விஞ்சும் ஊழலில் சிக்கி கொண்டார். நாட்டு மக்களுக்குச் சொந்தமான சொத்தை சில தனி மனிதர்களுக்கு தாரை வார்த்துத் தந்து கோடானுகோடி ஏழை இந்தியர்களின் வயிற்றில் அடித்துவிட்டார்.

அன்று ஊழலுக்கெதிராக அடுக்கடுக் காய் ஆதாரங்களையும், ஆவணங்களையும் அள்ளி இரைத்த அருண் ஷோரி கோடிக்கணக்கில் தான் முன்னின்று செய்த ஊழல்கள் விவகாரத்தில் எந்த ஆவணத்தையும் கோப்புகளில் வைக்க வில்லை. அதை கண்டு பிடித்து அவனிக்கு அறிவித்தது அரசின் தணிக்கை குழு.

அருண் ஷோரியின் அன்றைய அனுபவம் இன்று அவருக்கு உதவி செய்துள்ளது. ஆமாம்! அன்று அந்துலே ஆவணங்களை கோப்புக்களோடு கோர்த்து வைத்ததால் சிக்கி கொண்டார். இன்று அருண்ஷோரி அந்த ஆவணங்களைக் கோப்புகளில் வைக்காததால் தப்பித்துக் கொண்டார்.

அன்று அருண் ஷோரி இந்து மதத்தின் அடிப்படைகளையே எதிர்த்தார். இன்று இந்து மதத்தின் எல்லா எல்லைகளையும் விஞ்சி செயல்படும் இந்து ஃபாசிசத்தின் கதாநாயகன், அமைச்சர்.

அன்று கொடிகட்டிப் பறந்த பத்திரிகையாளர் அருண் ஷோரி. ஆனால் இன்று பத்திரிகை உலகில் காணாமற் போய் விட்டவர். இவரைப் பற்றி இவருடைய சமகால பத்திரிகையாளர் எம்.ஜே. அக்பர் கூறும்போது, “Lies are his bullets” (பொய்களே எழுத்துலகில் அவர் பாய்ச்சும் தோட்டாக்கள்) என்றார்.

இவரை இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலிருந்து வெளியேற்றியதே இவர்

எழுதிய ஒரு பொய்தான். இவரை எழுத்துலகிலிருந்து வெளியேற்றிய பெருமை காலம் சென்ற மாபெரும் இஸ்லாமிய அறிஞர் அபுல் ஹஸன் அலீ நத்வி (ரஹ்) அவர்களைச் சாரும். அவரைத்தான் முஸ்லிம்களும், முஸ்லிமல்லாதவர்களும் பாசத்தோடு அலீமியான் என அழைப்பார்கள்.

1990களில் பாபரி மஸ்ஜித் பிரச்னை நாட்டை உலுக்கிக் கொண்டிருந்தது. அப்போது அருண்ஷோரி ஒரு கட்டுரையை எழுதினார். அந்தக் கட்டுரை அவர் ஆசிரியராக இருந்த இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் வெளியானது. கட்டுரையின் தலைப்பு "மஸ்ஜித் கஹாம் ஹே பாய்?" "பள்ளிவாசல் எங்கே இருந்தது சகோதரனே?" என்பதுதான். ஆங்கில கட்டுரைதான், ஆனால் தலைப்பை உருது மொழியில் கொடுத்திருந்தார். இந்தக் கட்டுரையில் ஒரு ஆதாரத்தை காட்டி இருந்தார்.

அந்த ஆதாரம்,

நமது அலீமியான் அவர்களின் தந்தை எழுதிய நூலிலிருந்து எடுத்தது எனக் குறிப்பிட்டார். அலீமியான் அவர்களின் தந்தை அங்கே கோயில் இருந்ததாகவும், அதை இடித்துவிட்டுப் பள்ளிவாசலைக் கட்டிய தாகவும்,குறிப்பிட்டிருந்ததாக கூறினார் ஷோரி.

உடனேயே அலீமியான் (ரஹ்) அவர்கள் பம்பாய் பறந்தார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழின் உரிமையாளர் கோயங்கா அவர்களைச் சந்தித்தார்கள். அருண் ஷோரி தன் தந்தையை இழுத்து எழுதியது ஜமுக்காளத்தில் வடிகட்டின பொய். என் தந்தை அருண் ஷோரி குறிப்பிடுவதுபோல் ஒரு நூலை எழுதவில்லை என்பதை ஆணித் தரமாகக் கூறினார். கோயங்கா, அருண் ஷோரி யை அழைத்து குறிப்பிட்ட ஆதாரத்தை காட்டுமாறு கூறினார். தலைகுனிந்து நின்றார் அருண் ஷோரி. இந்தியன் எக்ஸ்பிரஸை விட்டு வெளியேற்றப்பட்டார். இவரை வெளி யேற்றிய போது கோயங்கா இப்படிக் குறிப்பிட்டார், "ஒரு வரியில் சொல்லிட வேண்டியதை எட்டுப் பக்கத்திற்கு நீட்டி முழங்குகின்றார்."

அவற்றில் பொய்களே அதிகம். பத்திரிகைகளின் நீதி மன்றம் என அறியப்படும் பிரஸ் கவுன்சில் ஆஃப் இந்தியா இவருக்கு எதிராக எழுந்த வழக்கொன்றில் இப்படிக் குறிப்பிட்டது.

"அருண் ஷோரி மூடி இருக்கும் கதவுக்குள் என்ன நடந்திருக்கும் என்பதைக் கண்டுபிடிக்கும் அதிசய தெய்வீகச் சக்தி தனக்கிருப்பதாக சொல்லிட முடியாது. அவர் தன் அனுமானங்களை உண்மையின் உருவம் என எழுதிட முடியாது."

இது போன்ற கண்டனங்களுக்குப் பின்னால் அவரால் எழுத்து உலகில் தலைகாட்டிட இயலவில்லை. அதற்குள் ஃபாசிஸ்டுகள் அவரை கையகப்படுத்திக் கொண்டார்கள்.

இவர் இஸ்லாத்திற்கெதிராகவும், முஸ்லிம்களுக்கெதிராகவும் இரண்டு நூல்களை எழுதியுள்ளார். அவை,

1. Religion in Politics (அரசியலில் மதம்)

2. The world of Fatwas (மார்க்க தீர்ப்புகளின் உலகம்)

முதல் நூலில் திருக்குர்ஆன் வன்முறையை தூண்டுவதாகவும் அது பிற மதங்களைப் புண்படுத்துவதாகவும் அதனால் இந்தியச் தண்டனைச் சட்டம் 153A ன் கீழ் அதை தடைச் செய்ய வேண்டும் என்றும் பொருள் பட சில கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

இரண்டாவது நூலில் பல்வேறு மதரஸாக்களிலும் வழங்கப்பட்ட மார்க்கத் தீர்ப்புகளை கேலி செய்கின்றார்.

ஷாபானு வழக்கு, சல்மான் ருஷ்டி ஆகிய விவகாரங்களிலும் முஸ்லிம்களின் மனங்கள் புண்படும்படி எழுதினார்.

முஸ்லிம்கள் இவருடைய எழுத்துக் களுக்கு பதில் தரும் நூல்களை ஆங்கிலத் திலேயே எழுதிட வேண்டும். இவருடைய

விஷமங்களுக்குப் பதில் சொல்லாமல் விட்டால் இவருடைய எழுத்துக்கள் முஸ்லிம் அல்லாதவர்களின் உள்ளங்களில் வெறுப்பின் விதைகளைத் தூவிவிடும்.

1996ல் இவர் அம்பேத்கரை பழித்து எழுதியதற்காக இவர் முகத்தில் தலித்கள் கரியைப் பூசினார்கள். அப்போது இவர் ஒரு மேடையில் உரையாற்ற அமர்ந்திருந்தார்.

அம்பேத்கரைப் பழித்தும் ஒரு நூலை எழுதி உள்ளார். அதன் பெயர் Worshipping False Gods (தவறான கடவுள்களை வணங்குவது) எனப் பெயர். இந்த நூலுக்கு தலித் எழுத்தாளர்கள் ஆணித்தரமான மறுப்பொன்றை எழுதியுள்ளார்கள்! முஸ்லிம்கள்?

(குறிப்பு : அருண்ஷோரியைப் பற்றி இன்னும் விரிவாக அறிந்திட பார்க்க விடியல் வெள்ளி 1996 டிசம்பர்)

**அம்பலத்திற்கு வந்த பாரதீய ஜனதா ஆட்சிக் கால ஊழல்கள் இன்னும் சில**

வாஜ்பேயி தனது ஆட்சிக் காலத்தில் பாசிஸ்ட் ஒருவருக்கு உயர்பதவி ஒன்றை பரிசாகத் தந்திட விரும்பினார்.

அந்த உயர் பதவியை பரிசாகப் பெற்றவர் பீஷ்மா அக்னி கோத்திரி என்பவர்.

இவருக்கு பரிசாகத் தரப்பட்ட பதவி அமெரிக்காவில் வெளிநாட்டுத் தூதர் பதவி.

அமெரிக்காவிற்கென ஒரு தூதர் இருக்கவே இன்னொரு தூதர் பதவி உருவாக்கப்பட்டு இவருக்கு பரிசாகத் தரப்பட்டது.

அதுதான் இப்போது விவகாரமாகவும், ஊழலாகவும் ஆகிப் போனது. பொதுப் பணம் அமெரிக்காவில் பாழாக்கப்பட்டது.

ஒரு புதுக்காரணம் கண்டுபிடித்து அவருக்கு அஃதாவது பரிவார பக்தர் பீஷ்மா அக்னி கோத்திரிக்கு ஒரு புதுப் பதவியையும் உருவாக்கிக் கொடுத்தார்கள்.



இந்த புதுப்பதவிக்காக இவர்கள் சொன்ன காரணம், கடல் கடந்து வாழும் இந்தியர்களின் விவகாரங்களைக் கவனிப்பது என்பதாகும். இந்த கடல் கடந்து வாழும் இந்தியர்களின் விவகாரம் என்பது, இவர்களின் தொண்டர்கள், அதாவது பாசிச பரிவார தொண்டர்களின் இன்னொரு பதவி உயர்வை வழங்கும் நல்வாழ்வுதான். இதனை நமது இந்திய பத்திரிகையாளர் அமீத் பாடுவா குறிப்பிடும் போது இப்படிக் கூறுகின்றார்.

Bhisma Agnihotri was appointed in September 2001 in a move widely seen at that time as aid to appease the overseas supporters of the Bharatia Janatha Party and the Rashtriya Swayam Sevak Sangh.

பீஷ்மா அக்னி கோத்ரி 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நியமிக்கப் பட்டார். அந்த நேரத்தில் இந்த நியமனம், கடல் கடந்து வாழும் பாரதீய ஜனதா கட்சியின் ஆதரவாளர்களையும், ராஷ்ட்ரிய சுயம் சேவக் சங் என்ற (ஆர்.எஸ்.எஸ்.) தொண்டர்களையும் மகிழ்ச்சியடைய செய்வதற்குத்தான் என்றே பார்க்கப்பட்டது.

**(The Hindu, May, 2005)**

இவர்களுக்கு அதாவது ஆறு ஆண்டுகளாக வாஜ்பேயி ஆட்சி செய்த காலங்களில் யார் யாருடைய நலன்கள்

நாட்டின் நலங்களாகப் பார்க்கப்பட்டன என்பது தெளிவாகின்றது. மேலே நாம் காட்டிய மேற்கோள்களிலிருந்து இவர்களைப் பொறுத்தவரை கடல் கடந்து வாழும் இந்தியர்களின் நலம் என்பது, இவர்களது தொண்டர்களின் நலம் தான். பாசிச பரிவார தொண்டர் அக்னி ஹோத்திரிக்கு தரப்பட்ட பதவியின் பெயர் (ஆம்பாசிடர் அட் லார்ஜ்) (Ambassador at Large)

இதற்கு விளக்கமாக வாஜ்பேயி அரசு சொன்னது, ஏற்கனவே அமெரிக்கா விலிருக்கும் தூதருக்கு இவர் துணையாக இருப்பார் என்பதே.

ஆனால், அமெரிக்கா இப்படியொரு பதவியை நாங்கள் அங்கீகரிப்பதில்லை. இதனால் இவரை நாங்கள் ஓர் அரசு அதிகாரி என ஏற்றுக் கொள்ளவியலாது எனச் சொல்லிவிட்டார்கள். இவரை ஏற்றுக் கொள்ளவியலாது என்று சொன்னதோடு இவருக்கு, அமெரிக்காவில் (நியூயார்க் நகரில்) எங்கேயும் அலுவலகத்திற்கு இடமும் தர முடியாது எனக் கூறிவிட்டார்கள்.

ஆனால் வாஜ்பேயிக்கு 2001 ஆம் ஆண்டில் என்ன நெருக்கடியோ தெரிய வில்லை. எப்படியேனும் அக்கினி ஹோத்திரியை அமெரிக்கா அனுப்பியாக வேண்டும் என்ற கட்டாயம்.

டிசம்பர் 2002 இல் அக்னி கோத்ரிக்கு இன்னொரு பதவி உயர்வை வழங்கினார்கள். அஃது ஐக்கிய நாடுகளின் சபையின் நமது இந்தியப் பிரதிநிதியின் நிரந்தர ஆலோசகராக ஆக்கினார்கள். அமெரிக்கா இப்படியொரு பதவியையும் மறுத்தது. அதனால் இடம் கொடுக்க மறுத்தது. ஆகவே இவர் பல்வேறு ஹோட்டல்களிலும், அறை மாற்றி மாற்றி தங்கினார். இந்த விளையாட்டில் இவர் 51 லட்சத்து 38 ஆயிரம் ரூபாயை (டாலர் 105550) உல்லாசமாக வீணாக்கினார். இஃதல்லாமல் இவரது குடும்பத்தினரும் சங்பரிவாரத்தினரும் தங்கிட தனி வீடுகளும் எடுக்கப்பட்டன. அதிலும் பணம் பாழானது.

நாட்டுப்பற்றாளர்கள் விதேசத்தில் ஆடிய நாடகத்திற்கு நம் நாட்டு மக்கள் பணம் இப்படி விரயமானது. ஏறத்தாழ இந்த நேரத்தில் தாம் ஆந்திராவில் நெசவு தொழிலாளர்களும், இந்தியாவின் இதரப் பகுதிகளில் விவசாயிகளும் கடன் தொல்லையாலும், வறுமையாலும் தற்கொலை செய்து கொண்டிருந்தார்கள்.

ஃபாசிச பக்தர் பீஷ்மா அக்னி கோத்திரியின் உல்லாச செலவுகள் எந்த இலக்குமற்ற ஒரு பதவியில் நாளுக்கு நாள் ராகெட் வேகத்தில் அதிகரித்தது. மொத்தமாக அவர் செலவு செய்த உண்மையைச் சொன்னால் விரயம் செய்த பணம் ரூபாய் 15.95 கோடிகள்.

அமெரிக்காவில் பாரதீய ஜனதா கட்சி தொண்டர்கள், ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் இவர்களின் நலன்களைக் காக்க நாட்டு ஏழைகளின் நல் வாழ்வுக்குப் பயன்பட்டிருக்க வேண்டிய பணம் பயன்படுத்தப்பட்டது.

அலுவலகமே கிடைக்காததால் இறுதியில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்தார்கள். வாடகைக்கு எடுத்த போது வீட்டுச் சொந்தக்காரர்கள் சொன்ன நிபந்தனைகளையெல்லாம் ஒத்துக் கொண்டார்கள். இந்த நிபந்தனைகளுள் ஒன்று, ஆகஸ்ட் 2005 வரை குடியிருந்தாலும் இல்லாவிட்டாலும் வாடகை தந்துவிட வேண்டும் என்பதாகும்.

இவர்கள் 2004 அக்டோபரில் வீட்டைக் காலி செய்துவிட்டார்கள். ஆனால் வாடகை கொடுத்துக் கொண்டுதான் இருந்தார்கள். இதன் மூலம் பல லட்சம் ரூபாய்கள் குடி இருக்காத அமெரிக்க வீட்டுக்கு வாடகையாகப் போனது.

இவர்கள் அங்கே இருந்த காலங்களில் வாடகைக் கார்களில் பவனி வந்தார்கள். ஜூலை 2003 வரை இவர்கள் வாடகையாகக் கொடுத்தப் பணம் 63.39 லட்சங்கள். ஆகஸ்ட் 2003 இல் 18.28 லட்சங்களுக்கு ஒரு காரை விலைக்கு வாங்கினார்கள். அதில் பின்னர் 13.54

லட்சங்களை அதிகமாகச் செலவு செய் தார்கள். இப்படி இவர்கள் அமெரிக்காவின் உயர்தர கார்களில் உல்லாசப் பயணம் செய்வதற்காக செலவு செய்த பணம் ஒரு கோடி.

எந்த இலட்சியமுமில்லாத ஒரு பதவிக்கு இந்த நாட்டுப் பற்றாளர்கள்? ஏழைகளின் நல்வாழ்வுக்குப் பயன்பட்டிருக்க வேண்டிய பணத்தை இப்படி பாழாக்கினார்கள்.

இதிலும் ஒரு முழு அளவு விசாரணை தேவைப்படுகின்றது. அப்போது மட்டுமே இதில் உள்ள எல்லா தில்லுமுல்லுகளும் தெரியவரும்.

## இந்தியா ஒளிர்கிறது ஊழல்

பாரதீய ஜனதா கட்சி ஆட்சியின் இறுதி நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருந்த போத இவர்கள் ஓர் அதிசய விளம்பர உத்தியைக் கையாண்டார்கள். அதுதான் இந்தியா ஒளிர்கிறது என்ற விளம்பரம். இவர்களது கட்சி 2004 பொது தேர்தலைச் சந்திக்க முன்வைத்த முழக்கமே இந்த ‘இந்தியா ஒளிர்கிறது’ என்ற முழக்கம்.

இவர்கள் தங்கள் கட்சியின் தேர்தல் செலவுக்கும் பொதுமக்களின் வரிப் பணத்தையே கொள்ளையடித்தார்கள். 63.23 கோடி ரூபாயை அதாவது அரசு பணத்தைத் தங்கள் கட்சிக்காகப் பயன்படுத்தினார்கள்.

இந்தப் பணத்தை எந்தக் காரணத்தைக் கூறி பொது நிதி கருவூலத்தில் இருந்து எடுத்தார்கள் என்பது இன்னும் வேதனையாது.

Cooperation with other countries.

ஏனைய நாடுகளுடன் ஒத்துழைப் பதற்கான நிதி என்று காரணங்காட்டித்தான் எடுத்துள்ளார்கள்.

இவர்கள் சொன்ன காரணம் மொட்டைக் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டது போல் இருக்கின்றது.

பின்னர் இந்தியா ஒளிர்கிறது என்ற பெயரில் இந்தியாவின் புகழை சர்வதேச அரங்கில் நிலை நாட்டுவதற்காகவே இந்தப் பிரச்சாரத்தை மேற்கொண்டோம் என வியாக்யானம் சொன்னார்கள்.

இந்தப் பணம் அனுமதியின்றி அவசியமுமின்றி விரயம் செய்யப்பட்ட பணம் என அரசு தணிக்கைக் குழு அறிவித்துள்ளது.

பொது நிதி கருவூலம் இவர்களின் கைகளுக்கு சென்றால் என்ன நடக்கும், குரங்கு கை பூமாலையாக மாறும் என்பதற்கோர் உன்னதமான எடுத்துக் காட்டே. இந்த இந்தியா ஒளிர்கிறது பிரச்சாரத்தில் அவர்கள் வீணாக்கிய பணம். இதனை தணிக்கைக் குழு வன்மையாகக் கண்டித்தது.

## ஃபாசிஸ்டுகளின் ஊழலால் உயிரிழந்த நமது இராணுவ வீரர்கள்

நமது நாட்டின் எல்லையோரப் பகுதிகளில் எதிரிகள் கன்னி வெடிகளைப் புதைத்து வைத்திருந்தனர்.

இப்படி பதுக்கி அல்லது புதைத்து வைக்கப்படும் கன்னி வெடிகளைக் கண்டுபிடித்து அவற்றை அகழ்ந்தெடுத்திடும் கருவிகள் பல கண்டு பிடிக்கப்பட்டன. வேகமாக அகற்றும் மிகவும் நவீன கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. நமது இராணுவத்தினர் இந்தக் கருவிகளை உடனடியாகத் தருவித்து தந்திட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள் ஆட்சியில் அமர்ந்திருந்தவர்களை. அதாவது, வாஜ்பேயி தலைமையிலான அரசிடம். உடனேயே அவசர நடவடிக்கை நெறி முறை என்றொன்றை அறிவித்தது அப்போது நாட்டை ஆட்சி செய்த வாஜ்பேயி அரசு (Fast Track Procedure). இதன் பொருள் கருவிகளை வாங்குவதில் வழக்கமான நெறி முறைகள் பின்பற்றப்பட்டால் காலம் தாமதமாகும். ஆதலால் நெறி முறைகளைப் பின்னுக்கு தள்ளி விட்டு உடனேயே கருவி களை வாங்கி வேண்டும் என்பதே.

அறிவிப்புத்தான் உடனேயே வந்தது. ஆனால் இந்தக் கருவிகளை அதாவது நிலத்திற்குள் கன்னி வெடிகளைக் கண்

டெடுத்து அப்புறப்படுத்தும் கருவிகள் வந்து சேர்ந்திடவில்லை. இதனால் கருவிகள் எதுவுமில்லாமல் நமது இராணுவ வீரர்கள் தங்கள் கைகளைக் கொண்டே அவற்றை அகற்றிட வேண்டிய அவலநிலைக்கு ஆளானார்கள்.

இதனால் 60 இராணுவ வீரர்கள் அநியாயமாகத் தங்கள் இன்னுயிரை இழந்தார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் கைகால்கள் துண்டிக்கப்பட்டவர்களானார்கள்.

இந்த உண்மைகளையெல்லாம் அப்போது இந்த பாசிஸ்டுகள் மறைத்தே விட்டார்கள்.

கார்கில் போரின்போது இவர்கள் போருக்கு தேவையான தளவாடங்களில் 75 சதவீதம் தளவாடங்கள் போர் முடிந்த பின்பே தருவித்தார்கள். இதனை அப்போதே நிபுணர்கள் சுட்டிக் காட்டினார்கள். அப்போதைய தணிக்கை குழுக்களும் அதன் பின்னர் தணிக்கை குழுக்களும் ஒன்று போலவே வாஜ்பேயி அரசை குற்றம் சாட்டின. அப்போது நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற நிலைக் குழு (Parlimentary Standing Committee) வும் இந்த விவகாரத்தில் சம்மந்தப்பட்ட வர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

கன்னி வெடிகளை மாற்றுகின்ற இயந்திரங்களைப் பொறுத்தவரை, எல்லா விதிகளையும், நெறிமுறைகளையும் புறந்தள்ளி விட்டு என்ன விலையைத்தந்தும் அந்த இயந்திரங்களை உடனேயே வாங்கிட வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

இயந்திரங்களைத் தருபவர்கள் நான்கு மாதங்களுக்குள் தருவதாக நமது இராணுவ அமைச்சகத்திற்கு வாக்களித்தார்கள். ஆனால் நமது வாஜ்பேயி தலைமையிலான அரசு ஒன்பது மாதங்களாக அந்தக் கால அவகாசத்தை நீட்டிக் கொடுத்தது. அந்த ஒன்பது மாதத்திலும் அது கிடைக்கவில்லை. இதற்குள் இராணுவத்தினர் 99.5 சதவீதம் கன்னி வெடிகளை தங்கள் உயிரை பணையம் வைத்து அகற்றிவிட்டார்கள்.

**(தணிக்கை குழு அறிக்கை,**
The Hindu**, 7.5.2005)**

இதனால் நமது இராணுவ வீரர்கள் அல்லல்களுக்கும் இறப்புக்களுக்கும் ஆட்பட்டார்கள். இயந்திரங்களை தருவிக்க ஒன்பது மாதங்கள் எடுக்கும் என்றால் உலகிலுள்ள ஏனைய கம்பெனிகளில் இராணுவ நிறுவனங்களில் பேரம் பேசி குறைந்த விலைக்கு அந்த கன்னி வெடிகளை அகற்றும் இயந்திரங்களை வாங்கி இருக்கலாம். ஆகவே விலை குறைத்து வாங்கும் வாய்ப்பும் அற்றுப்போய்விட்டது. கேட்ட விலையைக் கொடுத்தும் குறித்த நேரத்தில் அவை கிடைக்கவில்லை. அவசர நடவடிக்கை நெறிமுறை என்றொன்றை ஏற்படுத்தியதற்கு எந்த மரியாதையும் இல்லை என்றாகிவிட்டது. 2.78 லட்சம் கன்னி வெடிகளில் நமது இராணுவ அமைச்சகம் கேட்ட விலையைக் கொடுத்து காலந்தாழ்ந்து வாங்கிய இயந்திரங்களைக் கொண்டு அகற்றிய கன்னி வெடிகள் 1,182கள்தாம். அதாவது 0.42 சதவிகிதம்தான்.

இவற்றையெல்லாம் தனிக்கைக் குழுக்கள்தாம் கண்டுபிடித்து உலகுக்கு அறிவித்தன. இந்த லட்சணத்தில் ஜூன் மாதம் இவர்கள் பாசிஸ்டுகள், கார்கில் வெற்றியைக் கொண்டாடினார்கள். ஏதோ இப்படி எல்லா நிலைகளிலும் ஊழலும் மோசடிகளும் நிறைந்த ஒரு ஆட்சியைத்தான் வாஜ்பேயி, அத்வானி வகையறாக்கள் நடத்தின.

சென்னை 2004 தேர்தலின் போது சவப்பெட்டி ஊழல் இன்னும் ஜார்ஜ் பெர்ணாண்ட்ஸின் ஊழல்கள் அத்வானியின் எல்லையோர வேலி ஊழல், வாஜ்பேயின் தங்க சாலை ஊழல் இவைதாம் அம்பலத்திற்கு வந்தன. அனைத்தையும் மிஞ்சி குஜராத் படுகொலைகளே தாம் மக்கள் மனதில் நின்றன. நாம் மேலே சுட்டிக்காட்டிய ஊழல்கள் மே 6,2006 வெள்ளி அன்று நாடாளுமன்றத்தில் தணிக்கைக் குழுவின்

அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே இவை அம்பலத்திற்கு வந்தன. ஆகவே இவற்றையும் மக்கள் மன்றத்தில் வைப்பது நாட்டு மக்களுக்கு நாம் ஆற்றிட வேண்டிய மிக முக்கியமான சேவை.

தமிழகத்தில் பாசிஸ்டுகளுக்கு நாடாளுமன்றத்தில் ஒரு இடம் கூட இல்லை என்றாக்கிய பெருமை மக்களைச் சாரும். MNPயும் விடியல் வாசகர்களும் இதில் ஆற்றிய தொண்டை நாடு மறக்காது. எதிர் வரும் சட்டசபை தேர்தலிலும் இவர்களை முகவரி இல்லாமல் ஆக்கிட வேண்டும். அதற்காக இவர்கள் அரசியலில் இருந்தால் என்னென்ன நடக்கும் என்பதை நாம் மக்கள் மன்றத்தில் பட்டியல் போட்டுக் காட்ட வேண்டும்.

இதனைச் செய்திட வேண்டியது முஸ்லிம்களின் தலையாயக் கடமை. ஏனெனில் அவர்கள் நன்மையை ஏவி தீமையைத் தடுப்பதற்காகப் படைக்கப் பட்டவர்கள்.

இறைவன் கூறுகின்றான்,

'மனிதர்களுக்காகத் தோற்றுவிக்கப் பட்ட சமுதாயத்தில் சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கின்றீர்கள். ஏனெனில் நீங்கள் நன்மையை செய்ய ஏவுகிறீர்கள். தீயதை விட்டும் விலக்குகிறீர்கள். இன்னும் அல்லாஹ்வின் மேல் திடமாக நம்பிக்கைக் கொள்கின்றீர்கள்.'

**(அல்குர்ஆன் 3:110)**

**எம்.ஜி.எம்.**

## கல்விக்காக ஒதுக்கிய நிதியை மதக் கலவரங்களுக்கு பயன்படுத்திய தேசத்துரோகிகள்

ஃபாசிச தாய்கழகமான ஆர்.எஸ்.எஸ். என்ற அருமைப் பிள்ளைகளில் விஸ்வ ஹிந்து பரிஷத்தும் (வி.எஹச்.பி.) ஒன்று.

இந்த வி.ஹெச்.பி.வும் தன் பங்குக்கு பல விஷ ஜந்துக்களை ஈன்றுள்ளது.

அவையாவன:

1. FTS (Fridens of Tribal Society) என்றழைககப்படும் "பழங்குடியினரின் நண்பர்கள் குழுமம்" என்ற அமைப்பு.

இந்த அமைப்பின் வால்தான் "ஏகல் வித்யாலயா" என்றழைக்கப்படும் ஓராசிரியர் பள்ளிக் கூடங்கள்.

அதாவது வி.ஹெச்.பி.யின் பெயரில் பாசிச சிந்தனையையும், தேசத்துரோக கருத்துக்களையும் பயிற்றுவிக்கும் பள்ளிக் கூடங்களை நடத்தினால் கண்டுபிடித்து விடுவார்கள் என்பதற்காகவே இந்த ஏற்பாடு.

இந்த "ஏகல் வித்யாலயா" எனப்படும் ஓராசிரியர் பள்ளிகளைப் பற்றி ஃபாசிச ஆர்.எஸ்.எஸ். கும்பல் தனது ஆண்டறிக்கை களிலும் வெளியீடுகளிலும் இப்படியொரு தம்பட்டம் மடிப்பதுண்டு.

"சாலைகள் சென்றடைய முடியாத கிராமங்களில் கூட எங்களது பிரச்சாரக்குகள் சென்றடைந்து, அங்கேயே தங்கி கலாச்சாரப் பெருமைமிக்க ரிஷி முனிகள் பாணியில் குருகுலக்கல்வியை நமது வனவாசி சகோதரர்களுக்கு அளிப்பதுதான் இதன் நோக்கம்.

கல்வியாவது, கத்திரிக்காயாவது, மதக்கலவரங்களுக்குத்தான் அங்கே வித்திடப் படுகின்றது என்றொரு உண்மையை மத்திய அரசின் மனித ஆற்றல் மேம்பாட்டு அமைச்சகம் நடத்திய ஆய்வு கண்டுபிடித்தது. 1999-2002 ஆம்ஆண்டு (அதாவது பாரதீய ஜனதா கட்சி ஆட்சியில்) முதலே புதுமையான மாற்றுமுறை பரீட்சார்த்த அடிப்படையிலான கல்வி உத்திரவாதத் திட்டத்தின் கீழ்தான் பெருமளவிலான நிதியை ஏகல் வித்யாலயாக்கள் பெற்றுள்ளன.

அரசின் இக்கல்வித்திட்டத்தின் நோக்கமே மக்களின் அனைத்து பிரி வினருக்கும் கல்வி ஒளியை சேர்த்து விட வேண்டும் என்பதே.

ஆனால் அனைத்து மத, இன, மொழிப் பிரிவுகளையும் சார்ந்த இந்தியக் குடிமக்களிடமிருந்து பெறப்படும் இந்த வரிப்பணம் அரசு சாரா தொண்டு



அமைப்புகளுக்குத்தான் என்ற போர்வையில் வக்கிர கொள்கையை (ஹிந்துத்துவ ஃபாசிசம்) வளர்ப்பதற்கே பயன்படுகின்றன என்று மத்திய அரசுக்கு வந்த பல முறையீடுகள் தெரிவித்தன.

இதையடுத்து அன்று மத்தியில் ஆளும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு வி.எச்.பி.யின் துணை அமைப்பான F.T.S. செயல்பாடுகளை பற்றிய விசாரணை முடியும் வரை F.T.S.க்கு நிதியுதவியை இடை நிறுத்தி வைத்திருந்தது மனித மேம்பாட்டு அமைச்சகம் (அதாவது கல்வி அமைச்சகம்). விசாரணை முழுமையடைந்த பின் நிதியுதவியை முழுமையாக நிறுத்திவிட்டது.

## மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகம் நியமித்திருநத விசாரணைக் குழு கண்டறிந்த உண்மைகள்:

கடந்த 2002-2003 ஆண்டில் F.T.S. என்ற வி.எச்.பியின் நிழல் அமைப்பின் மேற்கு வங்காளக் கிளை 49.97 லட்சம் ரூபாயையும், அஸ்ஸாம், மேற்குவங்காளம், ஜார்க்கண்ட் ஆகியவை மொத்தமாக 1.04 கோடி ரூபாயையும் பெற்றுள்ளன.

இதில் மேற்குவங்காள F.T.S. என்ற ஃபாசிசத்தின் கிளைதான் பெருமளவிலான நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுள்ளது. இவை அனைத்தும் புதுமையான மாற்றுக் கல்வித்திட்டம் என்ற பெயரில் வழங்கப் பட்டுள்ளன.

இந்த மோசடிக்கு முந்தைய ஃபாசிச (பி.ஜே.பி.) அரசின் மனித வள அமைச்சகத்தோடு போட்டி போட்டுக் கொண்டு ஊரக மேம்பாடு பழங்குடியினர் நலன் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப பெண்கள் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சங்களும் துணை நின்றுள்ளன. அதாவது, வி.ஹி.ப.வின் ஓராசிரியர் கல்விக் கூடங்களுக்கு (ஏகல் வித்யாலயா) ஊர்ப்பணத்தை அள்ளி அள்ளி இறைத் துள்ளார்கள்.

பழங்குடியினருக்கும் அறிவியல் தொழில் நுட்பத்திற்கும் பெண்கள், குழந்தைகள் மேம்பாட்டிற்கும் வி.ஹி.ப.வின் F.T.S. ஏகல் வித்யாலயாக்கள் செய்த சேவைகள் இதோ,

இந்த நிதியுதவி முழுவதும் சிறுபான்மை யினர் (முஸ்லிம், கிறிஸ்தவர்கள்)களுக் கெதிராக வெறுப்பையும், வெறியையும் உருவாக்குவதற் காக அதற்காக பள்ளிக் குழந்தைகள் மனதை நஞ்சூட்டுவதற்காகவும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

2. வருகைப்பதிவேட்டின் போது 'ஜெய் ஸ்ரீ ராம்' என்ற மதவெளிக் கூச்சல் ஒலித் திடும்படி இளம் பிஞ்சகளை நிர்ப்பந்திக்கப் பட்டுளளன.

3. ஆங்கில அரிச்சுவடிகளில் ஹிந்து கடவுளர்களின் பெயர்களை திணித்துள்ளன.

(ஆதாரம் : The Hindu, May 19, 2005)

சுருங்கக்கூறின் சிறுபான்மை மக்களை வேரோடு அழித்தொழிப்பதற்கான ஒரு முழு வீச்சிலான தேசத்துரோக செயலைச் செய்வதற்கு நம் நாட்டு மக்களின் வரிப்பணம் ஃபாசிஸ்டுகளின் (பா.ஜ.க.) ஆட்சியில் வாரி இறைக்கப்பட்டுள்ளது.

## வி.ஹி.ப. ஏகல் வித்யாலயாக்களின் தகிடுத்தத்தங்களும் மோசடிகளும்

F.T.S. என்ற "பழங்குடியினரின் நண்பர்கள் அமைப்பு" பல்வேறு பெயர்

களிலும் அடையாளங்களிலும் இயங்கி வருகின்றன.

குழந்தைகளின் மனதை சீரழித்த இவர்கள், தங்களின் ஓராசிரியர் கல்விக் கூடங்கள் (ஏகல் வித்யாலயா) மாணவர் எண்ணிக்கையை பெருக்கிக் காட்டுவதற்காக அரசு நடத்தும் பள்ளிக் கூடங்களின் மாணவர் பதிவேட்டை அப்படியே காப்பியடித்து தங்களது பள்ளிக்கூட மாணவர்களாக காட்டியுள்ளனர் இந்த மோசடி மன்னர்கள்.

நாட்டின் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் பாதியை ஸ்வாஹா செய்த F.T.S. என்ற ஃபாசிச நிழல் அமைப்பு கல்விக்கென ஒரு சல்லிக் காசை செலவிடவில்லை. அதாவது, எழுதப்படிக்க உதவும் சாதனங்கள் (எழுது பொருட்கள், கரும்பலகை குறிப்பேடுகள், பாடநூல்கள்) எதையுமே தனது ஏகல் வித்யாலயா கல்விக் கூடத்திற்கு வாங்கித் தரவில்லை.

அப்படியே தப்பித்தவறி இருந்த கல்வி கற்கும் சாதனங்களும் சர்வ சிக்ஷா அபியான் (அனைவருக்கும் கல்வி) என்ற மத்திய அரசின் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டவையே.

மேற்கண்ட சங்க பரிவாரத்தின் மோசடிகளை ஜார்க்கண்ட் மாநிலம் சிடங்பும் மாவட்டம், அஸ்ஸாமின் தின்சுகியா, திப்ருகர் மாவட்டங்களில் ஆய்வு செய்த மனித வள அமைச்சகத்தின் குழு கண்டு பிடித்தது.

நாட்டு மக்களின் வரிப்பணத்தை கபளீகரம் பண்ணியதோடு மட்டுமில்லாமல், இந்நாட்டை சீரழிக்க பழங்குடியினரின் கல்விக்காக என்ற போர்வையில் வெளி நாட்டுப் பணத்தை பெருமளவில் பா.ஜ.க.வும் நிழல் அமைப்பான பழங்குடியினரின் நண்பர்கள் குழுமம் (F.T.S.) பெற்றிருக்கின்றன.

பழங்குடி மக்களின் நண்பர்கள் குழுமம் (F.T.S.) என்ற கொலைகார ஃபாசிச நிழலமைப்புக்கான தொடர் நிதியுதவியை நிறுத்திய அன்றைய மத்திய அரசை நாம் மனதார பாராட்டுகிறோம்.

அத்துடன் நில்லாது இந்த விஷப்பல்லை முற்றிலும் வேரோடு களைந்து எறிய வேண்டும்.

இது தொடர்பான நமது கோரிக்கைகள் என்னவெனில்,

முறைகேடாக விநியோகிக்கப்பட்ட கல்வி நிதியுதவியைக் கைப்பற்ற வேண்டும்.

வெளிநாட்டுப் பண மோசடிக்கு தண்டிக்க வேண்டும்.

ஃபாசிச செயல்திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகைக்கு காரணமானவர் களை தண்டிப்பதோடு அவை என்னென்ன நாச காரியங்களுக்கு செலவிடப்பட்டன என்பதை பகிரங்கப்படுத்த வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ்.ன் நேரடிக் கல்விப் பிரிவான "வித்யா பாரதி" என்றதொரு துணை அமைப்பு. நாடு முழுக்க பிஞ்சு நெஞ்சுகளில் நஞ்சை விதைத்து வருகின்றது. இந்த துணை அமைப்பின் கீழ்:

1. சரஸ்வதி சிசு மந்திர் என்ற பாலர் பள்ளிகள்.

2. குரு குலங்கள். பள்ளிகள் கல்லூரிகள் என்பன பல்லாயிரக்கணக்கில் நாடு முழுவதும் இயங்கி வருகின்றன. இவற்றில் உண்மை யிலேயே என்ன நடந்து கொண்டிருக்கின்றன என்பதைக் கண்டறிந்திட வேண்டும்.

இங்கேயும் தேசத்துரோக செயல்கள் நடந்து கொண்டிருக்கும் பட்சத்தில் அவற்றை மாற்றியமைக்க வேண்டும் அல்லது மூடிட வேண்டும்.

இவற்றை செய்தால் மட்டுமே கல்வி என்ற புனிதமான செல்வம் காவியால் களங்கப்படாமல் காப்பாற்றப்படும். எதிர் கால இந்தியா வலுவானதாகவும், வகுப்பு கலவரங்கள் அற்றவையாகவும் அமையும்.

## பா.ஜ.க.வின் சவப்பெட்டி ஊழல்

நவம்பர் 2001ல் பா.ஜ.க.வின் இரண்டு ஆண்டு ஆட்சி முடிவடைந்தது. எல்லாத் துறைகளிலும் தோல்வி. நாட்டின் பாதுகாப் பிற்கே ஆபத்து!



இவர்கள் ஆட்சிக்கு வர இவர்களுக்கு மிகப் பெரிய அளவில் உதவி செய்தது கார்கில் வெற்றி.

கார்கில் வெற்றியைக் காட்டி இவர்கள் ஆட்சிக்கு வந்து விட்டாலும் அந்த வெற்றி நமது இராணுவ வீரர்கள் பெற்றத் தந்த வெற்றி. அப்போதும் இவர்கள் தங்களுக்கு நிர்வாகத்தில் எந்தத் திறமையும் இல்லை என்பதையே தெளிவுபடுத்தினார்கள்.

கார்கிலில் பாகிஸ்தானின் முன்னேற் பாடுகள் எதையும் இவர்களால் அனுமானிக்க இயலவில்லை.

நமது உளவுத்துறை உலகத்திலேயே குறிப்பிடத்தக்க ஆற்றல் பெற்றதொரு உளவுத்துறை. இந்த உளவுத்துறை சரியாக இயக்கப்படவில்லை. இதனை ஃபிரண்ட்லைன் ஏடு இப்படிச் சொல்லியது.

The crisis in Kargil has its orgins in the BJP led government's failure to comprehend the strategic consequences of Pokhran II and its political blindness and failure to act on military intelligence warnings.

**Frontline July, 2, 1999**

இதன் சுருக்கம்,

'கார்கிலில் நமது பிரச்னைக்குக் காரணம் பாரதீய ஜனதா தலைமையில் நடக்கும் அரசு (போக்ரான் 2) இரண்டாவது அணுகுண்டு வெடிப்புக்குப் பின் என்ன நடக்கும் என்பதைப் புரிந்து கொள்ளத் தவறியதுதான். அதே போல் இந்த அரசின் அரசியல் குருட்டுத்தனமும் உளவுத்துறை தந்த எச்சரிக்கையில் செயல்படாமையும்தான் (நமது கார்கில் பிரச்னைக்குக் காரணம்!)'

இதனால் பாகிஸ்தான் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை.

நமக்குக் கடுமையான உயிர்ச் சேதங்கள். அதன் பின்னர்தான் கார்கில் வெற்றி!

இராணுவம் பெற்ற வெற்றியை இவர்களின் கட்சி பெற்ற வெற்றி போல் காட்டி ஆட்சியைப் பிடித்தார்கள். அந்தத் தேர்தல் விளம்பரங்களில் கார்கில் வீரர்களையும், தேசியக் கொடியையும் தங்கள் உருவப்படத்தையும் ஒன்றாகக் காட்டினார்கள். அந்தத் தேர்தலையே கார்கில் தேர்தல் என்றுதான் அழைக்கிறார்கள்.

**Frontline September 24,1999**

நமக்கு ஏன் இத்துணை கடுமையான நஷ்டங்கள் என்பதை ஆராய்ந்திட பின்னர் விசாரணைக் கமிஷன் போடப்பட்டது. அந்தக் கமிஷன் இவர்களின் இயலாமையைப் படம் பிடித்துக் காட்டிற்று.

அதன் பின்னர்தான் இவர்கள் இராணுவத் தளவாடங்கள் வாங்குவதில் அடித்தக் கொள்ளைகள் அம்பலமாயின.

இதைத்தான் 'டெஹல்கா வெளிப்படுத்திய ஊழல்' என வரலாறு பதிவு செய்துள்ளது. சில்லறைக் கமிஷன்களுக்காக நாட்டின் பாதுகாப்புத் துறையிலேயே ஊழல். உதிரிப் பொருள்கள் வாங்குவதில் ஊழல்.

இதன் வழி இவர்களின் ஊழல் புத்தியும், நாட்டுப் பற்றும் ஊர் உலகமெல்லாம் நாறிற்று. டாலரில் லஞ்சம் வாங்கி சாதனை படைத்தார்கள்.

இவர்களின் நாட்டுப்பற்று டாலர் நோட்டுகளுக்குப் பின்னால்தான் என்பது தெளிவாயிற்று.

இந்த ஊழல் அம்பலமானவுடன் அதி நவீன அறிவிப்பு ஒன்றைச் செய்தார்கள்.

"உதிரிப் பொருள்களை இந்திய கம்பெனிகளிடம் வாங்குவதிலும் வாங்கித் தருவதிலும்தான் ஊழல் என்றால் இனி அதையும் அந்நியர்களுக்கே தாரை வார்க்கின்றோம்" எனக் கூறி அதனையும் அந்நியர்களுக்கே கொடுத்தார்கள், கொள்ளையடித்தார்கள்.

போரிலும் கொள்ளை . . . போரில் இறந்தவர்களின் உடலை அடக்குவதிலும் கொள்ளை. .

குளிரில் இறந்தவர்களின் உடல்களை எடுத்து வர அலுமினியச் சவப்பெட்டிகளை வாங்கி இருக்கிறார்கள். அத்தோடு நிரம்ப பாலித்தீன் பைகளையும் வாங்கியுள்ளார்கள்.

இவை அனைத்திலும் மனசாட்சியைப் பிடுங்கி வைத்துவிட்டு தங்கள் பணம் பண்ணும் வேலையைத் தொடர்ந்துள்ளார் கள். சுருக்கமாகச் சொன்னால் கொள்ளை அடித்து இருக்கின்றார்கள்.

ஒரு சவப்பெட்டியின் விலை 172 டாலர் ஆகும். அதாவது சுமார் ரூபாய் 7000 தான். இந்த விலைக்குத்தான் முன்னர் (1994) வாங்கி இருக்கின்றார்கள்.

எவ்வளவு பணத்தைக் கொள்ளை யடித்து இருக்கின்றார்கள் என்பதை நாம் மிக எளிதாகக் கணித்து விடலாம். ஒரு சவப்பெட்டியில் 93,000 ரூபாய் கொள்ளை. இப்படி 150 பெட்டிகளை வாங்கி இருக்கின்றார்கள்.

இப்படி நாட்டுக்காக உயிரைத் தந்தவர்களின் பிணங்களை வைத்து பணங் களைக் கொள்ளையடிப்பதை இலட்சிய மாகக் கொண்டவர்கள் நாடாளவந்து விட்டார்கள் என்பதுதான் இப்போது நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் மிகப்பெரிய அவலம்.

இந்தப் பகற்கொள்ளையை நடத்திய இராணுவ அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் தான் டெஹல்கா ஊழல் விவகாரத்தில் பதவி துறந்தார்.

நாட்டின் பாதுகாப்பையே பணயம் வைத்து இலாபம் தேடிடும் இவரை. லஞ்சம் வாங்கிடும் இவரை 'உத்தமர்', 'நல்லவர்' என்றெல்லாம் புகழப்படும் வாஜ்பாய் மீண்டும் பதவியில் அமர்த்தினார்.

அதுவும் முந்தைய ஊழல் வழக்கில் விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது அவர் மீண்டும் இராணுவ அமைச்சராக நியமிக்கப்பிட்டார்.

இதிலிருந்து வாஜ்பாய் எந்த அளவுக்கு உத்தமராகவும், நல்லவராகவும் இருக்கின்றார் என்பதை மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

சவப்பெட்டியில் நடந்த ஊழல் நமது எதிர்கட்சிகள் கண்டு பிடித்ததல்ல. இது நமது அரசாங்கத்தின் இன்னொரு அமைப்பான 'தணிக்கைக் குழு' கண்டு பிடித்து நாட்டு மக்களுக்கு தந்த செய்தியாகும்.

இதைத்தான் CAG (Comptroller and Auditor General of India) என அழைக்கின்றோம்.

இந்திய தணிக்கைக் குழு இப்படிக் கூறியுள்ளது:

Kargil was an excuse to push throgh procurement.

**The Hindu 12.12.2003**

இதன் பொருள்:

"கார்கில் போரை ஒரு திரையாகப் பயன்படுத்திக் கொண்டு பொருள்கள் வாங்கப்பட்டிருக்கின்றன"

இன்னும் விளக்கமாகச் சொன்னால் கார்கில் போரைப் பயன்படுத்திக் கொள்ளை அடித்திருக்கின்றார்கள்.

இந்தத் தணிக்கைக் குழு இன்னும் பல ஊழல்களைப் பட்டியல் போட்டது. அவற்றின் விவரம் வருமாறு:

1. இந்தச் சவப்பெட்டிகளை அவசர அவசரமாக வாங்கிட வேண்டும் என ஒரு பயங்கர அவசரம் காட்டப்பட்டுள்ளது.

அவசரமாக வாங்க வேண்டும் என்பதற்காக பல விதிகளை மீறி இருக்கின்றார்கள்.

போர் நடந்து கொண்டிருக்கின்றது. சவப்பெட்டி உடனேயே வேண்டும் என்பதாய் அவசரம் காட்டப்பட்டது எனக் கூறுகின்றார்கள்.

ஆனால் போர் ஓய்ந்து நீண்ட நாள்கள் கழித்தே சவப்பெட்டிகள் வந்து சேர்ந்துள்ளன.

2. இந்தச் சவப்பெட்டிகள் மட்டுமல்ல. போருக்காக வாங்கப்பட்ட எல்லா ஆயுதங்களுமே காலந்தாழ்ந்துதான் வந்துள்ளன.

3. 36 வகையான பொருள்கள் போர் சம்பந்தமாக வாங்கப்பட்டுள்ளன. இவற்றில் 44 கோடி ரூபாய் அதிகமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. (இதுதான் பகற்கொள்ளை)

4. 250 கோடி ரூபாய்க்கு வாங்கப்பட்ட பொருள்கள் உதவாக்கறைகள். அவை சாதாரண தரத்தைக் கூடப் பெற்றிருக்க வில்லை.

5. 100 கோடி ரூபாய்க்கு வாங்கப்பட்ட பொருள்கள் வந்து சேரும் போது செயலிழந்து போய்விட்டன. அதாவது காலாவதியான பொருள்களை வாங்கி 100 கோடி ரூபாய் 'சும்மா' தரப்பட்டுள்ளது.

6. போர் நடந்து கொண்டிருக்கின்றது என்பதைக் காரணம் காட்டி ஒரு விதப் பதட்டத்தைப் பரப்பி விட்டு, 320 கோடி ரூபாய் பெறுமான பொருள்களை அவசர அவசரமாக இறக்குமதி செய்திருக்கின்றார் பாதுகாப்பு அமைச்சர்.

இந்தப் பொருளை நமது இராணுவத்திற்கென அமைக்கப்பட்டுள்ள உற்பத்திக் கூடங்களே தயார் செய்திடும் திறமை உள்ளவை. இருந்தும் வெளிநாடு களிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன.

7. இந்தப் பொருள்களிலும் 200 பொருள்களைப் பயன்படுத்தவே முடியாமல் போய்விட்டது.

8. கார்கில் பகுதி கடுமையான குளிர்ப்பகுதி. அங்கு நிற்கும் இராணுவ வீரர்களுக்கு அதற்குத் தகுந்தாற் போன்ற ஆடைகள் அனுப்பித் தந்திட வேண்டும். இதற்காக ஆடைகள், இராணுவத் தளவாடங்கள், குண்டுகள், ஆயுதங்கள் இவற்றை வெளிநாடுகளிலிருந்து வாங்கிட, ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அவசரமாகத் தேவைப்பட்ட இந்த ஆடைகளும் ஆயுதங்களும் கூட நமது வீரர்களுக்கு உரிய நேரத்தில் வந்து கிடைக்கவில்லை. அனைத்தும் காலம் கடந்தே வந்து சேர்ந்தன.

இதனால் இதில் செலவு செய்யப்பட்ட அந்நியச் செலாவணியில் பாதிக்கு மேல் பாழ்பட்டுப்போனது. இதில் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் எல்லா விதிகளும் அந்தரத்தில் பறக்க விடப்பட்டுள்ளன.

10. இந்த தணிக்கைக் குழுவின் கோபத்திலிருந்து தப்பித்திட ஜார்ஜ் பெர்னாண்டஸ் சவப்பெட்டி வாங்கிய விவகாரத்தில் தன்னை யாரும் கலந்தாலோசிக்க வில்லை, தனது ஒப்புதலை வாங்கிடவில்லை எனப் பரப்பினார்.

இதைத் தணிக்கை குழு வன்மையாகக் கண்டித்தது. தனக்கு எதுவும் தெரியாது என அங்கலாய்க்கும் இராணுவ அமைச்சரே பல விதிகளை மீறி அனுமதிக்கும் ஆணைகளில் கையெழுத்திட்டிருக்கின்றார் என்று இந்தத் தணிக்கைக் குழு குற்றம் சாட்டியது.

11. ரஷ்யாவிடம் வாங்கிய வான் நோக்கிச் சுடும் துப்பாக்கிகள் வான் நோக்கிச் சுட்டபோது குண்டுகள் போதிய உயரத்திற்குக் போகவில்லை. துப்பாக்கிக் குழல்களை மாற்றிட எந்த வசதியும் இருக்கவில்லை. ஆறாயிரம் முறை சுட்ட பிறகு அவை எந்தப் பயனும் இல்லாமல் போய்விட்டன.

12. இப்படி இராணுவத்திற்கு வேண்டிய பொருள்களை வாங்கிடும் போதே பல உயர் இராணுவ அதிகாரிகளின் ஒப்புதல் வாங்கப் படவில்லை. அவர்களின் பார்வையிலிருந்து இந்த வியாபாரமும் ஒப்புதல்களும் மறைக்கப் பட்டிருக்கின்றன. கீழ்நிலை அதிகாரிகளைக் கொண்டே அனைத்து விற்பனை ஒப்பந்தங் களும் செய்யப்பட்டுள்ளன. (அதாவது, ஊழலுக்கு ஒத்து ஊதுபவர்களைக் கொண் டே அனைத்தும் அரங்கேற்றப் பட்டுள்ளன)

இத்தனையும் போர் நடந்து கொண்டிருக்கும் போது நடந்த தில்லுமுல்லுகள் என்பதை நாமனைவரும் கவனிக்க வேண்டும்.

13. போர் நடந்து கொண்டிருக்கின்றது. அவசரமாக இராணுவத் தளவாடங்கள் வேண்டும். என்ன செய்ய வேண்டும்? வெளியே வாங்கிட வேண்டும். அப்படி வாங்கிடும் போது ஏற்கனவே விற்பனை செய்து கொண்டிருக்கும் கம்பெனிகளிடம் தான் ஆர்டர் தருவார்கள்.

ஆனால் கார்கில் போரின் போது அன்று வரை செயலில் இல்லாத புத்தம் புதிய கம்பெனிகளுக்கு ஆர்டர் தந்திருக்கின்றார்கள்.

இவர்கள் யார் யாரிடமெல்லாம் போருக்கு வேண்டிய தளவாடங்களை வாங்கி இருக்கின்றார்கள் என்பதை ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற அளவில் எடுத்துப் பார்த்த போது இவர்கள் மூன்றில் ஒரு பங்கு பொருள்களை அன்று வரை ‘அட்ரஸ்’ இல்லாமல் இருந்த கம்பெனி களிடமே வாங்கியிருக்கின்றார்கள்.

இந்தக் குளறுபடிகளைக் கண்டு ரசிக்காமல் நமது தணிக்கைக் குழு இப்படிக் கூறுகின்றது:

“நெருக்கடி காலங்களில் ஒரு சாதாரண எதிர்பார்ப்பு என்னவெனில், இராணுவத் திற்குத் தேவையான பொருள்களை நல்ல பெயர் பெற்ற நிறுனங்களிடம் வாங்கிட வேண்டும் என்பதுதான்.”

**CAG Report, 12.12.2001, The Hindu**

14. இதோடு வெளிநாடுகளிலிருந்து பொருள்களை வாங்கிட வேண்டும் என்பதில் ஒரு அசாதாரண ஆர்வமும், அவசரமும் காட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் அதே பொருள்களை நமது நாட்டிலேயே விற்பனை செய்யும் நிறுவனங்கள் நிரம்ப இருக்கின்றன.

(அதாவது, கொள்ளையடிப்பதே இங்கே நோக்கம்)

தணிக்கை குழு இன்னொரு பித்தலாட்டத்தையும் கண்டுபிடித்தது. அது பல இராணுவத் தளவாடங்கள் தேவைக்கு அதிகமாக வாங்கப்பட்டிருக்கின்றன. சில ஆயுதங்கள் தேவைக்கு மூன்று மடங்கு அதிகமாக வாங்கப்பட்டிருக்கின்றன. அவ் வாறு அதிகமாக வாங்கப்பட்ட பொருள் களில் பல பயன்பட முடியாதவையாகி விட்டன.

முன்னர் வாங்கிய பல பொருள்கள் இப்போதும் வாங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை முன்னர் என்ன விலைக்கு வாங்கப்பட்டன என்பது கோப்புகளில் இல்லை. (அவற்றை வெளியே காட்ட வாங்கியவர்கள் விரும்பவில்லை. முந்தைய விலைகள் வேண்டுமென்றே மறைக்கப் பட்டுள்ளன)

**CAG Report, 12.12.2001, The Hindu**

## திடீர் கம்பெனிகள் / வியாபார நிறுவனங்கள்

இந்தச் சவப்பெட்டி ஊழலில் இன்னொன்றும் நடந்துள்ளது. சில கம்பெ னிகள் அதாவது வியாபார நிறுவனங்கள் திடீரெனத் தோன்றி மறைந்திருக்கின்றன.

அதாவது, இந்தக் கம்பெனிகள் நமக்கு இராணுவத் தளவாடங்கள் தேவைப்பட்ட பின் தோன்றி இருக்கின்றன. இந்தப் பொருள்களை வாங்கி நமது பாதுகாப்பு அமைச்சகத்திற்கு தந்த பின் இந்தக் கம்பெனிகள் காணாமற் போயிருக்கின்றன.

இப்படித் தோன்றி மறைந்த கம்பெனிகளுள் ஒன்றுதான் ‘லண்டன் இந்தியா’ என்ற கம்பெனி.

இந்தக் கம்பெனி சவப்பெட்டிகளை வாங்கித் தந்த பின் காணாமற் போயிருக்கின்றது.

அதாவது, இதை நமது அதிமுக்கியஸ்தர்களின் அண்ணன் தம்பிகள் (பினாமிகள்) திறந்திருக்கின்றார்கள். சவப்பெட்டிகளை வாங்கித் தந்த பின் காணாமற்போயிருக்கின்றன.

இதனால் இந்தக் கம்பெனிகள் - நிறுவனங்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க இயலுவதில்லை. இல்லாத கம்பெனிகள் மீது எப்படி நடவடிக்கைகள் எடுக்க இயலும்?

இதில் இன்னொரு வேதனையான செய்தி என்னவெனில் இந்தச் சவப்பெட்டி ஊழலில் சிக்கி கொண்ட பாதுகாப்புத்துறை அமைச்சர் "குறைந்த விலையில் சவப்பெட்டிகள் வாங்கிடலாம்" எனச் சொல்வது பொய் என்றார்.

காரணம், நீங்கள் சவப்பெட்டிகளை நமக்குக் குறைந்த விலையில் வாங்கித் தந்ததாகக் கூறும் நிறுவனங்கள் அப்போது செயலில் இல்லை எனப் பதில் சொல்லித் தப்பிக்கப் பார்த்தார்.

கொள்ளையடிப்பதற்கென்றே நிறுவனங்களைத் தொடங்கி மூடிவிட்டு பின்னர் இப்படி ஒரு சவடால்! எப்படி இருக்கின்றது இவர்களின் நாடகம்.

இப்படியெல்லாம் முறைகேடுகள் நடந்திருக்கின்றனவே அவற்றிற்கு உங்கள் விளக்கம்தான் என்ன? என நமது கணக்குக் கண்காணிப்புக் குழு கேட்டதற்கு, இன்று வரை நமது இராணுவ அமைச்சகத்திடம் எந்தப் பதிலும் இல்லை.

இதனால் இவர்களிடம் எந்த விளக்கமும் தருவதற்கு வக்கில்லை எனக் கூறி உள்ளார்கள் நமது கணக்கு மேற்பார்வை குழுவினர்.

இவர்கள் இந்த அலுமினிய சவப்பெட்டிகளுக்கு கொடுத்திருக்கும் விலையை வைத்துப் பார்க்கும் போது இவர்கள் ஒரு டன் அலுமினியத்திற்கு தந்திருக்கும் விலை ரூபாய் 45.32 லட்சம்.

இது அன்றைய நடப்பு விலையை விட 10 மடங்கு (விலை) அதிகம் நமது விமானம் தயாரிக்கும் நிறுவனம் இந்த அலுமினியத்தை விட அதிக தரம் மிக்க அலுமினியத்தை வாங்குகின்றது.

இந்தத் தரம் நிறைந்த அலுமினியம் இவர்கள் சவப்பெட்டிகளுக்கு தந்த விலையை விட பத்து மடங்கு குறைவு.

இப்போது நமக்குள் இப்படியொரு வினா எழலாம். நமது நாட்டில் இருக்கும் லஞ்ச ஒழிப்புத்துறை என்ன செய்து கொண்டிருக்கின்றது என்பதே அது.

ஊழல் ஊரில் அந்த லஞ்ச ஒழிப்பு உத்தமர்கள் காணாமற் போய்விட்டார்கள். இருந்தாலும் இந்த ஊழல் பெருச்சாளிகள் அவ்வப்போது இராணுவத்திற்கு ஆயுத உதிரிகளை வாங்கச் செலவிடும் தொகை (6,000) ஆறுஆயிரம் கோடியிலிருந்து (10,000) பத்தாயிரம் கோடி வரையாகும்.

இதில் எவ்வளவு பணத்தை இவர்கள் கொள்ளையடிப்பார்கள் என்பதைக் கணித்துக் கொள்ளலாம். இவர்கள் அடிக்கும் கொள்ளைப் பணத்தை எங்கே வைக்கின்றார்கள் என்பது யாருக்கும் தெரியவில்லை. இவர்களின் சொத்துக்களை முடக்க ஆளுமில்லை; நாதியுமில்லை.

இப்படி கார்கிலில் நமது இராணுவ வீரர்கள் தந்த உயிர்களைக் கொண்டு மக்களின் அனுதாபத்தையும் பெற்று ஆட்சியையும் பிடித்துக் கொண்டார்கள். ஒரு போர்- ஆனால் நமது தேசிய ஜனநாயக கூட்டணிக்கு இரட்டை இலாபம்.

**நாடாளுமன்றத்தில் அவமானம்!**

நாடாளுமன்ற கூட்டத் தொடர் நவம்பர் 19ம் நாள் தொடங்கிற்று.

எடுத்த எடுப்பிலே எதிர்கட்சிகள் ஆளும் கட்சியை ஒரே பிடியாய் பிடித்தன.

டெஹல்கா அம்பலப்படுத்திய ஊழல் விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது அதன் பிரதான குற்றவாளியான பா.ஜ.க.தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பாதுகாப்பு அமைச்சர் இராஜினாமா செய்ய வேண்டும் எனக் கோரினார்கள்.

எந்த உருப்படியான பதிலையும் தர இயலவில்லை இந்த போலி தேசபக்தர்களால்.

வெட்கங்கெட்ட இவர்கள் அரியணையில் ஒட்டிக் கொள்வதிலேயே ஆர்வம் காட்டினார்கள்.

இந்நிலையில் டிசம்பர் 8ம் தேதி இந்திய கணக்குத் தணிக்கைக் குழுவின் அறிக்கை வெளியே வந்தது.

எதிர்கட்சிகள் பாதுகாப்பு அமைச்சர் பதவி விலகும் வரை அல்லது விலக்கும் வரை நாடாளுமன்றத்தை நடக்கவிடமாட்டோம் என அடம் பிடித்தன.

ஆனாலும், நமது அப்போதைய பிரதமர், சட்ட அமைச்சர் அருண் ஜேட்லி, உள்துறை அமைச்சர் அத்வானி ஆகியோர் பாதுகாப்பு அமைச்சரைப் பாதுகாக்கும் விதத்தில் சப்பைக் கட்டுகளைக் கட்டினார்கள்.

என்னே இவர்களின் நாட்டுப்பற்று? இது தேசவிரோத செயல்லல்லவா? எதிர்க் கட்சிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும் பிரதமர் அசையவில்லை.

இந்தப் பிரதமர்தான் அன்று அதாவது இன்றிலிருந்து 27 ஆண்டுகளுக்கு முன்னால் போஃபர்ஸ் பீரங்கி ஊழல் விவகாரம் வெளியே வந்தபோது உடனேயே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அடம் பிடித்தார். அப்போது அவர் எதிர்கட்சி ஆட்சியில் இருந்தபோது ஊழல் சாம்ராஜ்ய அதிபர். அதனால் இப்போது மௌனம் சாதித்தார்.

இந்த மொத்த விவகாரத்திலும் இரண்டு பாதுகாப்புத் துறை அதிகாரிகளின் பெயர்கள் அடிபடுகின்றன. ஒருவர் பெயர் எல்.என். மெஹ்தா, இன்னொருவர் எஸ்.பி. முருகை. இவர்கள்தாம் தலைமை தளபதி வி.பி. மலிக் அவர்களைப் புறக்கணித்து தங்கள் பதவிகளில் ஒய்யாரமாய் வீற்றிருந்தார்கள்.

இவர்களும் முன்னர் வந்த இராணுவ ஊழல் டெஹல்கா ஊழல் குற்றச்சாட்டில் முக்கிய குற்றவாளிகள். ஊழலுக்குப் பெயர் போனவர்களைக் கொண்டே நமது இராணுவம் இயக்கப்பட்டுக் இருக்கின்றது என்பதே பா.ஜ.க. ஆட்சியின் பெருமை.

இப்படிச் சவப்பெட்டி ஊழல் பட்டித் தொட்டிகளிலெல்லாம் வலம் வந்து கொண்டிருந்தபோதுதான் நாடாளுமன்ற வளாகத்தில் அந்தப் பயங்கர தாக்குதல் நடைபெற்றது.

நாட்டையும் உலகையும் நிலைநடுங்க வைத்த இந்தத் தாக்குதல் எழுப்பிய அதிர்ச்சியில் எல்லாம் மறைந்து போயின. நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றாய் நிற்கவேண்டிய நேரம் என்பதால் மக்கள் அப்போது இந்த ஊழல்களை தற்காலிகமாகத் தள்ளி வைத்தனர்.

இவர்கள் செய்த இந்தத் தேசத் துரோகம் மக்கள் மன்றத்தில் எழும் இவர்களின் கொற்றம் விழும்.

## நிரந்தர தீர்வு

நம் நாடு விடுதலை அடைந்த பின் எது வளர்ந்ததோ இல்லையோ, ஊழலும் ஊதாரித்தனமும் போதிய அளவுக்கு வளர்ந்திருக்கின்றன.

முதல் இராணுவ அமைச்சர், கிருஷ்ண மேனன் இராணுவத்திற்கு ஜீப் வாங்கிய விவகாரத்தில் சிக்கினார்.

அவரது பேரன் ராஜீவ் காந்தி போஃபர்ஸ் பீரங்கி ஊழலில் சிக்கினார்.

இப்படி ஊழல் தலைமுறை வரலாறு ஒன்றை உருவாக்கி வாழ்ந்து கொண்டிருக் கின்றது நமது இந்தியா!

அன்று முதலே நாட்டின் பாது காப்பிற்கே இது மிகப்பெரிய பங்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

இதிலிருந்து நாம் ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும் இந்த அரசியல்வாதிகளை இது போன்ற செயல்களிலிருந்து தடுக்கும் ஆற்றல் எந்தச் சட்டத்திற்கும் இல்லை. இவர்கள் நாடாளுமன்றத்திற்கு பதில் சொல்ல வேண்டாம். அதனால் நீதிமன்றத்திற்கு அஞ்சி நடப்பார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

தங்களுக்கு நெருக்கடி வரும் போது மிக எளிதாக நாடாளுமன்றத்தை இழுத்து மூடிவிட்டு ஓடிவிடுவார்கள்.

இப்படி இவர்கள் கேட்பார் இல்லை என்ற நெஞ்சுரத்தோடு ஊழலில் ஈடு படுகின்றார்கள்.

இவர்களிடம், இறைவன் இருக்கின்றான்; அவன் ஒருவனே; அவனுக்கு இணையோ துணையோ இல்லை; அவனே இந்த உலகைப் படைத்தான்; அவனே இந்த உலகை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவான்; பின்னர் இந்த உலகில் வாழ்ந்த அவைருக்கும் மீண்டும் ஒரு நாள் உயிர் தந்து அனைவரும் செய்த நன்மைகளின் அடிப்படையில் அல்லது தீமைகளின் அடிப்படையில் நியாயம் வழங்கப்படும். அதுவே நியாயத்தீர்ப்பு நாள்.

அந்நாளில் அவர்கள் அணு அளவு நன்மை செய்திருந்தால் அதுவும் கணக்கில் கொள்ளப்படும். அன்று அவர்கள் பொய்யான காரணங்களைச் சொல்லி ஏமாற்றிட இயலாது.

அன்று இவர்கள் அந்த இறைவனிடம் பெறும் தீர்ப்பைப் பொறுத்து இவர்களின் மறுஉலக வாழ்க்கை அமையும்.

அன்று இவர்கள் தண்டிக்கப்பட்டால் கடுமையான வேதனை தரும் நரகத்தில் என்றென்றும் தங்கிவிடுவார்கள்.

இது நடந்தே தீரும்.

இந்த நம்பிக்கையும் அதன் அடிப்படையில் படைத்த இறைவனின் அச்சமும் இவர்களிடம் ஏற்பட்டாலொழிய இவர்கள் இதுபோன்ற ஊழல்களிலிருந்தும் ஊதாரித்தனங்களிலிருந்தும் தங்களை விடுவித்துக் கொள்ளமாட்டார்கள். இந்த உலகமே எல்லாம் என்ற எண்ணம் இவர்களிடம் இருக்கும் வரை இவர்கள் வருந்துவார்கள்; மனம் திருந்துவார்கள் என எதிர்பார்ப்பதற்கில்லை.

இஸ்லாத்தின் வரலாற்றில் அத்துணை கீர்த்தி மிக்கதொரு நிர்வாகத்தைச் சந்திக்கின்றோம். அதற்குக் காரணம் இந்த இறையச்சம்தான். இந்த இறையச்சம் மிகுந்த ஆட்சியாளராக கலீஃபா உமர் (ரலி) அவர்கள் திகழ்ந்ததால்தான் காந்திஜி அவர்கள் உமர் (ரலி) அவர்களின் ஆட்சி இங்கே வண்டும் என்றார்.

## ஆராய்ச்சி நிறுவனங்களில் பாரதீய ஜனதா அடித்த கொள்ளை இந்திய வரலாற்று ஆய்வுக் கழகத்தில் நடந்த ஊழல்

தேசபக்தி என்ற நாடகத்தை அரங்கேற்றி நாடாள வந்தவர்கள் பாரதீய ஜனதா கட்சியினர்.

ஆனால் நாட்டை சுற்றி சுற்றி கொள்ளையடித்தார்கள்.

சவப்பெட்டியிலிருந்து தொடங்கி ஆராய்ச்சி நிறுவனங்கள் வரை அனைத்தையும் சுரண்டி விழுங்குவதில் எங்களுக்கு நிகர் நாங்களே என்பதை நிலை நாட்டி விட்டார்கள் இந்த நவீன பாசிஸ்டுகள்.

நம் நாட்டின் பெருமைக்கு அடையாளமாக இரண்டு ஆராய்ச்சி நிறுவனங்கள் உள்ளன. ஒன்று - Indian Council of Historical Research - ICHR. இதனைத் தமிழில் இந்திய வரலாற்று ஆய்வுக் கழகம் என அழைக்கின்றோம்.

இரண்டு - Indian Institute of Advacnes Studies - IIAS இதனை முற்போக்கு கலைகளின் ஆய்வு நிறுவனம் என அழைக்கலாம்.

முதன் முதலில் இந்த ICHIR என்ற இந்திய வரலாற்று ஆய்வுக் கழகத்தை பாரதீய ஜனதா கட்சியினர் எப்படிக் கொள்ளை யடித்தார்கள். அதனை எப்படி கபளீகரப்படுத்தினார்கள் என்பதைப் பார்ப்போம்.

இவர்கள் ஆட்சியை எட்டிப் பிடித்த வுடனேயே இந்த நிறுவனத்தை சீர் குலைத் தார்கள். இவர்கள் பதவியேற்ற போது இந்திய அளவில் புகழ் பெற்ற 18 வரலாற்றறிஞர்கள் இந்த நிறுவனத்தின் கீழ் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வந்தார்கள்.

1998 இல் பாசிஸ்ட்டுகள் பதவி யேற்றவுடன் பாரதீய ஜனதா கட்சியால் நியமிக்கப்பட்ட மனித வளத்துறை அமைச்சர் முரளி மனோகர் ஜோஷி இவர்கள் செய்து கொண்டிருந்த ஆராய்ச்சிகளிலிருந்து இவர்களை அப்புறப்படுத்தினார். இந்தப் பதினெட்டு வரலாற்று ஆய்வாளர்களும் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு ஒரே ஒரு காரணம் தான். அவர்கள் அயோத்தியில் இராமர் பிறந்த இடத்தில் தான் பாபரி பள்ளிவாசல் கட்டப்பட்டது என்ற பொய்யை ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த 18 பேராசிரியர்களையும் நீக்கி விட்டு அந்த இடத்தில் ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பைச் சார்ந்த 18 பேராசிரியர்களை நியமித்தார்கள்.

இந்த வரலாற்று ஆய்வுக் கழகத்திற்கு தலைவராக பி.ஆர். குரோவர் என்பவரை நியமித்தார்கள்.

இந்தக் குரோவர் ஒரு வரலாற்றுப் பித்தர். இவர் தனது வரலாற்று அறிவை(?) முன்னிலைப்படுத்தி ஓர் உலக மகா உண்மையை கண்டறிந்தார். அஃது பாபரி மஸ்ஜித் இடிக்கப்படவில்லையாம், தானாகவே வீழ்ந்ததாம்!

பாபரி மஸ்ஜித் இராமர் பிறந்த இடத்தில்தாம் கட்டப்பட்டதாம். இது இவர் கண்டெடுத்த இன்னொரு சூத்திரம்.

இப்படி அறிவையும், மனசாட்சியையும் மூட்டைக் கட்டி வைத்து விட்டு பேனாக்களில் பொய்யை நிரப்பி காகிதங்களை வீணாக்கிய தால்தான் இவருக்கு இந்திய வரலாற்று ஆய்வுக் கழகத்தின் தலைவர் பதவி தாரை வார்க்கப்பட்டது.

இவர் பதவியில் அமர்ந்தவுடன் அடித்தார் கொள்ளை.

2004இல் காங்கிரஸ் அரசு மத்தியில் பதவி ஏற்றவுடன், வரலாற்று ஆய்வுக் கழகம் இன்னும் இது போன்ற இதர ஆய்வுக் கழகங்களிலும் நடந்த கொள்ளைகளையும் குளறுபடிகளையும் கண்டெடுத்துக் களைந் திட வேண்டும் என்றொரு முடிவு எடுக்கப் பட்டது. இது இந்தக் கூட்டணி அரசின் குறைந்தபட்ச செயல் திட்டங்களில் ஒன்று என ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த பின்னணி யில் தனிமனித விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

இந்த விசாரணையை நடத்திட 1. பண்டோபாடிய என்ற ஓய்வு பெற்ற மத்திய அதிகாரியை நியமித்தது. 2004 செப்டம்பர் மாதத்தில் அவர் தன்னுடைய அறிக்கையை ஜூலை 2005 இல் சமர்பித்தார். 1. பண்டோ பாடியா தந்த அறிக்கை 220 பக்கங்களைக் கொண்டது. இதில் 78 வரலாற்று வல்லுநர் களும் 126 கல்வியாளர்களும் விசாரிக்கப் பட்டார்கள். அல்லது விசாரணையில் கலந்து கொண்டு கருத்துக்களைச் சொன்னார்கள். பாரதீய ஜனதா கட்சியினர் பதவி ஏற்றவுடன் முதன் முதலில் பிறப்பித்த ஆணையில் இந்த வரலாற்று ஆய்வுக் கழகத்தின் போக்கையே மாற்றினார்கள்.

இந்திய வரலாற்று ஆய்வுக் கழகத்தின் மிக முக்கியமான கொள்கை வரலாற்று ஆய்வுக்கு ஒரு அறிவியல் திசையைத் தருவதாகும். (Rational Direction) ஆனால் இவர்கள் அதை (National Direction) தேசிய அடிப்படை என மாற்றியமைத்தார்கள்.

தேசியம் என்றவுடன் இந்திய தேசியம் தானே என யாரும் எண்ணிட வேண்டாம். தேசியம் என்பதற்கு இவர்கள் தரும் பொருள் இந்துத்துவம். அதன் விரிந்த பொருள் இவர்களின் மத தீவிரவாதம் என்பதாகும்.

இந்திய வரலாற்று ஆய்வுக் கழகம் ஆராய்ச்சிகளைச் செய்பவர்களுக்கு ஊக்கத் தொகை (Scholarship) வழங்குவது வழக்கம். இந்த ஊக்கத் தொகை அனைத்தும், இந்துத்துவ வாதிகளுக்கும், அந்நிய ஆரிய கலாச்சாரத்தைப் புகழ்ந்து பாடுவோருக்கும்

தான் வழங்கப்பட்டன. அதாவது, பொய்யான வரலாற்றைப் புனைவோருக்கு வழங்கப் பட்டன.

இப்படி அந்நிய ஆரியத்தையும் இந்துத்துவத்தையும் புகழும் போலி ஆராய்ச்சிகள் 96 இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அங்கீகரிக்கப்பட்டன. இதில் 82,51,000 ரூபாய் ஊக்கத் தொகையாகத் தரப்பட்டது. (ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய்) இந்தப் பின்னணியில் இந்துத்துவவாதிகள் எதை எழுதினாலும் அதற்கு முனைவர் பட்டமும் பணமும் வழங்கப்பட்டது.

இதிலும் கொடுமை என்னவெனில் இந்தப் பணத்தையும் பட்டத்தையும் வாங்கியவர்கள் எந்த ஆராய்ச்சியையும் செய்யவில்லை. ஏற்கெனவே வந்தப் புத்தகங்கங்களை மீண்டும் டைப் செய்து தந்து பணத்தையும் பட்டத்தையும் பெற்றுச் சென்றுள்ளார்கள்.

இந்திய வரலாற்று ஆய்வுக் கழகம் ICHR இளம் நிலை ஆராய்ச்சியாளர்கள் என்று சிலரை தேர்ந்தெடுப்பது வழக்கம். இந்த இளம் நிலை ஆராய்ச்சியாளர்களுக்கு உற்சாகம் தரும் அளவில் அவர்களுக்கு ஊக்கத் தொகைகளை வழங்குவது வழக்கம். ஆனால் ஒரு நிபந்தனை. அவர்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து கையெழுத்துப் பிரதிகளை ஆராய்ச்சி கழகத்திடம் தந்திட வேண்டும். தவறினால் வாங்கிய ஊக்கத் தொகையைத் திருப்பி ஒப்படைத்துவிட வேண்டும்.

இவர்கள் 1999 இல் மட்டும் 17 தங்களவர் களை இளம் நிலை ஆராய்ச்சியாளர்களாக நியமித்து இருக்கின்றார்கள். இவர்களுக்கு ஊக்கத் தொகையும் தேவைக்கு மிஞ்சி வாரி வழங்கி இருக்கின்றார்கள். ஆனால் இந்த இளம் நிலை ஆராய்ச்சியாளர்களில் யாரும் இன்றளவும் தங்கள் ஆராய்ச்சிகளை முடிக்கவுமில்லை. பெற்ற ஊக்கத் தொகையைத் திருப்பித் தந்திடவுமில்லை.

இந்தியா, இந்துத்துவம், அதன் வரலாறு என்ற தலைப்புகளுள் ஆராய்ச்சி செய்வதாக பணம் பெற்ற இவர்கள் பின்னர் காணாமற் போய் விட்டார்கள்.

இந்தத் தகிடுத்தத்தங்களை ஆய்வு செய்த பண்டோபாடியா அவர்கள் “இந்துத்துவ பாணியை கையாள மறுத்த யாரையும் இவர்கள் ஆராய்ச்சியாளர்களாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்கனவே சிறந்த தலைப்புகளில் ஆராய்ச்சிகளை மேற்கொண்ட வர்களைக் கூட இவர்கள் இந்துத்துவ பாணிக்கு மாறிட வேண்டும் எனக் கட்டாயப்படுத்தினார்கள்.

அவர்கள் மறுத்த போது அவர்கள் பெற்றுக் கொண்டிருந்த ஊக்கத் தொகையை நிறுத்தினார்கள். அவர்களை ஆராய்ச்சி களத்தை விட்டே அப்புறப்படுத்தினார்கள்” என்கின்றார்கள்.

தலித் பெருங்குடி மக்கள், பழங்குடி யினர், பிற்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், சிறுபான்மையினர் இவர்களையும் ஆராய்ச்சித் தளத்தில் முற்றாகப் புறக்கணிக்கப் பட்டார்கள்.

மனம் நொந்து போன பண்டோபாடியா அவர்கள் தனது அறிக்கையில் இப்படிக் குறிப்பிடுகின்றார்கள்.

“This fellowship was awarded to persons of no academic standing and even to persons in no way connected with historical research, thereby debasing the coveted fellowship”

**(Frontline, August 12, 2005)**

அதாவது “வரலாற்று ஆராய்ச்சிக்கான இந்தப் பணம் எந்த வரலாற்று ஞானமும் இல்லாதவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏன் வரலாற்று ஆராய்ச்சி யோடு எந்த விதத்திலும் தொடர்பில்லாதவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்த ஆராய்ச்சியை அவர்கள் ஏளனப்படுத்தி விட்டார்கள்.”

அதாவது, பாரதீய ஜனதா கட்சி ஆட்சியின் போது (1998-2004) குரங்குகளின் கைகளில் கிடைத்தப் பூமாலையைப் போல் வரலாற்று ஆராய்ச்சி உதிர்ந்து போயிற்று.

தங்கள் பரிவாரத்தைச் சார்ந்த வரலாற்றோடு எந்த நிலையிலும் சம்மந்தப்படாத முட்டாள்களைத் தேடிப் பிடித்துப் பணத்தையும் பட்டத்தையும் வாரி வழங்கினார்கள் என்பது மட்டுமல்ல. நல்ல சிறந்த ஆராய்ச்சியாளர்களை வெளியேற்றவும் செய்தார்கள். இதில் பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல் ஒரே ஒரு எடுத்துக் காட்டை மக்கள் மன்றத்தில் வைக்கின்றோம்.

டாக்டர் (முனைவர்) கே.எஸ். சிங் என்றொரு ஆராய்ச்சியாளர். அவர் இந்திய சமூகம் ஒரு பன்முகத் தன்மை கொண்டது என்ற யதார்த்தத்தில் அழுத்தமான நம்பிக்கைக் கொண்டவர். இந்த வகையில் அவர் பல ஆராய்ச்சிகளை வெற்றிகரமாகச் செய்து முடித்தவர். இப்போது எல்லா சமுதாயத்தவர் களும் எப்படி ஒற்றுமையோடும், ஒருமைப் பாட்டோடும் வாழ்ந்து வந்தார்கள் என்பதைக் குறித்த ஆராய்ச்சி ஒன்றை மிகவும் ஆழமாக செய்து வருகின்றார். இந்த பாசிஸ்ட்டுகள் இந்திய வரலாற்று ஆய்வுக் கழகத்தை ஏற்றெடுத்த பின் டாக்டர் சிங் அவர்களின் மனநிலையையும் ஆராய்ச்சியின் மையப் பொருளையும் மாற்றிடப் பணித்தார்கள். இந்திய ஒரே நாடு. ஒரே இனத்தைச் கொண்டது, ஒரே மொழியைக் கொண்டது என்ற தங்கள் பாசிச சித்தாந்தத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் பணித்தார்கள். அவர் மறுத்தார். அப்படி யானால் நீயும் வேண்டாம், உனது ஆராய்ச்சியும் வேண்டாம் என வெளியேற்றி விட்டார்கள்.

இப்படி தங்கள் பாசிஸ கொள்கை களை ஏற்றுக் கொள்ளாதவர்களை வெளியேற்றிய பின் தாங்கள் விரும்பும் விதத்தில் வரலாற்றை வளைக்கவும் - எழுதவும் ஆட்களை நியமித்தார்கள். இந்த ஈனச் செயலுக்கு வரலாற்று ஆராய்ச்சி எனப் பெயர் வைத்தார்கள்.

இவர்கள் 13 புதிய சிறப்பு ஆராய்ச்சி களை (Special Project) அறிவித்தார்கள். இந்த 13 ஆராய்ச்சிகளையும் தங்கள் பரிவாரத்தைச் சார்ந்தவர்களிடமே ஒப்படைத்தார்கள். அத்தோடு நில்லாமல் அவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்திட பெருந் தொகைகளையும் அள்ளித் தெளித்தார்கள். சாதாரணமாக ஒரு ஆராய்ச்சியாளருக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையில் உச்ச அளவு இரண்டரை லட்சம் ரூபாய்தான் (2.5 லட்சம்) ஆனால் இவர்கள் அணியைச் சார்ந்த ஆராய்ச்சியாளர் ஒருவருக்கு இவர்கள் வழங்கிய தொகை இருபத்துமூன்று லட்சத்து எண்பத்தைந் தாயிரம் (23.85 லட்சம்)

அதாவது வழக்கமாக வழங்கப்படும் தொகையைப் பத்து மடங்காக உயர்த்தி தங்கள் பரிவாரத்தினருக்குத் தந்துள்ளார்கள்.

இத்தோடு நிற்கவில்லை! இதில் இன்னும் எப்படியெல்லாம் தரம் தாழலாம் என்பதைக் கண்டுபிடித்து கீழே இறங்கி இருக்கின்றார்கள் இந்த பாசிஸ பாதகர்கள்.

வழக்கமாக ஒருவரை ஆராய்ச்சி யாளராக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றால், அவர் முதலில் இந்த இந்திய வரலாறு ஆய்வுக் கழகத்திடம் ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். அந்த விண்ணப்பத்தில் அவர் எந்தத் தலைப்பில் எந்தக் கோணத்தில் ஆராய்ச்சியை மேற்கொள்ளப் போகின்றார் என்பதை விளக்கிச் சொல்லிட வேண்டும். இதனை “Project Proposal” ஆராய்ச்சிக்கான முன்வடிவம் என்பார்கள். எளிதாகச் சொல்லிட வேண்டும் என்றால் ஆராய்ச்சிக்கான மனு அல்லது விண்ணப்பம் எனலாம். ஆனால், நமது முரளி மனோகர் ஜோஷியின் அமைச்சகத்தின் கீழ் இந்த ஆராய்ச்சி நிறுவனம் வந்தபின், இந்த விண்ணப்பத்தைக் கூட சமர்ப்பிக்காத வர்களுக்கும் ஆராய்ச்சிக்கான பணம் (23.85 லட்சம்) வழங்கப்பட்டுள்ளது.

அதாவது, பாசிசத்திற்கு தொண்டனாய் தொழும்பனாய் வாழ்ந்தவர்களுக்கு கேட்கா மலே பணம்! அத்தோடு ஆராய்ச்சியாளர்கள் என்ற மேதாவிலாசமும் வழங்கப்பட்டுள்ளது.

இப்படி இவர்கள் சுருட்டிய மொத்தப் பணம் ஒரு கோடியே ஐம்பத்தொரு லட்சத்து, நாற்பத்து மூவாயிரம் (1,51,43,000/-)

இந்திய வரலாற்று ஆய்வுக் கழகம் அள்ளிக் கொட்டுவதைப் பார்த்த இந்திய முற்போக்கு கலைகளின் ஆய்வு நிறுவனம் என்ற IIAS இன் தலைவர் சி.ஜி. பாண்டே என்பவர் தானும் ஆராய்ச்சி செய்யப் போகின்றேன் என வேட்டியை வரிந்து கட்டியிருக்கின்றார்.

சி.ஜி. பாண்டே வேலை பார்ப்பது வேறு நிறுவனம். வேலையோ ஆராய்ச்சிகளை மேற்பார்வையிடுவது. ஆனால் தானே தாரை வார்க்கப்படும் பணத்தை இவரும் சும்மாவிட விரும்பவில்லை. தனது நிறுவனத்திலிருந்து கொண்டே (IIAS, ICHR) என்ற வரலாற்று ஆயவுக் கழகத்திற்கு மனுப்போட்டார். இந்திய விஞ்ஞான வளர்ச்சியின் வரலாற்றை ஆய்வு செய்யப் போவதாகக் கூறினார். ஒரு பெருந்தொகையை ஊக்கத் தொகையாகப் பெற்று தனது எதிர்காலத்தை வளமாக்கிக் கொண்டார்.

ஆராய்ச்சிக்கு யார் யாருக்குப் பணம் கொடுக்கலாம் என்பதை ஆய்வு செய்திட ஒரு குழு இருக்கின்றது இந்திய ஆய்வுக் கழகத்தில்! இந்தக் குழுவில் இடம் பெற்றவர்கள் அத்தனைபேரும் இந்தப் பாசிஸ பரம்பரையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அனைவருமே ஆராய்ச்சி செய்ய கேட்டார்கள்; எடுத்துக் கொண்டார்கள்.

ஆராய்ச்சி செய்பவர்களும் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்பவர்களும் ஒரே இனம் தான்.

இதில் வேதனை நிறைந்த வேடிக்கை என்னவெனில் இவர்கள் ஆராய்ச்சி செய்யப் போவதாகப் வாங்கிய பல தலைப்புகளில் ஏற்கனவே ஆராய்ச்சிகள் செய்து முடிக்கப் பட்டிருக்கின்றன.

பல புத்திசாலிகள் அந்தப் பழைய ஆராய்ச்சி முடிவுகளை சற்று மாற்றியும் மறித்தும் திருத்தி எழுதி ஆராய்ச்சி முடிந்து விட்டதாகச் சொல்லி பழைய சரக்கை கோப்பில் தந்து பணத்தையும் பட்டத்தையும் பெற்றுச் சென்றுள்ளார்கள்.

இந்த வடநாட்டு கொள்ளையை பதிவு செய்த பண்டோபடியா தாம் நொந்து இப்படிக் கூறுகின்றார். "தான தர்மங்கள் தங்கள் வீட்டிலிருந்து தொடங்க வேண்டும் என்றார்கள். இதனால் இவர்கள் தங்கள் வீட்டிற்கு (சங்பரிவாருக்கு) வரலாற்று ஆய்வுக் கழக நிதியை ஒட்டுமொத்தமாக தானம் செய்திருக்கின்றார்கள்.

இன்னொரு இமாலய திட்டமும் முடிவெடுத்து நடந்து முடிந்திருக்கின்றது.

மேலே நாம குறிப்பிட்ட சி.ஜி. பாண்டே என்பவர் அப்போதைய மனிதவள அமைச்சர் முரளி மனோகா ஜோஷி என்பவரின் ஒப்புதலோடு புதியதொரு ஆய்வுத் துறையைத் தொடங்கி இருக்கின்றார். அதன் பெயர் (Centre for the Study of Indian Civilisation) இந்திய நாகரீகத்திற்கான ஆய்வு மையம். இதற்கு 69,66,976 ரூபாய் அதாவது, எழுபது லட்சம் ரூபாய் செலவாகும் என்றொரு மதிப்பீடு. ஆனால் இதே போன்ற ஓர் ஆராய்ச்சி நாட்டின் பிரசித்திப் பெற்ற ஆய்வுக் கூடங்கள் ஏற்கனவே நடத்திக் கொண்டிருக்கின்றன என்பது பின்னர் தெரியவந்தது. இப்படி வகையில்லாமல் - அறிவில்லாமல் திட்டங்கள்; அவற்றிற்கு பணங்கள். இந்த எழுபது லட்சமும் ஏப்பம் விடப்பட்டது என்றே தெரிகின்றது.

இவர்கள் பின்னாளில் டி.என். திரிப்பாதி என்பவரை இந்திய வரலாற்று ஆய்வுக் கழகத்தின் தலைவராக நியமித்தார்கள். இவர் இந்த வாய்ப்பை தனது எதிர்காலத்தை ஏற்றமுள்ளதாக ஆக்கிக் கொள்ளப் பயன் படுத்திக் கொண்டார். தான் "தொல்லியலும் பண்பாடும்" "Archaelogy and Tradition" என்றொரு ஆராய்ச்சியை மேற்கொள்ளப் போவதாக கூறி தனக்குத்தானே சுமார் பதினேழு லட்சம் (16.11) ரூபாயை அனுமதித்து எடுத்துக் கொண்டார்.

இந்த ஜகஜால கில்லாடி சி.ஜி. பாண்டே என்பவர் தந்த விண்ணப்பத்திலிருந்து மூன்று பத்திகளை அப்படியே எடுத்துப் பயன்படுத்தி தனது விண்ணப்த்தை தயார் செய்திருக் கின்றார். இப்படி விண்ணப்ங்களைக் கூட ஈ அடித்தான் காப்பி அடிக்க பல லட்சம் ரூபாய் பரிசாகத் தரப்பட்டுள்ளது.

பின்னர் திரிபாதி தான் இந்திய வரலாற்று ஆய்வுக் கழகத்தின் தலைவர் என்ற அடிப்படையில் பணிகள் பல செய்ய வேண்டியதிருப்பதால் தன்னால் ஆராய்ச்சி களை செய்ய இயலாது என்று கூறி விட்டார். இன்னொரு ஆராய்ச்சியாளரை அவர் கண்டுபிடிக்கும் வரை இந்த ஆராய்ச்சியை அந்தரங்கத்தில் தொங்கவிடுவதாகக் கூறிவிட்டார். ஆனால் அன்றுவரை, தான் ஆராய்ச்சி என்ற பெயரில் எடுத்தப் பணத்தில் ரூபாய் எட்டு லட்சம் செலவாகிவிட்டதாகவும் அறிவித்தார். அவர் எந்தப் பணத்தையும், திருப்பித் தந்திடவில்லை.

இப்படித் தனி மனிதர்களுக்கு மக்கள் வரிப்பணத்தை ஆராய்ச்சி என்ற பெயரில் தாரை வார்த்ததோடு அவர்கள் நின்றுவிட வில்லை. மாறாக பாரதீய ஜனதா கட்சியினர் தங்களைச் சார்ந்த மதவெறி அமைப்பு களுக்கும் அவற்றை வாரி இறைத்தார்கள்.

அகில பாரத வேதா ரஷ்ணா சமிதி என்ற அமைப்பிற்கு லட்சம் ரூபாய் கேட்காமலே அருள் கொடை! இந்த அமைப்பின் தலைவர் யாருமில்லை; அப்போதைய பாரதீய ஜனதா கட்சியின் மனித வள மேம்பாட்டுத் துறைஅமைச்சர் முரளி மனோகர் ஜோஷி தான். இது போன்ற அமைப்புகள் எதற்கும், இந்திய வரலாற்று ஆய்வுக் கழகத்தின் பணத்தைத் தரக் கூடாது என்று தெளிவான சட்டங்கள் இருக்கின்றன.

இப்படி பரிவாரங்களின் பைகளில் பணம் புரண்டு கொண்டிருக்கும் போதுதான் ஒரிசாவில் கிராமத்து மக்கள் பட்டினியால் செத்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த ஊழல் பேர்வழிகளின் தலைவர் வாஜ்பேயி அந்த மக்களின் இறந்த இரைப்பைக்குள் (அழுகிய மாங்கொட்டை) என்ற உணவு இருந்ததாக ஆராய்ச்சிகள் தெரிவிப்பதாக அறிவித்துக் கொண்டிருந்தார். என்னே இவர்களின் நாட்டுப்பற்று!!!

## 1998-2004 ஆண்டுகளில் பா.ஜ.க. அடித்த கொள்ளைகள்

இந்திய முற்போக்கு கலைகளின் ஆய்வு நிறுவனத்தில் நடந்த பகற்கொள்ளை.

இந்த நிறுவனம் ஹிமாச்சல பிரதேசம் சிம்லாவை தலைநகராகக் கொண்டது. 1965ல் நிறுவப்பட்டது. இந்த நிறுவனம் பின்வரும் துறைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும்.

சமூகவியல், மதம், கலாச்சாரங்கள், இயற்கையியல்!

இந்த நிறுவனத்திற்குத்தான் ஜி.சி. பாண்டே என்பவர் நியமனம் செய்யப்பட்டார். பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவுடன், இந்த நிறுவனத்தின் இயக்குனரும் அவரே. இந்த நிறுவனத்தின் செயலாளரும் அவரே!

இயக்குனர் நிறுவனத்தின் வளாகத்திலேயே தங்கிட வேண்டும். ஆனால் இவரோ தனது பதவி நாட்களில் 65 சதவீதம் நாட்களை ஊர் சுற்றிப் பார்ப்பதிலேயே செலவிட்டார். இவர் தனது பதவி காலத்தின் போது அடித்தக் கொள்ளை ரூ. 453.62 லட்சம். அதாவது ஐந்து கோடி ரூபாய். இஃது (2002, 2003) என்ற ஒரே ஆண்டில் அடித்த கொள்ளை. மாதம் ஒன்றுக்கு மூன்றரை லட்சம் ரூபாய். ஏழை பாளைகளின் நல்வாழ்வுக்குப் பயன் பட்டிருக்க வேண்டிய பணம் ஆராய்ச்சி என்ற பெயரால் அலங்கோலப்பட்டுள்ளது. இவர்களின் வாழ்வில் சுகம் கூட்ட செலவிடப்பட்டுள்ளது.

## 81 சதவிகிதம் வீண்

இந்த ஓராண்டில் இந்த ஆய்வு நிறுவனத்தின் செல்லப்பிள்ளை ஜி.சி. பாண்டே செலவழித்த பணங்களில் அதாவது இந்த நிறுவனத்தை நடத்திட செலவு செய்த

பணங்களில் 81 சதவீதம் செலவுகள் வீணானவை எனக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு தேர்தல் நெருங்கியவுடன் இந்த நிறுவனத்தில் ஆய்வுக்குச் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பன்மடங்காக உயர்ந்துள்ளது. வழக்கமாக இந்த ஆய்வு நிறுவனத்திற்கு 15 விண்ணப்பங்கள் வரும். இதில் 9 பேர் அல்லது 10 பேர் ஆய்வுக்காக தேர்ந்தெடுக்கப் படுவார்கள். இந்த நிறுவனம் தொடங்கப் பட்ட 1965 முதல் உள்ள நிலை இது.

ஆனால் 2004 ஆம் ஆண்டு 32 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவற்றில் 19 பேர் தேர்ந்ததெடுக்கப்பட்டனர். இப்படி இரண்டு மடங்கு ஆய்வாளர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டதன் நோக்கம், பதவி பறிபோகுமுன் முடிந்தவரை தமது ஆட்களை நியமித்துவிட்டு வெளியேறிட வேண்டும் என்பதே!

வழக்கமாக ஆராய்ச்சியாளர்களை, முறையாக நியமிக்கப்பட்ட ஒரு குழுதான், தேர்ந்தெடுக்கும். ஆனால் 2004இல் ஜி.சி. பாண்டே மட்டுமே அத்தனை பேருக்கும் உத்தரவு போட்டார். வழக்கமாகப் பின்பற்றப்படும் விதிமுறைகள் நெறிமுறைகள் எதுவும் பின்பற்றப்படவில்லை.

2004 ஆம் ஆண்டு இவர்கள் தேர்ந்தெடுத்ததில் 19 பேரில் 8 பேர் நாஙகள் ஆராய்ச்சி மாணவர்களாக ஆகின்றோம் என விருப்பம் தெரிவித்து விண்ணப்பிக்கக் கூட இல்லை.

மொத்தம் இவர்களின் ஆட்சிக் காலத்தில் அறுபது ஆராய்ச்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவர்களில் ஆறு பேர் தாங்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டதற்கான எந்த ஆதாரத்தையும் தந்திடவில்லை. ஆனால், இவர்கள் சுமார் (11) பதினொரு லட்சம் (10,58,108) ரூபாயை செவு செய்ததாகக் கணக்குக் காட்டி பணம் பெற்றுள்ளார்கள்.

ஆய்வறிக்கைகள் ஆராய்ந்து கண்டு பிடிக்கப்பட்டவை என தாக்கல் செய்யப்பட்டவை அனைத்தும் தரம் தாழ்ந்தவை.

வழக்கமாக ஆராய்ச்சி முடிவுகளை நூலாக வெளியிடுவார்கள். அல்லது ஆய்வறிக்கைகளாக ‘அறிக்கை வடிவில் வெளிடுவார்கள். இந்த அறிக்கைகளை நூலாக வெளியிட்டால் அவற்றிலிருந்து வருமானங்கள் கிடைக்கும். இந்த நிறுவனத் திற்கு. ஆனால் இவர்கள் ஆட்சிக் காலத்தில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைகள் அனைத்தும் தரம் தாழ்ந்தவையாக இருந்தமையால் அவற்றை வெளியிட இயலவில்லை. 30 ஆய்வறிக்கை களை யார் கண்ணிலும் காட்டிட இயலாது என முடிவு செய்தார்கள். அந்த அளவுக்கு அவை உப்பு சப்பற்றவை.

## முஸ்லிம்களுக்கு இடமில்லை

இவர்கள் ஆட்சி செய்த காலங்களில் இந்த ஆய்வு நிறுவனத்தில் ஒரு முஸ்லிம் கூட அனுமதிக்கப்படவில்லை.

முஸ்லிம்களுக்கேது ஆராய்ச்சி அறிவு? என்று சிலர் எண்ணிடக் கூடும். இந்த நிறுவனத்தில் 1966 முதல் 1992 வரைக்கும் 22 முஸ்லிம்கள் தரமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு முடிசூடிச் சென்றுள்ளார்கள். இவர்களின் ஆய்வறிக்கைகள் வெளியிடப் பட்டுளளன. அவற்றிலிருந்து இந் நிறுவனத்திற்கு வருமானங்கள் வந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு முஸ்லிம் கூட ஆராய்ச்சிக்கு அனுமதிக்கவில்லை. தலித் மற்றும் பழங்குடி யினரும் புறக்கணிக்கப் பட்டார்கள். ஆறு ஆண்டுகளில் ஒரே ஒரு தலித்தைத்தான் ஆராய்ச்சிக்கு அனுமதித்தார்கள். கிருஸ்தவர் கள் நான்கு பேர், அனுமதிக்கப்பட்டார்கள். இப்போதைய ஆட்சியில் தலீத் ஆராய்ச்சி யாளர்களும், முஸ்லிம் ஆராய்ச்சியாளர்கள், ஒட்டு மொத்தமாகக் கல்வி நிறுவனங் களிலிருந்து வெளியேற்றப்படுகின்றார்கள்.

## ஆராய்ச்சி நிறுவனத்தில் மதவெறி

இந்த நிறுவனத்திலிருந்து வருடந் தோறும், டாக்டர் இராதா கிருஷ்ணன் நினைவுப் பேருரை ஒன்றுக்கு ஏற்பாடு செய்வார்கள். டாக்டர் இராதா கிருஷ்ணன் நமது முதல் குடியரசு தலைவர். சிறந்த தத்துவ வல்லுநர். சிறந்த கல்வியாளர். இந்நிகழ்ச்சியில் உரை நிகழ்த்துபவர்கள் சிறந்த ஆராய்ச்சி யாளர்களாகவோ, கல்வியாளராகவோ இருப்பார்கள். இதுதான் இந்த ஆய்வு நிறுவனத்தின் வாடிக்கை - வழிமுறை! நீண்ட நெடுங்காலமாக இஃதுபின்பற்றப்பட்டு வருகின்றது. எந்த நிலையிலும் அரசியல் வாதிகளை அழைத்துப் பேசச் செய்திட மாட்டார்கள்.

ஆனால் நமது பாசிஸ்ட்டுகள் முடி சூடிய நாள் முதல் ஹிமாச்சல பிரதேசத்து அரசியல் வாதிகளைக் கொண்டே இந்த கண்ணியமிக்க உரையை நிகழ்த்தச் செய்தார்கள். கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை? என்பதைப் போலவே இந்த நிறுவனத்தில் அனைத்தும் நிகழ்ந்தன.

அதே போல் இந்த ஆராய்ச்சி நிறுவனத்தில், கூட்டு ஆய்வுரைகளை நிகழ்த்துவது வழக்கம். இதற்காக இதர ஆய்வு நிறுவனங்கள் அல்லது பல்கலைக் கழகங்கள் இவற்றிலிருந்து பேராசிரிய பெருந்தகைகளை வரவழைப்பது வழக்கம். ஆராய்ச்சி நிறுவனங்களை கொள்ளையடிப் பதையே குறிக்கோளாகக் கொண்ட இந்தப் பரிவாரத்தினர் இந்த மதவெறி அமைப்புகளின் தொண்டர்களை வர வைத்து 'கீதோபதேசங் களை' நடத்தினார்கள். இப்படி ஆய்வுரை களில் கலந்து கொண்ட இதர நிறுவனங்கள், வேத, வித்யா பிரதிஸ்தான், ராஷ்ரிய்ய ஸேன்ஸ்கிரிட் சாஸ்தான் என்பனவாகும்.

வழக்கமாக இங்கே நிகழ்த்தப்படும் உரைகள் ஆராய்ச்சியாளர்களுக்குப் பயன் படும் அளவில் அரிய தகவல்களை அடங்கியவையாக இருக்கும். இதனால் இந்த உரைகளும் அச்சிட்டு வெளியிடப்படும்.

ஆனால் இந்தப் பாசிஸ்ட்டுகளின் ஆட்சியின் போது இவற்றில் நிகழ்த்தப்பட்ட உரைகள் பித்தலாட்டங்களாகவே இருந்தன. அவற்றை வெளியிட வேண்டாம் என்று இவர்களே முடிவு செய்து விட்டார்கள்.

இவர்கள் ஏற்பாடு செய்த உரைகள் இந்துத்துவாவைப் பிரச்சாரம் செய்யும் வகையில் மலிவான உரைகளாகவே அமைந்திருந்தன என்கின்றார். இந்த குளறுபடிகளை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிய டி. பாண்டோபாடியா!

இந்த ஆய்வு நிறுவனத்திலிருந்து நன்கொடைகளையும் வழங்கி இருக் கின்றார்கள். உண்மையில் இஃது நன்கொடைகளை வழங்கும் நிறுவனமல்ல. நன்கொடைகளைப் பெறும் நிறுவனம்.

இந்த ஆய்வு நிறுவனத்தை நிர்வகிக்கும் குழுவில் சிரீ கீர்த்தி ஜோஷி என்பவரும் இடம் பெற்றார். இவர் இந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் நிதியிலிருந்து ரூபாய் இரண்டு லட்சங்களை நன்கொடையாகத் தந்தார். இந்த நன் கொடையைப் பெற்ற நிறுவனம் அகில பாரதீய வேதா ரஷ்ஷின சமிதி. நன்கொடையின் நோக்கம், இந்த அமைப்பு அல்லது சமிதி ஓர் அகில் இந்திய வேதா மாநாட்டை நடத்த வேண்டும் என்பதே!

## ஆராய்ச்சிக்கு தட்சனை

இப்படி தங்களைச் சார்ந்த அமைப்புகளுக்கெல்லாம் ஆராய்ச்சி நிறுவனத்தின் பணதை அள்ளிக் கொட்டி இருக்கின்றார்கள்.

ஆய்வு நிறுவனத்தின் செலவில் ஒரு நான்கு லட்ச ரூபாய் இன்னொரு விதத்தில் விரயம். ஆமாம் மாநாட்டில் பங்கேற்ற புரோகிதர் களுக்கு தட்சணையாக இந்த நான்கு லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இதைப் போன்ற பல மாநாடுகளுக்கு (அத்தனையும் இந்துப் பரிவாரத்தின் கிளை அமைப்புகளின் மாநாடுகள்) இந்த ஆய்வு நிறுவனத்தின் பணம் இனாமாகத் தரப்பட்டுள்ளது. நமது காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர

சரஸ்வதியும் இப்படி தட்சணைகளைப் பெற்றதில் அபிஷேஹங்களைப் பெற்றதில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆதாரம்: பண்டோபாடிய அறிக்கை, FL August 12,2005)

இந்திய பண்பாட்டின் அஸ்திவாரத்தை அகழ்ந்தெடுக்கப் போகின்றோம் எனக் கூறி ஒரு திட்டத்தை வகுத்தார்கள். அந்தத் திட்டத்திற்கு ‘இந்திய பண்பாட்டைப் பற்றி ஆய்வு’ எனப் பெயர் சூட்டினார்கள். இதற்காக சுமார் இரண்டு கோடி ரூபாயை (1.80 டாலர்) ஒதுக்கினார்கள். ஆட்சியையும் காணவில்லை, ஒதுக்கிய பணத்தையும் காணவில்லை.

இப்படி எல்லா ஆராய்ச்சி நிறுவனங்களிலும் ஆராய்ச்சி அழிந்தது. அறிவிலிகள் வாழ்ந்தார்கள். அத்தனை பணத்தையும் எப்படி உட்கொண்டார்கள் என்பதைப் பற்றிய ஆராய்ச்சி இப்போது நடந்து கொண்டிருக்கின்றது.

தங்களது சொந்தப் பணத்தைச் செலவு செய்து ஆராய்ச்சிகளைச் செய்து அகிலத்து மக்கள் வாழ்ந்திடவகை செய்தார்கள் இஸ்லாம் ஆட்சி செய்த காலத்தில் வாழ்ந்த வளம் பெற்ற முஸ்லிம்கள். கோடிக்கணக்கான மதிப்புள்ள சொத்துக்களை அடிப்படைக் கல்வியிலிருந்து ஆராய்ச்சி நிறுவனங்களுக்குத் தானமாகத் தந்தார்கள். ஆராய்ச்சி கல்விவரை இலவசம் எனப் பறைசாற்றி, ஜாதி, மதம், நிலம், நிறம் என்று பாகுபாடுகளைக் கடந்து அறிவை வளர்க்க நிதி உதவிகளை வழங்கினார்கள் முஸ்லிம்கள். இந்த இஸ்லாம் உலகை வழி நடத்தும் காலம் மலரும் போதே அறிவுலகம் வெல்லும்.

**எம்.ஜி.எம்.**


**இப்போது பரபரப்பான விற்பனையில் படித்து விட்டீர்களா!**




**விலை : ரூ. 20.00**

**அ. மார்க்ஸ் அவர்களின்**

**டி.எம். உமர் பாரூக்**

**ஒரு தலித் போராளியின் வாழ்வும் அவர் காட்டிய வழியும்**

வெளியீடு :

**வேர்கள் பதிப்பகம்,**
52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887

# பாசிஸ்ட்டுகளின் பட்ஜெட்!

நமது பாசிஸ்ட்டுகள் தங்கள் நிதி நிலை அறிக்கையை, அதாவது பட்ஜெட் அறிக்கையை பிப்ருவரி 29, 2016 இல் தாக்கல் செய்தார்கள்.

இது இந்த இந்து பாசிஸ்ட்டுகளின் மூன்றாவது நிதிநிலை அறிக்கை!

அறிக்கையை நிதி அமைச்சர் அருண் ஜெய்ட்லி தாக்கல் செய்தார். இவர் கார்கள் மட்டும் 50 கோடி ரூபாய் அளவுக்கு வைத்திருக்கின்றார். இவரிடமிருந்து ஏழைகள் எதையும் எதிர்பார்த்திட இயலாது என்பதே உண்மை.


ஏழைகளுக்கு எதையும் செய்யவில்லை என்றாலும், அவர்களை அந்த வறிய நிலையிலேயே விட்டு விட்டிருக்கலாம். அவர்களைக் கொத்தி குதறிவிட்டார். இந்த வகையில் எடுத்துக்காட்டுகள் சிலவற்றை இங்கே தருகின்றோம்.

### தேசிய ஊரக வேலை வாயப்புத் திட்டம்
### NATIONAL RURAL EMPLOYMENT GUARANTEE SCHEME

இதனை 'NREGC' எனச் சுருக்கமாக அழைக்கின்றார்கள். இப்போது இதனை மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம் என அழைக்கின்றார்கள்.

இந்தத் திட்டத்தைப் பெறுவதற்கு மக்கள் நீண்ட நெடியதொரு போராட்டத்தை நடத்திட வேண்டியதிருந்தது. இதனை முதலில் தன்னார்வ குழுக்கள் தாம் தங்கள் கைகயில் எடுத்துப் போராடின 2008இல். அப்போதிருந்தே "வைகறை வெளிச்சம்" இந்த உணவு பெறும் உத்திரவாதத்தை ஏழைகளுக்கு வழங்கிட வேண்டும் என வலியுறுத்தி எழுதியும், வலியுறுத்தியும் வந்தது.

இந்த தன்னார்வ குழுக்களுடன் கைக்கோர்த்து நின்றது. அதில் முத்தாய்ப்பாக



வைகறை வெளிச்சம் இதழில் வெளிவந்த அட்டைப்படக் கட்டுரையைக் குறிப்பிட லாம்.

இந்த திட்டம் 2009 ஆண்டு அன்றைக்கு மத்திய அரசாய் வீற்றிருந்த காங்கிரஸ் கட்சியின் தலைமையிலான UPA அரசு கொண்டு வந்தது.

### திட்டம் வந்த சூழல்

1999 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை இன்றைய பாசிஸ்ட்டுகளின் முன்னோடிகள் பா.ஜ.க. ஆட்சிச் செய்து வந்தார்கள்.

அப்போது வட மாநிலங்கள் பலவற்றில் பட்டினிச் சாவுகள், மக்கள் பல நாட்கள் பட்டினிக் கிடந்துவிட்டு வேறு வழி இல்லாமல் காய்ந்த மாங்காய் கொட்டை களைத் தின்றிட வேண்டிய நிலைக்கு ஆளானார்கள். ஆனாலும் அரசிடமிருந்து எந்த நிவாரணங்களும் கிடைக்கவில்லை.

ஒரிசாவின் நாட்டுப்புறத்தில் இப்படி மாங்கொட்டைகளைத் தின்று இறந்தவர்கள் பற்றிய செய்தி நாட்டை உலுக்கியது. ஆனால் அன்றைக்கு ஆட்சி செய்து கொண்டிருந்த

வாஜ்பேயி அரசு, அந்த இறப்புகள் வேறு காரணங்களால் நிகழ்ந்தவை என்று ஜமுக்காளத்தில் வடிகட்டியப் பொய்யைச் சொல்லி மக்களை திசை திருப்ப முயன்றது.

வாஜ்பேயி தலைமையிலான மத்திய அரசு, மக்களைத் திசைத் திருப்புவதைப் பார்த்த தன்னார்வ குழுக்கள், பட்டினிச் சாவால் இறந்தவர்களின் உடல்களைப் பிரேத பரிசோதனைக்கு அனுப்பின. பிரதேப் பரிசோதனை நடக்கும், மருத்துவமனைக்கு பாசிஸ்ட்டுகள் பா.ஜ.க.வினர் விரைந்தார்கள். மருத்துவர்களை மிரட்டினார்கள். பிரதே பரிசோதனையில் இறந்தவர்களின் வயிற்றில் உணவு இருந்தது எனக் குறிப்பிட வேண்டும் என்றார்கள்.

என்னதான் மிரட்டல்கள், உருட்டல் கள் பாசிஸ்ட்டுகளிடமிருந்து வந்தாலும் பெரும்பாலான மருத்துவர்கள் தாங்கள் “மனிதர்கள்” எனக் காட்டி விடுவார்கள்.

அதே போல் ஒரிசாவில் பிரேத பரிசோதனையை நிகழ்த்தியவர்கள் பட்டினிச் சாவால் இறந்து போன அந்த மக்களின் வயிற்றில் உணவுப் பொருளாக ஊசிப் போன மாங்கொட்டைகள் இருந்தன எனக் குறிப்பிட்டிருந்தார்கள். இதை, அன்றைய நாவல் நாட்டுப் பிரதமர் வாஜ்பேயி (நம் நாட்டுக்குத் தொன்மை வாய்ந்த பெயர் நாவல்நாடு) அவர்கள், அந்த மக்களின் வயிற்றில் உணவுப் பொருள்கள் இருந்ததாக மருத்துவ குறிப்புகள் குறிப்பிடுகின்றன எனக் குறிப்பிட்டார்.

(இதனை அப்போது நாம் நடத்தி வந்த மனிதநீதி பாசறையின் வழி பட்டித் தொட்டி எங்கும் பரப்பி வந்தோம்.)

இது போன்ற பல காரணங்களால் பாசிச பாரதீய ஜனதா கட்சி, 2004 ஆம் ஆண்டில் மக்களால் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டது. அதே 2004ஆம் ஆண்டில், மன்மோகன் சிங் அவர்களின் தலைமையிலான காங்கிரஸ் கூட்டணி அரசு ஆட்சிக்கு வந்தது.

அப்போதும் பட்டினிச் சாவுகள் தொடர்ந்தன. இதனால் அடித்தட்டு மக்களுக்கு உணவு பெறும் உத்திரவாதம் வழங்கப்பட வேண்டும் என்ற போராட்டங் கள் தொடர்ந்தன. போராட்டங்கள் கருத்தரங்கங்கள் இவற்றால் காங்கிரஸ் அரசு இந்தப் பட்டினிச் சாவுகள் குறித்த ஆய்வு ஒன்றை நடத்திட முன்வந்தது. ஆய்வில் இந்தியாவில் 100 மாவட்டங்கள், மிகவும் அதிகமான வறுமைக்கும் வாட்டத்திற்கும் உள்ளாகி வருகின்றன. இதனால் இவர்களுக்கு குறைந்தபட்சம் 100 நாட்களுக்காவது வேலை வாய்ப்பு வழங்கிட வேண்டும். அவர்கள் வேலை செய்தாலும் செய்யாவிட்டாலும் வருடத்தில் 150 நாட்களுக்கு நூறு ரூபாய் வீதம் சம்பளம் கொடுக்க வேண்டும் எனவும் முடிவு செய்தது.

நாம் உட்பட பல தன்னார்வ குழுக்கள் இந்த கூலி 100 ரூபாயிலிருந்து ரூபாய் 150 ஆக உயர்த்தப்பட வேண்டும் என தொடர்ந்து வைத்த கோரிக்கையின் விளைவாக இந்தக் கூலி 150 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

அதே போல் நாம் அன்று முதல் இன்று வரை இந்தத் திட்டத்தை வெறும் 150 மாவட்டங்களுக்கு என்று மட்டும் நிறுத்திவிடாமல் இந்தியாவிலிருக்கும் 640 மாவட்டங்களுக்கும் நீடித்திட வேண்டும் எனக் கேட்டு வருகின்றோம். காரணம், நாட்டில் வக்கற்றோர், வகையற்றோர் குறைந்த பட்சம் பட்டினியால் மடிந்து போகாமல் இது பாதுகாக்கும் என்பதால்.

இதில் நாம் இஸ்லாமிய ஆட்சியை முன் மாதிரியாகக் காட்டி வருகின்றோம். இஸ்லாமிய ஆட்சியின் மிக முக்கியமான இலட்சியம், எல்லா மக்களுக்கும் நீதி கிடைக்க ஏற்பாடு செய்வது, உத்திரவாதமளிப்பது இதனை நீதியை நிலைநாட்டுதல் என அழைப்பார்கள்.

மக்கள் அனைவருக்கும் உணவு, உடை, உறையுள் இவற்றிற்கு உத்திரவாதமளிப்பது என்பது மக்கள் போராடினால் தான் வழங்கப்பட வேண்டும் என்பதல்ல.

இஸ்லாமிய அரசில் இவையெல்லாம் மக்களின் அடிப்படை உரிமைகள். ஆட்சியாளரின் ஆட்சித் தலைவரின் பொறுப்பு அது எத்தகையது என்பதை பின் வரும் அறிவிப்பு அறிவிக்கும்.

இஸ்லாத்தின் பரவலை பாரெல்லாம் கொண்டு சென்ற (கலீபா) இஸ்லாமிய அரசின் தலைவர், உமர் பின் அல் ஹத்தாப் (ரழி) அவர்கள் இப்படிப் பிரகடனப்படுத்தினார் கள்.

“என் ஆட்சியின் எல்லைக்குள் ஓர் ஆட்டுக் குட்டி இறந்து கிடந்தால், அதற்கும் நான் அல்லாஹ்விடம் பதில் சொல்லியாக வேண்டும்.”

“ACCOUNTABILITY” என்ற தனது செயல்களுக்கு யாரிடமாவது பதில் சொல்லிட வேண்டும் என்பது ஜனநாயகத்தில் மக்கள் இஸ்லாத்தில் இறைவன் அல்லாஹ்.

மக்கள் மறப்பார்கள், அதனால் ஆட்சியாளர்களின் செயல்களை அல்லது அது அப்படித்தான் என விட்டுவிடுகின்றார்கள். அல்லது அதுதான் தங்கள் விதி என வாளாவிருந்து விடுகின்றார்கள்.

அல்லது வேறு பாதையைக் காட்டி, வேறு சலுகைகளைக்காட்டி ஏமாற்றி விடலாம். அவர்கள் வாழ்க்கை ஓட்டத்தில் எல்லாவற்றையும் விட்டுவிடுவார்கள்.

மக்கள், தவறு செய்யும் ஆட்சியாளர் களையும் அதற்கு துணையாக நிற்கும் அரசு அதிகாரிகளையும் தண்டிக்கும் வழி வகைகள் அற்றவர்கள்.

ஆனால் இறைவன், மறப்பவன் அல்ல.

அவனுடைய தண்டனையிலிருந்து யாரும் தப்பிக்க இயலாது.

அணு அளவே ஆட்சியாளர் தீயதைச் செய்திருந்தால் அதற்கும் பதில் சொல்லிட வேண்டும். தண்டனையை பெற்றாக வேண்டும்.

அதே போல், அணு அளவே அவர் நன்மை செய்திருந்தாலும் அதற்கும் அவர் நற்கூலிகள் வழங்கப்படுவார்.

ஆகவே, இஸ்லாமிய ஆட்சி அமைப்பில் உணவு, உடை, உறையுள் நீதி இவை அனைத்தும் மக்களின் அடிப்படை உரிமைகள். எப்படி உணவு, உடை, உறையுள் இவற்றைப் பெறுவது அடிப்படை உரிமை யோ அதைப் போல் நீதியைப் பெறுவதும், எல்லோரும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதும் அடிப்படை உரிமை!

நாம் இஸ்லாத்தின் இந்த அடிப்படைத் தத்துவங்களை அப்போது 2004களில் உணவு பெறும் உரிமைக்காகப் போராடியவர் களிடம் எடுத்துச் சொன்னோம். அந்த அடிப்படையிலேயே அவர்கள் எடுத்த முயற்சிகளுக்குத் துணை நின்றோம்.

இறுதியில் அந்த உரிமையைப் பெற்றே விட்டோம்.

அதுதான் 2013 இல் இயற்றப்பட்ட சட்டம். ஆனால் அதற்கு 8 ஆண்டுகளுக்கு முனபே 2005ல் இந்த ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் செயலில் வந்தது. எடுத்த எடுப்பிலேயே காங்கிரஸ் அரசு இதற்கு ஒரு பெரும் தொகையை செலவிட்டது. 2009ஆம் ஆண்டு 51,000 கோடி ரூபாயை இதற்கு ஒதுக்கியது. அதாவது பட்டினிச் சாவுகள் தடுக்கப்பட்டன. 2009ல் நடந்த தேர்தலில் காங்கிரஸ் அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்ததற்கு முக்கியமான காரணம், இந்த ஊரக வேலை வாய்ப்புத் திட்டமும் அதற்கு ஒதுக்கிய நிதியும் அந்த நிதி மக்களைச் சென்றடைந்த வேகம். அதே போல் விவசாயிகளின் தற் கொலைகளைத் தடுப்பதற்கு விவசாயிகள் வங்கிகளில் வாங்கிய கடன்களை முற்றாகத் தள்ளுபடி செய்தது. அதற்காக, 70,000 கோடி ரூபாயையும் ஒதுக்கீடு செய்தது.

ஆனால் அடுத்து ஆட்சியைப் பிடித்த, பாரதீய ஜனதா கட்சியினர் பாசிசத்தைத்தான் வளர்த்தார்கள். அல்லாமல், பாரதத்தை வளர்க்கவில்லை. அத்தோடு இன்னொரு பாதகத்தையும் செய்தார்கள். காய்ந்த வயிற்றுக்குக் கஞ்சிவார்த்திடும் இந்தத் திட்டத்தை நையாண்டி செய்தார் இனப்படுகொலை புகழ் பிரதமர் மோடி. காங்கிரஸ் அரசு மக்களுக்குத் தந்த லஞ்சம்

என்றார் நாடாளுமன்றத்தில். (ஆதாரம் : Front Line, April1, 2016)

நையாண்டியோடு நிற்கவில்லை, அதற்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கிடும் போது, 38,500 கோடியை மட்டுமே ஒதுக்கினார். அதன் பின் ஓர் இமாலயப் பொய்யை அவிழ்த்துவிட்டார். இந்த ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு இதுவரை ஒதுக்கப்பட்ட தொகையில் இதுவே அதிகம். The Highest Ever எனப் பீற்றினார். கொலைகள், கொள்ளைகள் இவற்றை மட்டுமே அதிகமாக அறிந்திருந்த பாரதீய ஜனதா கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேஜையைத் தட்டி வரவேற்றார்கள்.

அன்று மாலையே இந்த ஊரக வேலை வாய்ப்புத்திட்ட நிகழ்வுகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த தன்னார்வ குழுக்கள் 2010-11 ஆம் ஆண்டுகளிலேயே காங்கிரஸ் அரசு 40,100 கோடியை ஒதுக்கி இருந்தது. இதனை நீங்கள் அறிந்திட மாட்டீர்களா? எனக் கேட்டார்கள். அதற்கு உலகமகாப் பொய்யர் அருண் ஜேட்லி இன்று வரை பதில் சொல்லவில்லை. இதனால் இஃதோர் 'ஜிம்லா' உலகமகாப் பொய் என அழைக்கின்றார்கள். (Source : Front LIne April 1, 2016)

## 2. இமாலயப் புரட்டு

தன்னார்வ குழுக்கள், அடுத்து ஓர் இமாலயப் புரட்டைக் கண்டு பிடித்தார்கள். அது, அடித்தட்டு மக்களின் வயிற்றை நனைக்க பயன்படும், இந்த திட்டத்திற்கு 2015-2016 ஆம் ஆண்டில் இதே நிதி அமைச்சர் அருண் ஜேட்லி ஒதுக்கிய தொகை ரூ. 34,000 கோடி.

இந்தத் தொகை களத்தில் பட்டினிக் கிடப்பவர்களுக்கு வேலைக்கு கூலியாக கொடுக்க போதவில்லை. இதனால் கூலி பாக்கி இருக்கின்றது. இப்படி பாக்கியாக அந்த ஏழைப்பாளைகளுக்கு அரசு தந்திட வேண்டிய தொகை பெப்ருவரி வரை 6000 கோடி. இந்த மார்ச்சு மாதத்தில் மேலும் ரூபாய் 3000 கோடி. அந்த எழைகளுக்குக் கூலி பாக்கி மொத்தம் ரூ. 9000 கோடி. அப்படியானால் அவர்கள் இந்த 2016-2017 ஆம் ஆண்டில் 47,500 கோடியை ஒதுக்கி இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் மொத்தமாக ஒதுக்கி இருப்பதோ 38,500 கோடிதான்.

இதனால் என்ன ஆகும் என்றால் அரசின் ஊரக வளர்ச்சி திட்டத்தில் வேலைக்கு வரும் மக்களுக்கு அரசு கூலி தராது. மக்கள், மீண்டும் பட்டினி, பட்டினி சாவு இவற்றின் கோரப்பிடியில் சிக்குவார்கள்.

இதையே வேறு சொற்களால் சொன்னால் அரசு வேலை வாங்கும் கூலி தராது. பட்டினிச் சாவால் ஒரு காலத்தில் பீடிக்கப்பட்ட மக்களுக்கு, அரசே கடன் பட்டு நிற்கும்.

அந்த மக்கள் மீண்டும் பட்டினியால் செத்தால், அவர்கள் வேறு காரணங்களுக் காகத் தற்கொலை செய்து கொண்டார்கள் என இந்தப் பொய்யர்கள் நாடாளுமன்றத்தில் கூசாமல் அறிக்கைத் தாக்கல் செய்வார்கள்.

குஜராத் இல் மோடியின் ஆட்சியில் நடந்த பல பட்டினி சாவுகளை தற்கொலை கள் என்றே மோடி பதிவு செய்தார். ஆகவே பட்டினிச் சாவுகளைத் தற்கொலைகள் எனப்பதிவு செய்வதில் இவர்கள் கைதேர்ந்த வர்கள்.


இன்றைய நிலையில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தை நம்பி நின்ற மக்களின் எண்ணிக்கை இப்போது 40 சதவிகிதமாகும். 60 சதவிகிதம் பேர் அரசின் மேலிருந்த நம்பிக்கையை (அதாவது தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்திரவாத திட்டத்தின் மேலிருந்த நம்பிக்கையை) இழந்து விட்டார்கள் எனத் தன்னார்வ குழுக்கள் கூறுகின்றன. (Source : Frontline : April1,2016)

காலப்போக்கில் இந்தத் திட்டத்தை ஏழைகளின் கும்பியை நிரப்பிக் கொண்டிருந்த இந்தத் திட்டத்தை மூடி விடுவார்கள்.

9000 கோடியை ஏழைகளுக்குத் தந்திடுவதில் 'பாக்கி' வைத்திருக்கும் அரசு அதானிகளுக்கும், அம்பானிகளுக்கும் (அதாவது பெரும் முதலாளிகளுக்கு) இதே பட்ஜெட்டில் ரூபாய் 18,000 கோடிக்கு வரிச் சலுகை முதல் பல்வேறு சலுகைகளை வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**எம்.ஜி.எம்.**

# எதிர் குரல்




மதிப்பிற்குரிய 'வைகறை வெளிச்சம்' ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம்,

ஏப்ரல் 2016 'வைகறை வெளிச்சம்' பக்கம் 66ல் வேர்கள் பதிப்பகம் 'மனம் திருந்திய குற்றவாளி அசீமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம்' நூல் வெளியிட்டுள்ள தகவல் இடம் பெற்றிருந்தது. மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். அது 'தி கேரவன்' 2014 பிப்ரவரி மாத இதழில் லீனா கீதா ரெகுநாத் அவர்கள் எழுதிய 'தி பெலீவர்'கட்டுரையின் தமிழாக்கமாக இருக்குமானால் அதன் தலைப்பில் 'மனம் திருந்திய குற்றவாளி' எனக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்காது என எண்ணுகிறேன். காரணம் அசீமானந்தா என்ற அந்த ஆர்.எஸ்.எஸ். மதவெறி அடியாள் தனது கொடூரக் கொலைச் செயல்களுக்கு வருந்தவே யில்லை என லீனா கீதா ரெகுநாத் மிகத் தெளிவாக எழுதியுள்ளார். இந்தக் கட்டுரையை நான் 'ஆர்.எஸ்.எஸ். மதவெறி அடியாள் அசீமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம்' என்ற தலைப்பில் 26.4.2014ல் தமிழாக்கம் செய்து எனது இணைய தளத்தில் வெளியிட்டேன். பின்னர் அந்தக் கட்டுரை 'புதுவிசை' என்ற காலாண்டு இதழில் வெளியிடப்பட்டது. 2016 ஜனவரியில் பொள்ளாச்சி எதிர் வெளியீடு வெளியிட்ட எனது நூலான 'இந்தியா எதை நோக்கி. . .?' யிலும் இடம் பெற்றுள்ளது.

வேர்கள் பதிப்பகம் தற்போது அந்த ஆங்கிலக் கட்டுரையை தமிழாக்கம் செய்து வெளியிடுவது மிகவும் வரவேற்கத் தக்கது. பாராட்டுக்கள். ஆனால் 'மனம் திருந்திய குற்றவாளி' என்ற வார்த்தைகளை மறுபரிசீலனை செய்வீர்கள் என நம்புகிறேன்.

**அன்புடன்,**

**செ. நடேசன்,**
**விஜய் ஆனந்த் பதிப்பகம்,**
**20 பாரதி இல்லம்,**
**திருப்பூர் ரோடு,ஊத்துக்குளி**
**ஆர்.எஸ். - 638 752.**
**திருப்பூர் மாவட்டம்.**

இதே கருத்தை பல வாசகர்கள் சுட்டிக்காட்டினார்கள். அடுத்த பதிப்பில் மாற்றிக் கொள்கின்றோம். சுட்டிக் காட்டியமைக்கு நன்றி.

நாம் வெளியிட்டது நீதிபதி முன் அசீமானந்தா தந்த வாக்குமூலம் அது தெகல்காவில் வந்தது. என்பதை மீண்டும் தெளிவுபடுத்துகின்றோம்.

கேரவான் இதழில் வந்தக் கட்டுரையை எழுத்தாளர் ஞானி. மொழிபெயர்த்து நூலாக வெளியிட்டிருந்தார். அதனை அதிக அளவில் வாங்கி நாமும் வினியோகித்தோம்.

**ஆசிரியர்**

# தமிழக மீனவர்களும் பிஜேபி-யின் துரோகமும்

தமிழக முனவர்கள் குறிப்பாக இராமேஸ்வரம் மற்றம் அதனைச் சுற்றியுள்ள மீனவர்கள் பல ஆண்டுகளாக இலங்கை கடற்படையினரால் கொல்லப்பட்டும், சிறைப்பிடிக்கப்பட்டும் கொடுமைப்படுத்தப் படுகின்றனர். இவர்களின் வாழ்வாதாரமான மீன்பிடி படகுகளை கடலிலேயே இலங்கை கடற்படையினரால் அழிக்கப்படுவதும் கைப்பற்றப்படுவதும் தொடர்ந்து நடந்து வருகிறது.

இந்த அவலத்தை தடுத்து நிறுத்தப் போவதாக தம்பட்டம் அடித்தது இந்துத்துவா கூட்டம். இதன் அரசியல் பிரிவான பி.ஜே.பி. என்ற இந்துத்துவா கட்சியின் தமிழ் மாநில தலைவர்களில் ஒருவரரான எஹச். ராஜா, தமிழக மீனவர்களுக்கு தொடர்ந்து துன்பங்களை அளிக்கக் கூடிய "இலங்கை அரசுக்கு பதிலடி கொடுக்க மோடியின் மததிய அரசு தயங்காது" என வீராப்பு வசனம் பேசினார். (ஆதாரம் : தி இந்து, ஜூன், 02,2014 மதுரை)

இதனை நம்பியிருந்த மீனவர் சமூகத்துக்கு பெரிய அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது. கடந்த ஆண்டு (2014) உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் மோடி அரசு தாக்கல் செய்த மனுவில் "தமிழக மீனவர்கள் போதை பொருள் கடத்து வதாகவும் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைவதாகவும், இதனால் மீனவர்களுக்கு ஏற்படும் பின்விளைவுகளுக்கு இந்திய கடலோர காவல் படை பொறுப் பேற்க முடியாது" என்று கூறிவிட்டது (ஆதாரம் : தி இந்து ஏப்ரல் 29,2015, மதுரை)

இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகும்! மேற்கண்ட மோடி அரசால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையால் தமிழக மீனவர்கள் கொந்தளித்தனர். "பாமனில் கடந்த ஆண்டு (2014) ஜனவரி மாதம் 30ம் தேதி நடைபெற்ற கடல் தாமரை போராட்டத்தில் பி.ஜே.பி. தலைவர் சுஷ்மா சுவராஜூம், ராமநாதபுரத்தில் கடந்த ஆண்டு (2014) ஏப்ரல் மாதம் 17ம் தேதி நரேந்திர மோடியும் மீனவர்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை மீறி மாறான நிலைபாட்டை பி.ஜே.பி. மத்திய அரசு கொண்டுள்ளது" என்று புட்டுபுட்டாக மீனவர்களுக்கெதிரான பி.ஜே.பி.யின் போக்கை விளாசினார் மீனவர் பிரதிநிதி அருளானந்தம். தொடர்ந்து மேலும் "தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்க கோரினால், பொறுப்பை தட்டிக் கழிப்பதுடன் இந்திய மீனவர்கள் கடத்தலில் ஈடுபடுவதாக உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசு கூறியிருப்பது ஒட்டுமொத்த மீனவர்கள் இனத்தையே குற்றப்பரம்பரையாக சித்தரிக்கும் அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்". மீனவர்கள் கடத்தலில் ஈடுபடுகிறார்கள் என்கிற குற்றச்சாட்டை. "இந்நாள் வரை இலங்கை, பாகிஸ்தான் வங்கதேசம் ஆகிய அண்டை நாடுகள் கூட கூறியது கிடையாது" என்றார். (ஆதாரம் : தி இந்து, ஏப்ரல் 29,2015 மதுரை)

மீனவ பிரதிநிதியின் அறிக்கைப்படி இலங்கையே இத்தகையே குற்றச்சாட்டை கூறாத போது மோடி பி.ஜே.பி. மத்திய அரசின் வாக்குமூலம் இந்திய மக்களின் கண்ணியத்தை குலைப்பதாக இருக்கிறது.

இலங்கை கப்பற்படை இந்திய கடற்பகுதிக்குள் நுழைந்து தமிழக மீனவர்களை தாக்கியதாக தகவல் வரவில்லை. இந்திய மீன்பிடி படகுகளில் ஜி.பி.எஸ். மற்றும் வி.எச்.எஃப் கருவிகள் உள்ளன. அதன் மூலம் எங்களுக்கு எந்த தகவலும் இல்லை" என்ற கருத்தையும் இணைத்தே தன் மனுவில் குறிப்பிட்டுள்ளது மோடி அரசு (ஆதாரம் - தினமலர் ஏப்ரல் 28, 2015, மதுரை)

ஜி.பி.எஸ். என்ற கருவி நாம் எவ்விடத்தில் இருக்கிறோம் என்பதை தெளிவாக காட்டுவதற்காக பயன்படுத்தப் படுகிறது. அப்படியிருக்கையில் மத்திய அரசின் கூற்றுப்படி இந்த ஜி.பி.எஸ். கருவி தமிழக மீனவர்களின் படகுகளில் பொருத்தப்பட்டிருக்குமானால், அவர்கள் எல்லை தாண்டியிருந்தால் இந்திய கப்பற்படைக்கு தகவல் கிடைத்திருக்கும்.

"தகவல் வரவில்லை" என்று சொன்னால் மீனவர்கள் எல்லை தாண்டவில்லை என்பது தான் பொருள். இப்பொருள் கொள்ளும்படியாக தான் மத்திய அரச மனு நமக்கு தெளிவுப்படுத்துகிறது.

இதற்கிடையில் பி.ஜே.பி. தலைவர்களில் ஒருவரான சுப்ரமணிய சுவாமி "தமிழக மீனவர்களின் மீன்பிடி படகுகளை சிறைப்பிடித்து வைத்து கொள்ளுமாறு இலங்கை அரசினை தூண்டி விடுகிறார்" (ஆதாரம் : தி இந்து, செப்டம்பர் 2,2014, மதுரை)

இந்த அழிச்சாட்டியம் "எரிகிற நெருப்பில் எண்ணையை ஊற்றுவது" போன்றதாகும். சுப்ரமணிய சுவாமி இந்திய குடிமகனா? அல்லது இலங்கை குடிமகனா? மேலும் சுப்ரமணிய சுவாமி ட்விட்டரில் "தமிழர் உரிமைகளுக்காக போராடுபவர்கள் அனைவரும் பொறுக்கிகள்" என்றே தான் தொடர்ச்சியாக எழுதி வருகிறார். (ஆதாரம் : தி ஹிந்து, ஜனவரி 26,2014, மதுரை)

இந்திய அரசின் சலுகைகளையும் உரிமைகளையும் அனுபவித்த வரும் பி.ஜே.பி.யின் சுப்ரமணிய சுவாமி இந்திய சொத்தான மீன்பிடி படகுகளை கைப்பற்றி வைத்துக் கொள்ளும் படி இலங்கை அரசுக்கு ஆலோசனை கூறுவது தேச துரோகமல்லவா?

தூத்துக்குடியில் எல்லைமீறி நுழைந்த ஒரு அமெரிக்க கப்பலை பறிமுதல் செய்து தண்டிக்கும் வலிமையுடைய நம் கப்பற்படை இலங்கை கடற்படையை கண்டு அஞ்சுவது ஏன்? இலங்கை கப்பற்படையை கண் காணிக்க தவறுவது ஏன்? அமெரிக்க கப்பலிடம் காட்டிய வீரத்தை இலங்கை கப்பற்படையிடம் காட்டாதது. மோடி அரசுக்கு தமிழக மீனவர்களின் மீதான காழ்ப்புணர்ச்சியையே காட்டுகிறது. விதவைகளும், அநாதைகளும் தமிழ் மீனவர் சமூகத்தில் ஏற்பட வேண்டும் என்கிற ஆசையா பி.ஜே.பிக்கு?

தமிழக மீனவர்களின் துன்பத்தை துடைக்க மனமில்லாத மோடி பி.ஜே.பி. அரசு சொல் ஒன்று செயல் வேறாக மீனவர்களுக் கெதிரான துரோக நிலைப்பாட்டை எடுத்து வருகிறது. அரசியலில் இந்த துரோக நிலைப்பாட்டை இரட்டை நிலைப்பாடு என்பார்கள். ஆனால் சமூக நிலைப்பாட்டில் தமிழக மீனவர்களின் வயிற்றில் அடிக்கும் இந்த நிலை துரோக நிலைப்பாட்டே ஆகும்.

இந்திய கப்பற்படையும் இந்திய கடலோர காவல்படையும் ராமஸ்வரத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. ஆனால ஒரு முறை கூட இவர்கள் இலங்கை கடற்படையிடம் இருந்து தமிழக மீனவர்களை காப்பாற்றியதில்லை. தமிழக மீனவர்களின் உயிர்க்கு பாதுகாப்பு தரும் வகையில் மத்திய அரசு தமிழக மீனவர்களுக்கு துப்பாக்கி வழங்க வேண்டும் என ஆதங்கத்துடன் கூறுகிறார் அத்தொகுதியின் எம்.பி. அன்வர் ராஜா. (ஆதாரம் : தி இந்து மார்ச், 20,2016 மதுரை)

இலங்கையோடு பேச்சுவார்த்தை நடத்தி மீனவர் பிரச்சனையை தீர்க்க வேண்டிய மத்திய அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது என்கிறார் ராமநாதபுரம் தொகுதி எம்.எல்.ஏ. ஜவாஹிருல்லாஹ். (ஆதாரம் : தி இந்து, ஜனவரி, 14,2016, மதுரை)


இந்துத்துவா கூட்டம் எப்போதுமே தமிழக மீனவர்களின் நலன்களுக்கு எதிராகத் தான் செயல்படும் என்பதையே இவர்களின் பல நடவடிக்கைகள் காட்டுகின்றன.

ஆதலால், இனி வரும் எல்லா தேர்தல்களிலும் பி.ஜே.பி.யை தமிழக மீனவர்கள் புறக்கணிக்க வேண்டும்.

# பாம்பு கடி (SNAKE BITE)

டாக்டர் எஸ். முஹம்மது அப்சல்

இந்தியாவில் சுமார் 330 வகையான பாம்புகள் உள்ளன. உலகில் சுமார் 3500 அறியப்படும் வகை பாம்புகள் உள்ளன. இதில் சுமார் 350 வகை விஷ தன்மை கொண்டவை. சுமார் 70 வகை விஷ பாம்புகள். இதில் 40 வகை நிலத்திலும் 30 வகை கடலிலும் உள்ளவை.



உலக அளவில் இந்தியாவில் விஷ பாம்புகள் கடி மரணங்கள் அதிகம் ஏற்படுகிறது. இந்தியாவில் வரும் சுமார் 2,00,000 பேர் விஷ பாம்பு கடிகளால் மருத்துவமனைகளில், சிகிச்சை பெறுகின்றார் கள். இதில் சுமார் 35,000 - 50,000 பேர் வரை மரணிக்கிறார்கள். இது மிகவும் குறைவாகவே கருதப்படுகின்றது. ஏனென்றால் பெரும்பாலானவர்கள் நாட்டு மருத்துவரிடம் செல்வதாலும், பல மரணங்கள் மருத்துவ மனை செல்லும் முன் நிகழ்வதாலும் அந்த மரணங்கள் முறையாக அறியப்படுவதில்லை.

இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலம் விஷ பாம்பு கடியில் முதலிடம் பெறுகிறது. வருடம் சுமார் 1,000 பேர் வரை பாதிக்கப்படுகிறார்கள். அம் மாநிலத்தை தொடர்ந்து மேற்கு வங்கம், உ.பி., தமிழகம், கேரளா போன்ற மாநிலங்கள் இடம் பெறுகின்றன.

நம் நாட்டில் பெரும்பாலான விஷ பாம்பு கடிகள் கட்டு வீரியன் (Common Trait), நல்ல பாம்பு (common Cobra), இராஜ நாகம் (King Cobra), கண்ணாடி வீரியன் (Russel's Viper), குழி வீரியன் (Hump Nose Big Viper), சுருட்டை வீரியன் (Saw Sealed Viper) போன்ற பாம்புகள் மூலம் ஏற்படுகிறது. இதில் கண்ணாடி வீரியன் மிகவும் விஷ தன்மை கொண்டது. வெப்பம் அதிகம் உள்ள மாதங்களில் பாம்புகளில் இருந்து அதிகம் விஷம் வெளியேறுகிறது.

கண்ணாடி வீரியன் பாம்பு (Russel's Viper) வயல் வெளிகளிலும், கரும்பு தோட்டங்களிலும் அதிகம் காணப்படும். இதன் விஷம் சிறுநீரகங்களை பாதிக்கும். கடித்த பகுதியில் வலி மற்றும் அதிக இரத்த கசிவு சில நிமிடங்களில் காணப்படும். கடித்த பகுதி முழுவதும் வீக்கம் சில மணி நேரத்தில் காணப்படும்.

கட்டுவீரியன் பாம்பு (Common Trait) கடி பெரும்பாலும் காலை வேளைகளில் நிகழ்கிறது. ஜுன் முதல் டிசம்பர் மாதங்களில் பெரும்பாலான கடிகள் நிகழ்கின்றன. இதன் விஷம் நல்ல பாம்பின் விஷத்தை விட 10 மடங்கு அதிகம் கொடியது. இதன் விஷம் நரம்புகளை பாதித்து செயலிழக்கச் செய்கிறது.

சுருட்டை விரியன் (Saw Scaled Viper) விஷம் இரத்தம் உறைவதை தடுக்கிறது (Clotting Abnormalities)

குழி வீரியன் பாம்பு (Hump Nose Big Viper) வெப்பம் மிகுந்த கடற்கரை பகுதிகளில் அதிகம் காணப்படும். இதன் விஷம் இரத்த அணுக்களை பாதிக்கும். இதனால் பல் ஈறுகள் மற்றும் சிராய்ப்புகளில் இருந்து இரத்த கசிவு ஏற்படும்.

நல்ல பாம்பு கடிகள் (Cobra) பகல் வேளைகளில் இருக்கும். இதன் விஷம், இதயத்தை பாதிக்கும் (Cardio Toxic) நரம்புகளை பாதிக்கும் (Neuro Toxic), இரத்த அணுக்களை பாதிக்கும் (Cyte Toxic). கடித்த பகுதியில் அதிகம் வலி காணப்படும். வீக்கம் 2முதல் 3 மணி நேரத்தில் ஏற்படும். பாதிப்புகள் தோன்ற, 1 முதல் 5 மணி நேரம் முதல் 19 மணி நேரம் வரை ஆகலாம்.

சாரைப்பாம்பு விஷ தன்மை இல்லாதது. ஒரு வித பயம் மற்றும் அதிர்ச்சியின் காரணமாக விஷமில்லாத பாம்பு கடிகளிலும் தலைச் சுற்றல், வேர்த்தல், படபடப்பு, Bradycardia, இரத்த அழுத்தம் குறைதல் (Hypertension) ஏற்படலாம்.

**பாம்பு கடித்தால் செய்ய கூடாதது**

1. கடித்த பகுதியை கீறி விஷயத்தை வெளியேற்ற முற்பட கூடாது. விஷம் இரத்த அணுக்களை பாதித்து உறையும் தன்மை குறைவதால் இரத்த கசிவு இதனால் அதிகரிக்கலாம்.

2. வாய் வைத்து விஷத்தை அகற்ற முற்படுவதன் மூலம் விஷம் அடுத்தவருக்கும் பரவலாம்.

3. விஷம் உடலில் பரவாமல் தடுக்க கட்டப்படும் Tornique மிகவும் இறுக்கமாக கட்டக்கூடாது.

4. வலி நிவாரண மாத்திரைகள் உட்கொள்ளக் கூடாது.

**பாம்பு கடித்தால் உடனே செய்ய வேண்டியது**

1. கடித்த பகுதியை ஸ்பிண்ட் (Splint) கிரிப் (Crepe Bandage) பாண்டேஜ் மூலம் கட்ட வேண்டும் (Immobilisation by Splint). இதன் மூலம் அதிக அசைவுகள் தடுக்கப்படுவதால், விஷம் விரைவாக பரவுவதை தடுக்கலாம்.

2. கடித்த பகுதியை இதய லெவலுக்கு இயதத்தின் மட்டத்திற்கு கீழே வைப்பது நல்லது.

3. நோயாளிக்கு நம்பிக்கை கொடுக்க வேண்டும். காலம் தாமதிக்காமல் விரைந்து அருகிலுள்ள விஷமுறிவு வசதியுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும்.


**நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?**




**விலை ரூ. 10 மட்டுமே**

**வேர்கள் பதிப்பகம்,**

52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887

# கற்காலம் – ஒரு வரலாற்றுப் பொய்

மூலம் : ஹாருன் யஹ்யா

தமிழில் : அபூஹாசின்

மிகத் தொன்மையான நாகரிகங்கள் உலோகங்களை பயன்படுத்தவில்லை. இரும்பு பயன்படுத்த தொடங்கிய காலம் கொஞ்ச நாட்களாகத்தான் இருந்து வருகின்றன.

### இந்தக் கூற்று உண்மை தானா?

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, இரும்பு, எஃகு மற்றும் இதர உலோகங்கள் கற்களை விட மிக விரைவில் ஆக்ஸிஜனேற்றம் பெற்று மக்கி விடுகின்றன. வெண்கலத்தை போன்ற சில உலோகங்கள் மற்ற உலோகங்களை விட ஆக்ஸிஜனேற்றம் பெறுவதற்கு அதிகமான காலத்தை எடுத்து கொள்வதால் மிக நீண்ட நாள் அது தன் இருப்பை வைத்து கொள்கின்றது. எனவே தோண்டி எடுக்கப்பட்ட வெண்கலத்தினால்தான் பொருட்கள் தோண்டி எடுக்கப்பட இரும்பை விட பழமையானதாக இருப்பது இயற்கையானதே.

மேலும் வெண்கலத்தை பயன்படுத்த கூடிய சமூகத்திற்கு இரும்பை பற்றிய அறிவு இருந்திருக்கவேயில்லை என்று கூறுவதோ, மற்ற உலோகங்களை அவர்கள் பயன் படுத்தவேயில்லை என்று கூறுவதோ சரியான அணுகுமுறை அல்ல.

டின், ஆர்சனிக் ஆண்டிமனி மற்றும் மிக சிறிய அளவிலான துத்த நாகம் இவற்றுடன் காப்பரை சேர்ப்பதன் மூலம் கிடைப்பதே வெண்கலம் ஆகும். வெண்கலத்தை தயாரிப்பவர், மேலே கூறப்பட்ட வேதியல் கனிமங்களை பற்றிய அறிவை கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும். இவை எந்த கொதி நிலையில் உருகும் என்ற அறிவையும் பெற்றிருக்க வேண்டும். இவற்றை உருக்கி உலோக கலவையை தயாரிப்பதற்கான சூளைகளும் அவர்களிடம் இருந்திருக்க வேண்டும்.

மிகப் பழமையான, கடினமான பாறைகளில் காப்பர் தாது, துகள்களாகவோ அல்லது (கிரிஸ்டலைன் வடிவங்களாகவோ) படிகங்களாகவோ கண்டெடுக்கப்படுகின்றன. இதை பயன்படுத்தும் சமூகம் கண்டிப்பாக காப்பரை துகள் வடிவில் கண்டுபிடிக்கும் அறிவை பெற்றிருக்க வேண்டும் காப்பரை பிரித்தெடுத்து நிலப்பரப்பில் கொண்டு வருவதற்கு சுரங்கங்களையும் அமைத்திருக்க வேண்டும். கல் அல்லது மரக் கருவிகளை கொண்டு இச்செயல்களை செய்ய முடியாது என்று இதிலிருந்து நாம் புரிந்து கொள்ளலாம்.

காப்பரை உருக்குவதற்கு அதை தீச்சுவாலையில் காட்ட வேண்டும். அதை உருக்கி, சுத்தப்படுத்துவதற்கு தேவைப்படும் வெப்பம் 1084.5 C சமச்சீரான அளவில் காற்றை செலுத்துவதற்கு ஒரு கருவியும் தேவைப் படுகிறது.

காப்பரை உபயோகப் படுத்தும் ஒரு சமூகம் அதை வெப்பப்படுத்து வதற்கு தேவைப்படும் சூளையையும் அதற்கான உபகரணங்களையும் அதாவது இடுக்கிகளையும் தயாரித்து இருக்க வேண்டும்.

காப்பரை உருவாக்குவதற்கான தொழில் நுட்ப கட்டமைப்பின் சுருக்கம் இதுவே. இது மிகவும் மென்மையான உலோகமாக இருப்பதால் இதனால் கூரிய முனைகளை அதிக நேரம் கொண்டிருக்க முடிவதில்லை.

டின், துத்தநாகம் மற்றும் சில பொருட்களுடன் காப்பரை சேர்த்து கடினத்தன்மை வாய்ந்த வெண்கலத்தை உருவாக்குவது என்பது மிக நுட்பமானது. ஏனெனில் ஒவ்வொரு உலோகத்திற்கும் வெவ்வேறான படிமுறைகள் தேவைப் படுகின்றன. சுரங்கத் தொழில், உலோக

கலவைகளை உற்பத்தி செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்ட சமூகங்கள் இதை பற்றிய தெளிவான அறிவை பெற்றிருந்தனர் என்ற உண்மையை யே நமக்கு இவை உணர்த்துகின்றன.

உலோகங்கள் பண்டைய காலங்களில் பயன்படுத்தப் படவில்லை என்று கூறும் பரிணாமவியலாளர்களின் கூற்றுக்கு முரண்ட பாடாகவே தொல்லியல் கண்டுபிடிப்புகளும் அமைந்துள்ளன.

100,000 வருடங்களுக்கு முந்தைய உலோகப் பாத்திரங்கள், 28 பில்லியன் வருடங்களுக்கு முந்தைய உலோக உருளைகள், 500 மில்லியன் வருடங்களுக்கு முந்தைய இரும்பு பானைகள், 270,000 வருடங்களுக்கு முந்தைய களிமண்ணில் காணப்படும் துண்டுத் துணிகள் (கிழிந்த ஆடைகள்) 1000 வருடங்களுக்கு முன் உருக்கப்பட்ட மக்னீசியம் மற்றும் பொட்டாசியம் ஆகியவற்றின் படிமங்கள் தக்க சான்றுகளாக அமைந்துள்ளன. பரவலாக கண்டுபிடிக்கப் பட்ட இப்படிமங்கள் கற்காலம், வெண்கல காலம், இரும்புக் காலம் என்ற வகைப்படுத்துதலை தரைமட்டமாக்கியது. இம்மாதிரியான கண்டுபிடிப்புகளை அதிகமான அறிவியல் இதழ்கள் பிரசுரித்த போதிலும் இவை பெருமளவில் பரிணாமவியலாளர்களால் புறக்கணிக்கப் பட்டன அல்லது, அவற்றை அருங்காட்சி யகங்களில் இருந்து மறைத்து வைக்கப் பட்டன. மனித இன வரலாற்றை பற்றிய பரிணாமவியலாளர்களின் அற்புதமான கதைகள், உண்மைகளை பின்னுக்கு தள்ளிவிட்டு முன்னிறுத்தப்பட்டன.

## வரலாறு முழுவதும் நம்பிக்கையாளர்கள் நாகரீகமான வாழ்க்கை வாழ்ந்துள்ளனர்

வரலாறு முழுவதும், நேர்வழியின் பக்கம் மக்களை அழைப்பதற்காக இறைவன் தன்னுடைய தூதர்களை அனுப்பியுள்ளான். சிலர் அத்தூதர்களுக்கு கட்டுப்பட்டனர். இறைவன் உண்டு அவர் தனித்தவன், ஒருவன் என நம்பினர். மற்றும் சிலரோ ஏகத்துவத்தை மறுப்பதிலேயே நிலைத்திருந்தனர். மனிதன் இவ்வுலகில் படைக்கப்பட்ட நாளிலிருந்தே ஒரே இறைவனை நம்புவதிலும், அவனால் வழங்கப்பட்ட மார்க்கத்தின் அடிப்படையில் ஒழுக்க விழுமியங்களில் நம்பிக்கை கொண்டு வாழ்வதற்கு பழகியிருந்தனர். எனவே பரிணாமவியலாளர்கள் கூறும் பழங்கால மனிதர்கள் ஏகத்துவத்தை நம்பவில்லை என்று கூறுவது பொய்.

இறைவன் தன்னுடைய திருமறையில் இவ்வாறு கூறுகிறான்.

“(ஆரம்பத்தில்) மனிதர்கள் ஒரே இனத்தவராகவே இருந்தனர். (அவர்கள் நேரான வழியில் செல்வதற்காக நன்மை செய்பவர்களுக்கு) நற்செய்தி கூறும்படியும், (தீமை செய்பவர்களுக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும்படியும் அல்லாஹ் நபிமார்களை அனுப்பி வைத்தான். மேலும் அம்மனிதர்களுக்குள் ஏற்படும் கருத்து வேற்றுமைகளைத் தீர்த்து வைப்பதற்காக (சத்திய) வேதத்தையும் அருளினான். இவ்வாறு தெளிவான அத்தாட்சிகள் (உள்ள வேதம்) வந்ததன் பின்னர் அதனைப் பெற்றுக் கொண்ட அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட பொறாமையின் காரணமாகவே (அந்த சத்திய வேதத்திற்கு) மாறு (செய்ய முற்)பட்டனர். ஆயினும் அவர்கள் மாறுபட்டு (புறக்கணித்து) விட்ட அந்த சத்தியத்தளவில் செல்லும்படி நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ் தன் அருளைக் கொண்டு (நேர்) வழிக் காட்டினான். இன்னும் (இவ்வாறே) தான் விரும்பியவர்களை அல்லாஹ் நேரான வழியில் செலுத்துகிறான்”

**(திருக்குர்ஆன் 2:213)**

அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் (நம்முடைய) தூதர் வராத எந்த வகுப்பாரும் (பூமியில்) இருக்கவில்லை.

**(திருக்குர்ஆன் 35:24)**

இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்

**தொடரும். . .**

# வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள், மு. குலாம் முஹம்மத் | ரூ. 25.00 |
| 8. | மால்கம் எக்ஸ் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 202 | ரூ. 90.00 |
| 17. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மது பக்கம்-163 | ரூ. 110.00 |
| 18. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம்மது, பக்கம் -143 | ரூ. 90.00 |
| 19. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 20. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 21. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 22. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 23. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 24. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மது பக்கம்:48 | ரூ. 30.00 |
| 25. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓர் சகாப்தம், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 26. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 27. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 28. | இஸ்லாமும் விஞ்ஞானமும் | ரூ. 70.00 |
| 29. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 60.00 |
| 30. | இஸ்லாமும் பெண்களும் | ரூ. 70.00 |
| 31. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? | ரூ. 70.00 |
| 32. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? | ரூ. 30.00 |
| 33. | 26/11 -நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 34. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் | ரூ. 20.00 |

**வேர்கள் பதிப்பகம்,** 52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

தொடர்ப்புக்கு : 8148129887

# இனப்படுகொலை புகழ் நரேந்திர மோடிக்கு சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருது!

மோடி பேசுவதெல்லாம் ஏழைகளைப் பற்றித்தான். ஆனால் அவர் அள்ளிக் கொட்டுவதெல்லாம் அதானிகளுக்கும், அம்பானிகளுக்கும்தான். அதவாது பணமுதலைகளுக்குத்தான். அவர் தாக்குவதுதான் ஏழைகளை.

டெல்லிப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்தவர் கண்ணையா குமார். அவர் ஓர் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர். அங்கன் வாடியில் வேலை செய்யும் அவரது தாயாருக்கு வெறும் 3000 ரூபாய் குடும்ப வருமானம்.

அவரைத்தான் வளைத்து வளைத்து தாக்கிக் கொண்டிருக்கின்றார் மோடியும், மோடியின் ஆட்களும். பல பொய் வழக்குகளைப் புனைந்து கொண்டிருக்கின்றார் கன்யைா குமார் மீது.

மோடி தான் ஏழைகளுக்காகவே வாழ்ந்து கொண்டிருப்பதாகச் சொல்லுகின்றார். ஆனால், அவர் அணியும் சூட் மட்டும் 15 லட்சம். அதை யாரும் திருடிச் சென்று விடுவார்களோ என்ற அச்சத்தில் “கோட்” முழுவதும் ‘NAMO’நமோ நமோ அதாவது நரேத்திர மோடி என்று எழுதி இருந்தார்.

இவர் சிங்கப்பூரில் இறந்த லீகுவான் லீ இன் இழவு வீட்டுக்கு அதாவது சாவு வீட்டுக்கு போயிருந்த போதும், இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை ஆடையை மாற்றிக் கொண்டிருந்தார்.

### தாலியும் தங்கமும்

கடந்த பட்ஜெட்டில், நடுத்தர வர்க்க மக்களின் பிராவிடெண்ட் ஃபண்ட் இல் கை வைத்தார். அதற்கும் வரி விதித்தார். பின்னர், மக்கள் தொடர்ந்து மேற்கொண்ட போராட்டங்களுக்கு பின் வரியை ரத்து செய்தார்.




இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் தங்கம் வாங்கினால் அவர்கள் வருமான வரி அட்டையின் எண்ணைக் குறிப்பிட வேண்டும் என்றார்.

அதாவது அவர்கள் வருமான வரி செலுத்துவோர் வட்டத்திற்குள் வந்து விட வேண்டும் என்றார்.

தங்கம் கிராம் 2800 ரூபாய்க்கு மேல் விற்பனையாகின்றது. ஒரு பவுன் 23,000 ரூபாய் செய்கூலி சேதாரம் என ஒரு பவுனை 25,000

ரூபாய்க்கு கொண்டு வந்துவிடுகின்றார்கள்.

ஏழைகள் தங்கள் குமரிகளுக்கு திருமணம் செய்து வைத்திட குறையாமல் 15 முதல் 20 பவுன் வரை வாங்கிட வேண்டியதிருக்கின்றது. இந்தப் பணம், அந்தப் பெண் குழந்தை பிறந்தவுடனேயே சேர்க்கின்ற பணம். கடைசி காலத்தில் திருமணம் நெருங்கும் போது கந்து வட்டிக்கும் வாங்குகின்றார்கள். இப்படி சேகரித்து நகை கடைக்கு வந்தால், வருமான வரி வளையத்திற்குள் நீங்கள் வந்துவிட வேண்டும் என்றால் அவர்கள் என்ன செய்வார்கள்?

தங்கத்தின் விலை கிடு கிடு என்றேறிக் கொண்டிருக்கின்றது. ஏழைப் பாளைகள் அண்ட முடியாத அளவுக்கு உயர்ந்து கொண்டே போகின்றது.

விவசாயத்தில் பெரும் நஷ்டங்களுக்கு உள்ளாகி நிற்கும் விவசாயிகள் தங்கத்தின் பக்கம் செல்ல முடிவதில்லை. கேட்டால் தங்கத்தின் விலை எங்கள் கட்டுப்பாட்டிற்குள் இல்லை. மாறாக, அது சர்வதேச சந்தையில் டாலரை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றது என்கின்றார்கள்.


ஆனால் இப்போது இவர்கள் கலால் வரியை உடன் சேர்த்து விலையை இன்னும் அதிகரிக்கச் செய்துவிட்டார்கள்.

இதனால் தங்கம் வியாபாரம் பாழ்பட்டுப் போய் தங்க வியாபாரிகளே வீதிக்கு வந்து போராடும் நிலையை ஏற்படுத்தி விட்டார்கள். என்னே இவர்களின் முன்னேற்றம்.

இவர்களுக்கு முன்னேற்றம் என்பது பாசிசத்தின் முன்னேற்றம் தான். இவர்களைச் சுற்றி இருக்கும் சில பண முதலைகளின் முன்னேற்றம் தான். இந்த அநியாயங்களுக் கெதிராக ஆர்த்தெழுவோம்.

மக்களே ஒன்று சேருங்கள்! பாசிசத்தை மாயுங்கள், பாரதத்தைக் காப்பாற்றுங்கள்.

**எம்.ஜி.எம்.**


விலை ரூ. 200 மட்டுமே

**இப்போது பரபரப்பான விற்பனையில்**




விலை ரூ. 225 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொடர்புக்கு : 8148129887**

# கண்ணைய்யா குமாரின் நாக்குக்கு 5 லட்சம்! உயிருக்கு 11 லட்சம்! பாசிசத்தின் பயங்கரம்!



உண்மையைச் சொன்னால் பச்சையான பாசிசத்திற்கும் ஆளாக்கப் படுவர்கள் தலித் பெருங் குடி மக்கள்தாம். அவர் களின் உயிருக்கும் உடைமைக்கும் ஏற்பட்ட ஆபத்துக் களை இப்படிப் பட்டிய லிடலாம்.

1. கண்ணைய்யா குமார் என்பவர் பிரசித்தி பெற்ற டெல்லி பல்கலைக்கழகத்தில் ஓர் ஆராய்ச்சி மாணவர். ஆனால் தலித். தலித் மாணவன் ஒருவன் ஆராய்ச்சிப் படிப்பில் அதாவது முனைவர் படிப்பு அளவுக்கு முன் னேறுவதா? என்பது ஆதிக்க ஜாதியைச் சார்ந்த அனைவரும் எழுப்பும் கேள்வி.

இந்தக் கேள்வியை வெளிப்படையாக கேட்டிட இயலாத ஆதிக்க ஜாதியைச் சார்ந்தவர்கள், அதனை சூழ்ச்சிகளில் காட்டினார்கள். அந்த மாணவரை தேசத் துரோகி, என முத்திரைக் குத்திட முனைந்துள்ளனர். அதற்கு சாக்காக அவர் அப்சல் குருவை தூக்கிலே போட்ட பெப்ருவரி 9ஆம் நாள் நடந்த கலாச்சார நிகழ்ச்சியில் கலந்து கொண்டதை பயன்படுத்திக் கொண்டனர்.

அந்த நாள் அதாவது பெப்ருவரி 9ஆம் நாள் நாடாளுமன்ற தாக்குதலில் குற்றம் சுமத்தப்பட்ட அப்பாவி அப்சல் குருவை, தூக்கிலே போட்ட நாள். அதைப் பயன்படுத்தி கண்ணைய்யா குமார் மீது தேசத்துரோக வழக்குப் போட்டார்கள். சிறைபிடித்தார்கள் இறுதியின் பிணை கொடுத்தார்கள். கண்ணைய்யா குமாரின் உரையை காரணங்காட்டித்தான் அவர் மீது அத்தனை வழக்குகளையும் புனைந்தார்கள்.

அவர் ஆற்றிய உரையில் தேசத்திற்கு துரோகம் விளைவிக்கும் அளவில் எதுவுமில்லை. மாறாக அஃதோர் அற்புதமான கருத்துரை. அதை வைகறை வெளிச்சம் மார்ச்சு 2016 இதழில் வெளியிட்டிருந்தோம்.

உண்மையில் கண்ணைய்யா குமாரின் உரைகள், முதிர்ச்சியும் சிந்தனை தெளிவும் கொண்டவையாக அமைந்தன என்பதைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்றாக உணர்ந்தது.

### நாக்கை அறுத்தால் ஐந்து லட்சம்

ஆனால், பாசிஸ்ட்டுகள் தொடர்ந்து தங்கள் பயங்கரவாதங்களையும், வன்முறை களையும் கட்டவிழ்த்திட்டார்கள்.

அதில் பாரதீய ஜனதா கட்சியின் இளைஞர் அணியைச் சார்ந்த குல்திர் வார்ஷிணி என்பவர் கண்ணைய்யா குமாரின் நாக்கை அறுப்பவர்களுக்கு ரூபாய் ஐந்து லட்சம் தருவேன் என டெல்லியின் நிமிர்ந்த சுவர்களிலெல்லாம் சுவரொட்டிகளை ஒட்டி இருந்தார்கள். (Source : The Hindu, New Delhi, March 6, 2016)

பகிரங்கமாக வன்முறைகளைத் தூண்டும் இந்த சுவரொட்டியை ஒட்டியவர் மீது எந்த நடவடிக்கையுமில்லை. அவர் மீது சுவர்களை அசிங்கப்படுத்தினார் என்று மட்டும் ஒரு வழக்கு பதிவு செய்யப் பட்டுள்ளது. (New Delhi Prevention of Defacement of Property Act.) என்ற சட்டத்தின் கீழ் சாதாரண வழக்கு.

டெல்லி காவல் துறை மத்தியிலே ஆட்சிச் செய்யும் பாரதீய ஜனதா கட்சியின் கீழ் இருக்கின்றது என்பதை நாம் அறிவோம்.

பத்திரிகைகளும், சமூக ஊடகங்களும் இந்த விவகாரத்தை மக்கள் மன்றத்தில் கொண்டு வந்ததால் ஏதோ பாரதீய ஜனதா கட்சி யிலிருந்து அவர் மீது நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்தார்கள். 6 வருடம் கட்சியிலிருந்து நீக்கியதாகவும் அறிவிப்புகள் வந்தன.

அதற்கு சுவரொட்டிகளை ஒட்டியவர், கட்சி என் மீது எடுக்கும் நடவடிக்கைகளைப் பற்றி கவலை இல்லை, கண்ணைய்யா குமாரின் நாக்கை கொண்டு வாருங்கள் ஐந்து லட்சம் தருகின்றேன் என்றே கர்ஜித்துக் கொண்டி ருந்தார். மாறாக காவல் துறை நடவடிக்கை எடுத்திருந்தால் இவர் இப்படிக் கர்ஜித் திருப்பாரா என்பது ஐயமே!

### சுட்டால் 11 லட்சம்

அடுத்து, சங்கப்பரிவார கும்பலைச் சார்ந்த ஆதார்ஷர்மா என்பவர் டெல்லியின் வீதிகளில் இப்படி சுவரொட்டிகளை ஒட்டினார். “கண்ணைய்யா குமாரை சுட்டுக் கொலை செய்பவருக்கு ரூபாய் பதினொரு லட்சம் தருவேன்” என அதில் குறிப்பிட்டி ருந்தார்.

இந்தச் சுவரொட்டியை ஒட்டியவர் மீதும், எந்த நடவடிக்கையுமில்லை. சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட நிலையிலேயே நீண்ட நாள்கள் இருந்தன. இதற்கும் டெல்லி போலீசார், சுவர்களை அசிங்கப்படுத்தி விட்டார் என்று மட்டும் வழக்குப் பதிவு செய்தார்கள்.

### தலித் நீதிபதி நாட்டை விட்டு வெளியேற ஒரு லட்சம்

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சி.எஸ். கர்ணன், தனக்கு இழைக்கப்படும் பல அநீதிகளையும் அவமானங்களையும் தொடர்ந்து பட்டியலிட்டு வருகின்றார். அவற்றை நாம் வைகறை வெளிச்சம் இதழில் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றோம். இவற்றை அவர் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆணையத்திற்கும் அனுப்பி இருக்கின்றார்.


அண்மையில் தனக்கு ஏற்பட்ட அநீதிகளுக்கு எதிராக அவர் குரல் கொடுத்த போது விரக்தியின் விளிம்பிற்கே போய்விட்டார். இது ஜாதி வெறி பிடித்த நாடு. ஆகவே நான் இந்த நாட்டிலிருந்தே வெளியேறிட விரும்புகின்றேன் என்றார்.

உடனேயே இந்து மக்கள் கட்சி என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலையை Cheque -ஐ அனுப்பி வைத்து, நீங்கள் நாட்டை விட்டு வெளியேறுங்கள். அதற்காக இந்தப் பணத்தை வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் பயண ஏற்பாடுகளை முடித்தவுடன் பயணச் சீட்டிற் கான பணத்தை ஏற்பாடு செய்கின்றோம் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டி ருந்தார்கள். (**TNIE**)

இது எங்கோ டெல்லியில் நடந்ததல்ல. மாறாக நடந்தது தமிழ்நாட்டில்தான். இந்தக் கடிதத்தின் மீது எந்த நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

தொடர். . .

## முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?



# சொந்த மண்ணிலேயே பொலிவிழந்த கிறிஸ்தவம்!

**- அபுல் ஹசன் அலீ நத்வீ**

**மொழிபெயர்ப்பு: அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ**

போர்க்களத்தில் ரோமை வீழ்த்திய கிறிஸ்தவம் மதச்சண்டையில் தோற்றது. மாபெரும் அரசாட்சியைப் பெற்ற கிறிஸ்தவர்கள் கம்பீரமான மார்க்கத்தை இழந்தார்கள்.

சிலை வணக்கத்தை கடைப்பிடித்த ரோம் ஈஸா (அலை)வின் மார்க்கமாம் கிறிஸ்தவத்தை உருமாற்றிவிட்டது. கிறிஸ்தவர்களும் இந்த உருமாற்றத்தில் ஈடுபட்டார்கள்.

கிறிஸ்தவத்தின் மானத்தைக் காப்பாற்றியவராகவும் அதன் கொடியைத் தூக்கிப் பிடிப்பவராகவும் திகழ்ந்த மகா கான்ஸ்டன்டைன் தான் கிறிஸ்தவத்தை வெகுவாகச் சிதைத்தார்.

இதே ஜான் வில்லியம் டிராபர் கூறுகிறார் : ரோம ராஜ்யத்தின் உயர் பதவிகளிலிலும் உத்தியோகங்களிலும் நயவஞ்சகர்கள் பலர் வீற்றிருந்தனர்.

ஒரு நாள் கூட கிறிஸ்தவனாக வாழாத கிறிஸ்தவத்தைக் கடைப்பிடிக்காத, கிறிஸ்தவனைப் போல நடித்துக் கொண்டிருந்த இந்த நயவஞ்சகர்கள் கிறிஸ்தவத்தில் சிலை வணக்கத்தையும் இணை வைப்பையும் புகுத்தி விட்டார்கள்.

மன்னன் கான்ஸ்டன்டைன் மட்டும் என்னவாம்! அநியாயத்திலும், அட்டூழியத்திலும் தன் ஆயுளைக் கழித்தான். தமது வாழ்வின் இறுதியில் சொற்ப காலம்தான் ஆலயங்களின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டான். (கி.பி. 337)

கான்ஸ்டன்டைன் - ஐ ஆட்சியில் அமர்த்தும் அளவுக்கு வீரம் மிக்கவர்களாக இருந்த கிறிஸ்தவர்கள் சிலை வணக்கத்தை வேரோடு பிடுங்கி எறிந்திடவோ வீழ்த்திடவோ அவர்களால் இயலவில்லை. இதனால் கிறிஸ்தவத்தின் தூய கொள்கைகள் கலப்படப் பொருளானாது. கிறிஸ்தவமும்

சிலைவணக்கமும் சரிசமமாகக் கலந்து புதிய மதம் ஒன்று உருவானது.

இங்குதான் இஸ்லாம் கிறிஸ்தவத்திலிருந்து வேறுபட்டு நிற்கிறது. தனது முழு எதிரியான சிலை வணக்கத்தை இஸ்லாம் முழுவதுமாக ஒழித்தது. தனது கலப்பற்ற தூய கோட்பாட்டை பாரெல்லாம் பரப்பியது.

அதிகாரத்தில் வீற்றிருந்த மன்னன் உலக வாழ்க்கைக்கு அடிமையாகி விட்டான். அவனுடைய மதக் கோட்பாடுகள் கவைக்கு உதவாதவையாக இருந்தன.

அவன் தன்னுடைய சுயநலனுக்காகவும் மோதிக் கொண்டிருந்த (கிறிஸ்தவம், இணைவைப்பு) இரு அணிகளின் நலனுக்காகவும் அவ்விரு அணிகளையும் இணைத்து ஒன்றாக்கி விட வேண்டும் என்று நினைத்தான்.

கொள்கைப் பிடிப்புள்ள கிறிஸ்தவர்களும் அவனுடைய இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

ஒரு வேளை அவர்கள் இப்படிக் கூட நினைத்திருக்கலாம். பழையை இணை வைப்புக் கோட்பாட்டை உள்வாங்கி அதில் கலந்து புதிய மதம் செழித்து வளரும் போது தூய கிறிஸ்தவம் சிலை வணக்கத்தின் அசிங்கத்திலிருந்தும், அழுக்கிலிருந்தும் பத்திரமாக மீண்டு விடும் என்று எண்ணிக் கொண்டு அரசனின் திட்டத்தை எதிர்க்காமல் இருந்திருப்பார்கள் போலும்.

**(ஆதாரம் : அதே நூல் பக்கம் 40-41)**

## பாதிரிகளின் எண்ணிக்கை அதிகமானது

சிலை வணக்கக் கோட்பாட்டின் கலப்படத்தால் சீரழிந்து உருக்குலைந்து போன கிறிஸ்தவம் தன் ஆன்மாவையும், அழகையும், பொலிவையும் இழந்த கிறிஸ்தவம் சீரழிந்த ரோமர்களின் வாழ்வில் எந்த மாற்றத்தையும் எற்படுத்த இயலாம லிருந்தது. தூய்மையான அப்பழுக்கற்ற மார்க்க நெறியுடன் கூடிய புதுவாழ்வை மீட்டுத் தர சக்தியற்றுப் போய் விட்டது. ரோமின் வரலாற்றில் ஒரு மறுமலர்ச்சியான அத்தியாயத்தை துவக்கவும் இயலவில்லை.

மாறாக, கிறிஸ்தவம் தன் சுயத்தை இழந்தது. துறவுக் கோட்பாட்டை தனதாக்கிக் கொண்டது. ரோமர்களிட மிருந்து கிறிஸ்தவத்திடம் புகுந்த இந்தத் துறவுகோட்பாடு மனித இனத்துக்கும் அதன் நாகரீகத்துக்கும் பெரும் கேடாய் ஆனது.

கிறிஸ்தவத்துக்கள் புகுந்த இந்தத் துறவுக் கோட்பாடு ஒப்பீட்டாய்வின் எல்லைகளையெல்லாம் கடந்து கிறுக்கத் தனமாக விளையாடியது.

இதற்கு ஏராளமான உதாரணங்களைக் கூறமுடியும் என்றிருந்தாலும், History of European Morals எனும் நூலிலிருந்து கொஞ்சம் இங்கே கூறப்போகின்றேன், படியுங்கள்.

இல்லறவாழ்வைத் துறந்து திருமணம் செய்யாமல் வாழ்வோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போனது. இதோர் அரிய தொண்டு சீரிய பணி என்றெல்லாம் இந்தப் பாதிரிகளைப் பற்றி மக்கள் பேச ஆரம்பித்தனர்.

துறவுக் கோட்பாடு எந்த அளவுக்குப் பரவியிருந்தது. பாதிரிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையெல்லாம் துல்லியமாகக் கூறமுடியவில்லை. சரித்திர ஆசிரியர்கள் கூறும் சில தகவல்களை வைத்து அவர்களின் எண்ணிக்கையைக் கணிக்க முடிகிறது.

“ஈஸ்டர் பண்டிகை தினத்தில் ஐம்பதாயிரம் பாதிரிகள் திரண்டனர்.”

“கி.பி. நான்காம் நூற்றாண்டில் ஒரு பாதிரி ஐயாயிரம் பாதிரிகளைக் கண்காணித்து வந்தார்.”

“சராபீன் என்ற பாதிரி பத்தாயிரம் பாதிரிகளுக்குத் தலைமையேற்றார்.”

“நான்காம் நூற்றாண்டின் முடிவில் பாதிரிகளின் எண்ணிக்கை எந்த அளவுக்கு அதிகமாகிவிட்டதென்றால் எகிப்து நாட்டின் முக்கிய நகரங்களின் மக்கள் தொகை அளவுக்கு இருந்தது.”

இப்படியெல்லாம் வரலாற்றாசிரியர்கள் கூறுவதிலிருந்து பாதிரிகளின் எண்ணிக்கை பற்றி நாம் ஒரு முடிவுக்கு வர முடிகிறது.

**பாதிரிகளின் விநோதமான நடவடிக்கைகள்**

ஒருவன் எந்த அளவுக்கு தன் மேனியை வருத்திக் கொள்கிறானோ அந்த அளவுக்கு அவன் மேன்மைமிக்கவன். மதப் பிடிப்புள்ளவன் என்ற எண்ணம் இரண்டு நூற்றாண்டுகள் வரை அவர்களிடம் நிலவி வந்தது.

துறவிகளின் விசித்திரம் நிறைந்த நடவடிக்கைகளை வரலாறு வரைந்து வைத்திருந்தது.

Makarius என்றொரு பாதிரி. இவர் குப்பை மேட்டிலேயே ஆறுமாத காலம் உறங்கிக் கொண்டிருந்தாராம். இவரது திறந்த மேனியை விஷப்பூச்சிகள் கடித்துக் கொண்டிருந்ததாம். எப்போதும் இவர் இரும்புப் பொதிகளை சுமந்து கொண்டேதானிருப்பார்.

இவரின் நண்பர் Eusebivs என்ற பாதிரி இரண்டு இரும்புப் பொதிகளைச் சுமந்து திரிவாரம். மூன்று வருடஙகளாக பாழடைந்த கிணறு ஒன்றில் நின்று கொண்டே இருந்தாராம்.

St. John என்ற பாதிரி மூன்றாண்டு காலமாக உறங்காமல் அமராமல் ஒற்றைக் காலில் நின்று கொண்டே கடுந்தவம் புரிந்தாராம். தாங்க முடியாத களைப்பில் மட்டும் அருகிலுள்ள பாறையில் லேசாக சாய்ந்து கொள்வாராம்.

இன்னும் சில பாதிரிகளோ ஆடை என்ற ஒன்றை அணிவதே இல்லையாம். நீண்ட வளர்ந்த ரோமங்களால மறைவிடங்களை மறைத்துக் கொள்வார்களாம் ஆடு, மாடுகளைப் போல கைகளாலும், கால்களாலும் தான் நடப்பார்களாம்.

பெரும்பாலான பாதிரிகள் வனவிலங்கள் வதியும் குகைகளில் குடியிருந்தார்கள். வறண்ட கிணறுகளிலும் பிணங்களைப் புதைக்கும் இடுகாடுகளிலும் வாழ்ந்தார்கள்.

புற்பூண்டுகளையும் இலை தழைகளையும் உணவாக உட்கொண்டார்கள்.

மேனியைச் சுத்தமாக வைத்திருந்தால் ஆன்மா அசுத்தமாகிவிடும் என்றெண்ணி உடலுறுப்புக்களை கழுவுவது பாவம் என நினைத்தார்கள்.

அழுக்கோடும் விலங்குகளின் கழிவுகளோடும் உருண்டு புரண்டு அசுத்தமாக வாழ்பவரே மிகப்பெரும் துறவி. அவரே கடவுளுக்கு நெருக்கமானவர் என்று அவர்கள் நம்பினார்கள்.

St. Anthanasius என்ற பாதிரி சொல்கிறார் : அந்தோணி என்ற பாதிரி தம் வாழ்வில் எப்போதும் தம் இருகால்களைக் கழுவியதே இல்லையாம். அது பாவமாம்.

அப்ரஹாம் என்ற பாதிரி ஐம்பது ஆண்டுகாலமாக தமது முகத்திலும் கால்களிலும் தண்ணீரே படாமல் பார்த்துக் கொண்டாராம்.

அலெக்ஸாண்டர் என்ற பாதிரி பின்னொரு காலத்தில் சோகத்துடன் இப்படிச் சொன்னாராம், “என்னே ஒரு துர்பாக்கியம். முகத்தைக் கழுவுவதே தடை செய்யப்பட்ட பாவம் என்று முன்னர் கருதிக் கொண்டிருந்த நாம் இப்போது சர்வசாதாரணமாக குளிக்கவே செய்கிறோமே!”

இப்படி வேடிக்கையும் விநோதங்களும் நிறைந்தவையாக இருந்தன பாதிரிகளின் நடவடிக்கைகள். இன்னம் பாருங்கள் விநோதங்களை.

இந்தப் பாதிரிகள் நகரெங்கும் சுற்றித் திரிந்து கொண்டேயிருப்பார்கள். எங்கேனும் சிறுவர்கள் தென்பட்டால் அவர்களைத் தூக்கிக் கொண்டு பாலைவனத்துக்குள்ளேயும் தாம் குடியிருக்கும் பொந்துகளுக்குள்ளேயும் ஓடி விடுவார்கள்.

தாயின் மடியில் தவழும் பிள்ளைகளைக் கூட இவர்கள் விட்டதில்லை.

தூக்கிச் சென்று விடுவார்கள். தூக்கிச் சென்ற குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் துறவிகளாக வாழ்வதற்குரிய பயிற்சிகளைத் தருவார்கள்.

அரசால் இதைத் தடுக்க முடியவில்லை. பொதுமக்களும் அறிவு ஜீவிகளும் இதற்கு ஆதரவாகவே இருந்தனர். தாய் தந்தையை விட்டுப் பிரிந்து சென்று துறவிகளாக்கப் பட்டுவிட்ட பிள்ளைகளைப் போற்றிப் புகழ்ந்தனர். புனிதர் பட்டம் வழங்கினர்.

கிறிஸ்தவ வரலாற்றில் பேரோடும் புகழோடும் வாழ்ந்த பெரும் பெரும் பாதிரிகளெல்லாம் குழந்தைகளைக் கடத்திப் பாதிரிகளாக்குவதில் அதீதத் திறமை பெற்றவர்களாக இருந்தனர்.

St. Ambrose என்றொரு பாதிரி உண்டு. இவரைக் கண்டாலே தாய்மார்களெல்லாம் தமது பிள்ளைகளை வீடுகளுக்குள் வைத்துப்பூட்டி ஒளித்து வைத்துக் கொள்வார்கள்.

பிள்ளையைப் பெற்ற தகப்பன்மார்களும் தகப்பன் இல்லாத பிள்ளையின் பொறுப்பாளர்களும் தமது பிள்ளைகளை சொந்தம் கொண்டாட முடியாத நிலைமைதான் அங்கு இருந்தது.

இந்தப் பாதிரிகளும் மதத் தலைவர்களும் தமது விருப்பப்படி அந்தப் பிள்ளைகளை எப்படி வேண்டுமானாலும் நடத்த முடியும். அதைப் பெற்றவர்களால் கேள்வி கேட்க முடியாத நிலைதான் அப்போது இருந்தது.

(Source : Lecky, History of European Morals Chapter IX)

**தொடரும். . .**

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி**


**தமிழன்**

**தொலைக்காட்சியில்**

**தரீக்குல் குர்ஆன்**

**வாரந்தோறும்**

**செவ்வாய்க்கிழமை**

**இரவு 10.00 மணி**

**முதல் 10.30 மணி வரை**

**வைகறை வெளிச்சம்**

**துணை ஆசிரியர்**

**இல்யாஸ் ரியாஜி**

**திருக்குர்ஆன் விரிவுரை**

**நிகழ்த்துகிறார்**

**RSD வீடியோ நிறுவனம்**

**இந்நிகழ்ச்சியை**

**நடத்துகிறது.**

**காணத்தவறாதீர்கள்**

**தொடர்புக்கு :**

**காயல் தர்வேஷ்**

**9841898044**



Owned and published by M. Gulam Mohamed from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001. Editor M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.